யோ.சத்யன்



# அமுதனின் உலகம்

KARTLIN

# அமுதனின் உலகம்

KARTLIN

CENTRE FOR
CHILDREN'S HAPPINESS
JAFFNA
SERIAL No. 270
SECTION No. 09/13 / சிறு. கதை

யோ.சத்யன்



தேனுகா பதிப்பகம்

தேனுகா வெளியீடு - 4


உரிமை பதிவு


**'AMUTHANIN ULAGAM'**

Yoa. Sathyan
Children's Literature

Publishing Editor : Sutharaj

Thenukha Pathippagam
3/58, Anuradapura Road,
Puttalam.

| | | |
|---|---|---|
| T.Phone | : | 032 65965 |
| Fax | : | 032 66875 |
| First Edition | : | 2001 |
| Price | : | Rs. Two Hundred |
| Printed by | : | A J Prints, 44 Station Road, Dehiwela. |

**'அமுதனின் உலகம்'**
**யோ. சத்யன்**
**குழந்தை இலக்கியம்**

**பதிப்பாசிரியர் : சுதாராஜ்**

**தேனுகா பதிப்பகம்**
**58/3, அனுராதபுரம் வீதி, புத்தளம்.**

| | | |
|---|---|---|
| **தொலைபேசி** | : | **032 65965** |
| **தொலைநகல்** | : | **032 66875** |
| **முதற்பதிப்பு** | : | **2001** |
| **விலை** | : | **இருநூறு ரூபா** |
| **அச்சு** | : | **ஏ ஜே. பிரின்ட்ஸ், 44 புகையிரத நிலைய வீதி, தெகிவலை.** |

**தேனுகா பதிப்பகம்**

சிறுவர் மகிழ்வகம்
இல. 203/9, ஆசீர்வாதம் ஒழுங்கை
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

## யோ. சத்யன்

ருஷ்யாவில் உள்ள மக்கள் நட்புறவுப் (லுமும்பா) பல்கலைக்கழகத்தில் *(Russian Peoples Friendship University. (Lumumba)* இறுதி ஆண்டு மருத்துவத்துறை மாணவராகப் பயின்று கொண்டிருப்பவர் யோ.சத்யன்.

பள்ளி மாணவனாக இருக்கையிலேயே ஆர்வமாக எழுதத் தொடங்கியவர். தமிழ்நாட்டின் பிரபல இதழ்களான அரும்பு, தினமணி கதிரின் இளந்தளிர், இளந்தென்றல், ரத்னபாலாவில் இவருடைய படைப்புகள் இடம் பெற்றன.

குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய போட்டியில் 'அறிவியல் வரலாறு' என்ற கைப்பிரதி நூலுக்காக வெள்ளிப் பதக்கப் பரிசு பெற்றவர்.

இவரது குழந்தைக் கதைகள் தொகுதியான 'ஆயிரம் கொக்குகளை' 1996 ஆண்டு தமிழ்நாடு படைப்பாளிகள் பதிப்பகம் வெளியிட்டது. அந்த ஆண்டின் சிறந்த குழந்தை இலக்கியத்துக்கான விருதினை திருப்பூர் தமிழ்ச் சங்கம் 'ஆயிரம் கொக்குகளுக்கு' வழங்கியது.

தினகரன் இதழில் 'தங்கமுடிப் பூனையார்' சிறுவர் நாவல் வெளியாகிறது.

குழந்தை இலக்கிய வளர்ச்சியில் மிகவும் ஆர்வம் கொண்ட யோ.சத்யனின் மேலும் இரண்டு நூல்கள் இப்போது வெளியாகியுள்ளன.

## வாழ்த்துகிறார்கள்...

Не только врач, но и
литератор и переводчик.
Это — прекрасно!
Желаю успехов
11.07.2001

மருத்துவன் மட்டுமல்ல; இலக்கியவாதி, மொழிபெயர்ப்பாளன். இது அற்புதமானது! சத்யனின் முயற்சிகள் முழுமையடைய எனது வாழ்த்துக்கள்.

*மருத்துவப் பீடத் தலைவர்*

*பேராசிரியர். வி.அ.:புரோலொவ்*

Студентам 5-го
курса мед. фак-та
с пожеланиями успехов
не только в медицине, но
и в литературе.
Зам. декана
11.07.-01г.

ஐந்தாம் வருட மருத்துவமாணவன் யோகநாதன் சத்யனுக்கு, அவரது மருத்துவத் தொழில் மட்டுமல்லாது இலக்கியத்துறைப் பணியும் சிறப்பாய் அமைந்திட எனது இனிய வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

*மருத்துவபீடத்துணைத் தலைவர்*
*பேராசிரியர் ஏ.ஆ.திரோவ்.*

Талантливые врачи
нередко бывают
талантливыми писателями.
Видимо, это генетически
определяется. Желаю
удачи во всем   Зам. декана [signature]
Л.П. Карпенко

திறமைமிக்க மருத்துவர்கள், அற்புதமான எழுத்தாளர்களாகத் திகழ்வது, ரஷிய வரலாற்றிலும் சரி, ஏனைய மொழிகளிலும் சரி நடந்த, நடந்துவரும் அற்புதமானதொரு நிகழ்வாகும். அந்தப் பாரம்பரியம் உண்மையாவதை இன்று என்கண்ணெதிரே காண முடிவது எனக்கு அளவிட முடியாத பெருமையையும், மகிழ்ச்சியையும் அள்ளித் தருகின்றது. சத்யனின் மருத்துவ, மற்றும் எழுத்துத்துறை ஈடுபாட்டுக்கு எனது வாழ்த்துக்கள் என்றும் என்றும் நிறைந்திருக்கும்.

*மருத்துவபீடத்துணைத்தலைவர்.*
*பேராசிரியர் லூ.பெ.கார்பென்கோ.*

Была очень рада познакомиться и подружиться с талантливым и хорошим человеком, который переводит и пишет прекрасные сказки для детей. Уверена, что Сатьян станет квалифицированным специалистом.

Надеюсь, что он не оставит своего литературного увлечения и будет радовать читателей своими новыми произведениями.

Преподаватель французского языка и соседка по подъезду.

Юля


11.07.01

அற்புதமான, சிறுவர்களுக்கான கதைகளை மொழிபெயர்த்தும் எழுதியும் வரும் ஆற்றல் நிறைந்த மாணவனொருவனுடன் அறிமுகமாகிப்பழகுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். நிச்சயமாக சத்யனின் எழுத்துக்கள் தரமிக்கவையாக சிறுவர்களின் மத்தியில்

உலாவரும் என்பது எனது அசையாத நம்பிக்கை. அவரது எழுத்துக்கள் என்றும் அழியாது நின்று சிறுவர்களை மகிழ்விக்க எனது மனங்கனிந்த வாழ்த்துக்கள்.

*பிரஞ்சு மொழி ஆசிரியையும் அன்புமிக்க அயலவருமான யூலியா விக்டரவ்னா.*

□□□


Специалисты, но и хорошо воспитанные, талантливые, культурные люди.
11.07.01.

எமது பல்கலைக்கழகத்தின் வாசல்கள் வழியாக திறமைமிக்க மருத்துவர்கள் மட்டுமன்றி, தமது கலாச்சாரத்தைச் சிதறவிடாத, பண்பாடுமிக்க திறமையான எழுத்தாளர்களும் வெளியேறப் போகிறார்கள் என்பதை நினைக்கும்போது பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

*குடிவரவு, குடியகல்வுத்துறை ஆணையாளர் திரு.யூ.வீ.ராயவ்.*

□□□

# சத்யனின் எழுத்து உலகம்

சிறுவர்களின் உலகம் தனியானது. சின்னஞ் சிறு பருவத்தில் மனதில் பதிவாகும் சம்பவங்கள் வாழ்நாள் முழுவதும் நிலைத்து நிற்பதோடு நல்ல போதனைகள் வாழ்வை வளம்படுத்தவும் வழிகாட்டு பவன.

பெரும்பாலும் சிறுவயதில் கல்லூரியிலும் வெளியிடங் களிலும் செலவிடும் நேரத்தை விட அதிக நேரம் வீட்டில் தங்கக் கூடிய வாய்ப்பும் பிறரை விட பெற்றோருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் அதிகம். அந்த வாய்ப்பைப் பயனாக்கி நல்ல நூல்களை வாசிக்கும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொடுத்தால், சுற்றி நிகழ்வனவற்றை அவதானிக்கவும், அவதானித்தவற்றை அழகாக வெளிப்படுத்தவும் பழகிக் கொள்கின்றார்கள். இப்பழக்கத்தினால் அப்பா அம்மாவின் அன்பும் ஆதரவும் அறிவுரைகளும் ஆண்டு பலவானாலும், கல்வி, தொழில் காரணமாக தூரம் அதிகமானாலும் பிள்ளைகளோடு தொடர்ந்து வரும்.

குழந்தைப் பருவத்தில் சிறுபிராணிகளும் பொம்மை விளையாட்டுப் பொருட்களும் இன்பம் தருவதாகக் கருதும் மனங்கள், அவற்றோடு புழகுவதால் பெறும் அற்புத அனுபவங்களால் உயிர்களை நேசிக்கவும், உடமைகளைப் பாதுகாக்கவும் பக்குவம் பெறுகின்றன. அது போலவே நூல் களைத் தேடிப்படிக்கும் ஆவலை ஏற்படுத்தினால் மொழியைப் பயில்வதோடு கதைகளைப் படிக்கவும், செய்திகளைத் தெரிந்து கொள்ளவும் தகவல்களைச் சேகரிக்கவும் சிறந்த குணநலன்களை உள்வாங்கவும் பழகிக் கொள்கின்றார்கள்.

நாடறிந்த நல்ல எழுத்தாளர் செ.யோகநாதனும் அவர் மனைவியும் குழந்தை சத்யனில் செய்த முதலீடு இப்போது 'அமுதனின் உலகமாக' உங்கள் முன் விரிகிறது. இதற்கு முன் 'ஆயிரம் கொக்குகளா'கப், பறந்து திருப்பூர் சங்கத்தின் குழந்தை எழுத்தாளர்களுக்கான சிறந்த விருதைப் பெற்றுக் கொண்டார். இவர் இந்தியாவில் குழந்தை எழுத்தாளர் சங்க வெள்ளிப்பதக்கத்தையும் தனதாக்கிக் கொண்டவர்.

திருவிழா பொங்கல் என மகிழ்ந்திருந்த நாட்கள், நாய்க்குட்டியையும் பூனைக்குட்டியையும் பசுக்கன்றையும் தொட்டு மகிழ்ந்த சுகம், வாகனங்களில் அறிவு தெரிந்தபோது செய்த முதல் பயண அனுபவம் இப்படிப் பலவற்றை அழகாகச் சித்தரிக்கும் நூலாசிரியர் யோ.சத்யன் எமது குழந்தைக்கால மகிழ்வனுபவங்களை மீண்டும் நினைந்தின்புற வைக்கின்றார்.

ரஷ்யாவில் இறுதியாண்டு மருத்துவ மாணவனான சத்யனின் தாயக நினைவும் தமிழ்மொழிப் பற்றும் பன்முக ஆளுமையும் பரவலாகக் காணப்படும் சிறுவர்களுக்கான சிறந்த நூலிது.

செ.யோகநாதன் பார்வையையும் வீச்சையும் அதிகரித்துக் கொண்டு வரும்போது, அவர் மகன் சத்யன் தரமான தமிழ் இலக்கியப் படைப்புகளையும் மருத்துவ நூல்களையும் தருவார் என்ற நம்பிக்கையை உருவாக்கி வருகின்றார். அவர் முயற்சிகள் வெற்றி பெறவும் வாசகர்கள் பயன்பெறவும் வாழ்த்துக்கள்.

**உடுவை எஸ். தில்லைநடராசா**

மேலதிகச் செயலாளர்
கல்வி அமைச்சு
'இசுருபாய'
பத்தரமுல்லை.
08.08.2001

# ஓர் அறிமுகமாக.....

சிறுவனாக இருந்தபோதே படிப்பதிலும் எழுதுவதிலும் சத்யனுக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. நான் தமிழகத்தில் இருந்தபோது தனது ஆக்கங்களை சத்யன் அனுப்பியபோது நான் மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன். இவை தமிழகக் குழந்தை இதழ்களில் வெளியாகின. பின் 'ஆயிரம் கொக்குகள்' தொகுதி வெளியாகி, விருதும் பாராட்டுக்களும் பெற்றது. 'அறிவியல் வரலாறு' குழந்தை இலக்கியக்கழக வெள்ளிப் பதக்கம் பெற்றது.

குழந்தை இலக்கியத்தின் பூஞ்சோலையான ருஷ்யாவுக் குப் படிக்கப்போய் அம்மொழியைப் பயின்று தேர்ந்து, சத்யனால் குழந்தை இலக்கியத்தின் இன்னொரு விரிந்த தளத்தை அறிமுகம் கொள்ள நேர்ந்தது. அதன் உந்துதல் படைப்பாற் றலைப் பெருக்கிற்று. இதன் விளைவாக மருத்துவப் படிப்புக்கு நடுவேயும் பிரமிப்பூட்டுகின்ற குழந்தை இலக்கியங்களைப் படைக்க நேர்ந்தது. இது நமது குழந்தை இலக்கியத்துக்கு செழுமையும் வளமும் சேர்க்குமென நம்பலாம்.

படைப்பாளிகளான மார்க்சிம்கோர்க்கி, டால்ஸ்டாய் ஆகியோர் தமது முதுமைக் காலத்திலேயே இளமைப்பருவம் பற்றி நெகிழ்வாக எழுதினர். மகாகவி பாரதியின் இளமை வரலாறு நெஞ்சைத் தொடும் கவிக்குரல் ஆயிற்று. தன் இளமைப் பருவத்தில், குழந்தை உலக வாழ்வை உயிர்ப்போடும் உண்மையோடும் கவித்துவ நடையில் எழுதும் ஆற்றல் சத்யனுக்கு வாய்த்தது. இதையிட்டு தமிழ் பெருமிதங் கொள்ளும்.

இளம்பராயம் தன் சமகாலத்தை அழகாகப் பதிவு செய்துள்ளது என்பது மட்டுமல்ல விஷயம். இந்த இலக்கிய ஆவணத்தின் ஒவ்வொரு வரியிலும் நாம், நம்முடைய கடந்துபோன காலங்களையும் பசுமையான ஓவியங்களாகக் காண்கிறோம். எம்மையறியாது மனங்கலங்குகிறோம். வியக்கின்

றோம். புன்னகை செய்கின்றோம். இறுமாப்படைகின்றோம். நெகிழ்ந்து போகிறோம். இப்படி சத்யனின் எழுத்துக்கள் நம்மைப் பாதிக்கின்றன. இன்னுமொரு முறை நம்மைப் படிக்க இந்த நூல் தூண்டுவதும் இதனாலேதான்.

நான் அண்மையில் சிறந்த புத்தக நிறுவனமான ஹெயின்மான் வெளியிட்ட 'பையன்' - குழந்தைப் பருவக் கதைகள் என்ற ரோல்ட் டால் எழுதிய நூலை வாசிக்கும் சந்தர்ப்பம் பெற்றேன். (BOY- Tales of children by ROALD DAHL- Heinmann new Windmills Publication, England) ரோல்ட் டால் உலகின் பிரபலமான எழுத்தாளர். பெரியவர்களுக்காகவும் சிறியவர்களுக்காகவும் எழுதி வருபவர். இவரின் நிறைய நூல்கள் வெளியாகியுள்ளன.

'பையன்' என்ற இந்த நூலை அவர் தனது வாழ்வின் இளமைக்கால நினைவுகளை வைத்தே எழுதினார். ஆனால் 'இது எனது சுயசரிதை அல்ல. என் வரலாறை இங்கே நான் எழுதவில்லை. இன்னொரு விதத்தில் என் வாழ்வின் மறக்க முடியாத நிகழ்வுகளின் தொகுப்பாக இந்நூலை எழுதினேன். இவற்றில் சில வேடிக்கையாக இருக்கலாம். சில வேதனையைத் தரலாம். சில மகிழ்வளிக்கலாம், ஆயினும் இவையெல்லாம் என் நினைவில் பதிந்திருந்தவை. யாவும் உண்மையானவை'

நோர்வேயில் பிறந்து சவுத்வேல்சில் வளர்ந்து இன்று உலகுக்கே சொந்தக்காரராகி விட்ட படைப்பாளியான ரோல்ட் டாலினது 'பையனை'ப் படிக்கிறபோது 'அமுதனின் உலகம்' எனக்கு சட்டென்று ஞாபகம் வந்தது. ருஷ்யாவில், தானே எழுதி அச்சுப்பதித்து சத்யன் அனுப்பிய 'அமுதனின் உலகம்' ரோல்ட் டாலினது குரலை அப்படியே எனது மனதில் துல்லியமாக ஒலித்த வண்ணம் இருக்கிறது. இதனால் நான் ஒரு படைப்பாளியாகவும் தந்தையாகவும் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றேன்.

உலகம் இன்றைக்கு உள்ளங்கைக்குள் பந்தாகி விட்டது. இன்றைய இளந்தலைமுறை இணைய உலகினுள்ளே சாதாரணமாக உலகி வருகிறது. அறிவியல் யாருடைய கையில் இருக்கிறதோ அது அத்தகையோரின் கருத்தையே பரப்ப முனையும் என்றார் தலைவர் லெனின். வணிக மயப்பட்டோர் கையிலே இன்றுள்ள அறிவியல் ஊடகங்கள், மனித மேன்மையைக் கவனத்தில் எடுக்கும் என்று கொள்ள முடியாது. ஆனால் சத்யன் போன்ற இளம் படைப்பாளிகள் மனித மேன்மையையே முன்நிறுத்துபவர்கள், வலியுறுத்துபவர்கள், அவர்கள் மானிட மேன்மைக்கான ஆக்கங்களையே ஓயாமல் எழுதுவார்கள். இது ஒரு எதிர்நீச்சல் முயற்சியே. ஆயினும் வரலாற்றில் பதிவாகும் செயற்பாடு.

குழந்தை இலக்கிய வெளியீடு பற்றி எனது நண்பரும் படைப்பாளியுமான சுதாராஜ் நிறையவே கனவு காணுபவர், என்னைப் போல. எங்கள் கனவு மெய்ப்படுகின்ற கனவு. இந்தக் கனவு வசப்பட அருந்துணை புரியும். ஏ.ஜே. பிரிண்ட்ஸ் உரிமையாளர் திரு. ஏ.ஏ.மர்சூக்கிற்கும், அச்சாக்கப் பணியாளருக்கும் பாராட்டும் நன்றியும் கூற வேண்டியது அவசியம்.

குழந்தை இலக்கியம் எத்தகைய உருவ, உள்ளடக்கத்தோடு அமைய வேண்டுமென்ற இலக்கணத்துக்கு இலக்கியமாகியுள்ள இந்த 'அமுதனின் உலக'த்தையும், சத்ய னையும் பாராட்டுவதில் மகிழ்ச்சியும், கர்வமும் அடைகின்றேன்.

**செ. யோகநாதன்**



## எமது வெளியீடுகள்

1. சுதாராஜின் சிறுகதைகள்
2. ஏழு நண்பர்கள் - செ. யோகநாதன்
3. காட்டில் வாழும் கரடி நாட்டுக்கு வந்த கதை - சுதாராஜ்
4. அமுதனின் உலகம் - யோ. சத்யன்

## உங்களோடு சில வார்த்தை

எழுத்தாளர் என்ற அற்புதமான பூங்காவிலே நிற்கும் எனது தந்தையாரின் அருகிலே புதிதாக வளர்ந்திட்ட சின்னஞ் சிறியதொரு மலர்ச்செடியாய் நின்று, பணிவுடன் நிமிர்ந்து பார்த்து, இந்தச் சிறுவர் கதைத் தொகுப்புக்கு, முதலில் முன்னுரை கேட்கிறேன்.

சின்னஞ் சிறியவனாய் இருந்த காலங்களில் படங்களும், பாட்டுக்களும் நிறைந்த வண்ண வண்ணக் கதைப்புத்தகங்களை வாங்கிக் கொடுப்பார் அப்பா. வாங்கிக் கொடுப்பதோடு மட்டுமல்லாது அதிலிருக்கும் படங்களுக்கும் பாட்டுக்களுக்கும் அர்த்தம் சொல்லிப் படிக்கும் ஆற்றலை வளர்த்துக் கொடுத்த வரும் அவரே. சாப்பாட்டுடன் சேர்த்து, அருமையான புத்திமதிகளையும் கதைகள் வாயிலாக எனக்கு ஊட்டி வளர்த்த எனது அன்புத் தாயாரையும் நன்றியுடன் இப்போது பார்த்து நிற்கின்றேன். ஒன்றுக்கு நான்கு விலைவைத்து வியாபாரம் செய்யும் சிலரிடம் கஷ்டத்தோடு வாங்கி, அதை எதையுமே எனக்குக் காட்டிக்கொள்ளாது அன்புடன் எனது பெற்றோர் எனக்கு வழங்கிய புத்தகங்கள் மூலமாக நான் தெரிந்து கொண்ட விடயங்கள் பற்பல. அன்று மூன்றாம் வகுப்புப் படிக்கும்போது, எனது வகுப்பாசிரியை கேட்ட கேள்விகள் முதல், இன்று இறுதியாண்டு மருத்துவப் படிப்பினில், எனது ரஷியப் பேராசிரியர்கள் கேட்கும் பொதுவான பல மருத்துவக் கேள்விகளுக்கும் பதிலளிக்கும் திறனைத் தேடித்தந்தவை அந்தப் புத்தகங்கள்.

'அமுதனின் உலகம்' என்ற எனது இந்தச் சிறுவர்களுக் கான கதைத் தொகுப்பிலே வரும் கதாநாயகர்களும், சம்பவங் களும், ஏறத்தாழ இருபது வருடங்களின் முன்னால் எனது சின்னஞ்சிறிய வயதுகளில் நடந்து முடிந்த உண்மைச் சம்பவங் களே. காலத்தின் போக்கில் அந்தக் கதைகளின் கதாநாயகர்களில் சிலரும், நூலகக் கட்டடம், பூங்காக்கள் போன்றவை பலவும் தோய்ந்திருந்த பசுமையை அநுபவித்து மனம் சலனப்படவும், கவலைப்படவும், ஆனந்தித்திருக்கவும் மீண்டும் ஒரு வாய்ப்பு, இந்தக் கதைகளின் வாயிலாக, எனக்குக் கிடைத்திருக்கிறது. மிகவும் கஷ்டப்பட்டு மங்கலான நிழற்படங்களாய் என் கண்முன்னே தோன்றியிருந்த அந்தப் பழைய நினைவுகளில் மூழ்கிக்குதித்து, அவற்றின் பழைய வடிவங்களுக்குப் புதுப் பொலிவை இந்தக் கதைகள் வாயிலாகக் கொண்டு வந்து, எனது அன்புக்குரிய சிறுவர்,

சிறுமியருக்கு கதைப் பரிசாகக் கொடுப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

நாகரிகம் அடைந்தவர்கள் நாம் என்று பெருமை பொங்கச் சொல்லிக் கொள்ளும் மேலைநாடுகளில் வெளியிடும் அநாகரிகம் நிறைந்த படக்கதைகளை மொழிபெயர்த்துத் தமிழில் சிறுவர்களுக்காக வெளியிடுகிறார்கள் சிலர். அந்தக் கதைகளின் கதாநாயகர்கள் நூறுமனிதர்களை ஒரே நேரத்தில் தாக்கிக் கொல்வார்கள். கொழுந்து விட்டெரியும் கொடுந்தீயிலே குதித்து மீண்டும் வெளியே வருவார்கள். நடைமுறையில் சாத்தியமற்ற இவ்வாறான புழுகுக் கதைகளையும், பொய் மூட்டைகளையும் எழுத்து வடிவில் சிறுவர்களுக்குப் படிக்கக் கொடுப்பது மாபெரும் தவறாகும். அவ்வாறான எழுத்துக்களும், கதைப் புத்தகங்களும் வேடிக்கையும், விநோதமும் நிறைந்த அந்தச் சிறுவர்களின் அற்புதமான உலகத்திலே பெரியதொரு கறையைப் பூசி, மலர்களின் இதழ்கள் போன்ற மென்மையான அவர்களது உள்ளங்களிலும் ஆழமான கீறல்களை உண்டாக்கி விடும். அற்புதம் நிறைந்த அந்தச் சிறுவர்களின் உலகத்திலே ஒரு சிறுவனாக நானும் மாறிக் குதித்து, அவர்களின் கரங்களைப் பற்றிக் கொண்டு உலாவருவதே எனது கதைகளின் மூலமாக நான் எடுத்துக் கொண்ட இலட்சியமாகும்.

சிறுவர்களின் அறிவு, மற்றும் மனவளர்ச்சிக்கு இருவிதமான கருவிகள் அவசியமாகும். ஒன்று பொம்மைகள், மற்றையது அருமையான கதைப்புத்தகங்கள் என்று எனது உளவியல் பேராசிரியர் அடிக்கடி சொல்லுவார். அவ்வாறான முக்கியத்துவம் வாய்ந்த கருவிகளில் ஒன்றான சிறுவர் கதைகளை ஆக்குபவன் என்ற பெருமை மனதில் நிறைந்திருக்க, இந்தச் சிறுகதைத் தொகுப்பை எழுதி முடிப்பதற்கு எனக்கு ஊக்கம் கொடுத்த எனது அருமை நண்பர்கள் செந்தில்குமார், பரத் மற்றும் ஜெயக்குமாருக்கும், அன்புத்தங்கை செல்வி. ஜெயபாரதிக்கும் இதை அழகாக வெளியிட்டுள்ள பிரல படைப்பாளரும், தேனுகா பதிப்பக உரிமையாளருமான சுதாராஜ் அவர்களுக்கும் சிறந்த முன்னுரை தந்த இலங்கைக் கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் உடுவை எஸ்.தில்லை நடராசா அவர்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகளைச் சொல்லிக் கொள்ளுகிறேன்.

யோ. சத்யன்

மொஸ்கோ
2001

இந்தக் கதைகளிலே

அமுதனின் கரங்கள் பற்றி

உலாவரும் அவனது

அன்புத் தாயார்

திருமதி சுந்தரலட்சுமிக்கு

இந்தப் புத்தகம்

சமர்ப்பணம்........

# அமுதனின் உலகம்


| | |
|---|---|
| அமுதனின் அம்புலன்ஸ் வண்டி. | 19 |
| நூலகத்திலே ஒரு மாலைப் பொழுதில். | 27 |
| தேர்த்திருவிழா. | 33 |
| கொய்யாமரத்தடி வீடு. | 41 |
| குட்டி வீட்டுக்கு விஜயம் செய்த சுட்டிக்குரங்கார். | 47 |
| அமுதனும் குட்டி விமானமும். | 55 |
| அம்மாவும், அமுதன் வளர்த்த குட்டிப் பூனையும். | 65 |
| அம்மாவின் மோட்டார் வண்டி. | 70 |
| அப்பாவின் அன்பும், அமுதனின் பொல்லாத கோபமும். | 74 |
| பொங்கல் பண்டிகை. | 80 |
| மாதுளைமரம். | 86 |
| செல்வியின் நாட்டியக்காரப் பொம்மை. | 90 |
| குட்டிப்பூனையாரும், மனித இயந்திரப் பொம்மையும். | 95 |
| யன்னலில் தெரிந்ததொரு பயங்கர உருவம். | 102 |
| பூங்காவிலே ஒரு மாலைப்பொழுதில். | 107 |
| வீட்டுக்கு வந்த பரட்டைத்தலை மனிதர். | 114 |


□

## அமுதனின் அம்புலன்ஸ் வண்டி.

அம்மாவுக்கும், அப்பாவுக்கும் வாய்த்ததொரு செல்லப்பிள்ளை அமுதன். பெற்றோர்கள், தங்கள் அன்பு மகன் மீது அளவிட முடியாத விருப்பம் வைத்திருந்தார்கள். ஐந்தாம் வகுப்புப் படிக்கும் அமுதன் அந்த ஆண்டுப் பரீட்சைகளில் எல்லாப் பாடங்களிலும் சிறப்பான புள்ளிகள் பெற்றிருந்தான். குறும்புத்தனங்கள் நிறைந்திருந்த போதிலும் படிப்பில் என்றுமே அவன் பின்தங்கியதில்லை. இரண்டாம் வகுப்பு படிக்கும்போதே அவனது அப்பா, அருமையான வண்ணப் படங்கள் நிறைந்த அழகான கதைப் புத்தங்களை வாங்கிக் கொடுக்கத் தொடங்கினார். கதைப்புத்தங்கள் படிக்கும் பழக்கம், பாடப்புத் தகங்களை ஆர்வத்துடன் படிக்கவும், படிக்கும் பாடங்களை இலகுவாகப் புரிந்து கொள்ளவும் கூடிய திறமையை, அமுதனுக்கு அள்ளி வழங்கியிருந்தது.

பரீட்சைகளில் சிறப்பாகத் தேறியதால் அற்புதமானதொரு கால்பந்தை அப்பா பரிசளித்திருந்தார். அமுதனின் அப்பா என்றைக்குமே அவனைத் திட்டியதில்லை. அம்மாவோ சிறிது கண்டிப்பு நிறைந்தவர். தனது அன்பு மகனுக்கு, விளையாட்டுப் பொருட்களுடன் சேர்த்து, மேலதிகமாக, அடுத்த வருடப் பாடங்களுக்குத் தேவையான பலவிதமான பயிற்சிப் புத்தங்களையும், விலையுயர்ந்த வண்ணப் பென்சில் பெட்டி ஒன்றையும் வாங்கிப் பரிசளித்திருந்தார். முப்பது நாட்கள் விடுமுறையில் பதினைந்து நாட்கள் விளையாட்டுக்கும், பதினைந்து

நாட்கள் படிப்புக்கும் என்றும் முன்கூட்டியே திட்டமும் தீட்டியிருந்தார்.

அம்மாவின் விதிமுறைகளுக்கெல்லாம் பலமாகத் தலையை ஆட்டி சம்மதம் தெரிவித்தான் அமுதன். வரும் பதினைந்து நாட்களையும் ஆசைதீர விளையாடித் தீர்த்துவிடவும் முடிவு செய்து கொண்டான். அதன் முதற்கட்டமாகத் தனது படிப்பு மேசையிலே பரவி வைத்திருந்த பாடப் புத்தகங்களையெல்லாம் பக்குவமாக எடுத்து, மேசை அலுமாரியினுள் வைத்தான். தனக்குச் சொந்தமான மர அலுமாரியின் அருகே சென்று ஆற அமர்ந்து கொண்டான்.

அவனது அலுமாரியின் அமைப்பைப் பற்றியும் சிறிது பார்க்கலாமே! சிறிது அருகில் செல்லலாம் வாருங்கள் என் குட்டி நண்பர்களே. மரத்தால் அமைக்கப்பட்ட, இளநீல வர்ணம் கொண்டது அமுதனின் அலுமாரி. நான்கு தட்டுக்களுடன் கூடிய அந்த அலுமாரி, அமுதனை விட சிறிது உயரமானது. மேல் தட்டைவிட மீதி மூன்று தட்டுக்களும் அவனுக்கு இலகுவாக எட்டக் கூடியவை. அதனால் அவனுக்கு எட்டாத அந்த மேல்தட்டை அம்மா கைப்பற்றிக் கொண்டு தனது கைப்பையையும், மூக்குக் கண்ணாடியையும் வைக்குமிடமாக உபயோகித் திருந்தார். அலுமாரியின் மீதான அம்மாவின் ஆக்கிரமிப்பு பலநாட்களாகவே அமுதனுக்கு மிகுந்த கோபத்தை ஏற்படுத்தினாலும், சிறிது வளர்ந்து, அலுமாரியின் உயரத்துக்கு வந்த பின்னர் பார்த்துக்



கொள்ளலாம் என்று நினைத்து, அந்தக் கோபத்தை தன்னுள் ஒளித்து வைத்திருந்தான்.

இரண்டாவது தட்டில் அவன் இரண்டாம், மூன்றாம், நான்காம் வகுப்புக்களில் படிக்கும்போது அப்பா வாங்கிக் கொடுத்த புத்தகங்களையும் - மூன்றாவது தட்டில் சமீபகாலங்களில் சேகரிக்கும் புத்தகங்களையும் பக்குவமாக அடுக்கி வைத்திருந்தான். இரண்டாம் வகுப்புப் படிக்கும்போது புத்தகங்களில் அவ்வளவு கவனம் அவனுக்கு இருந்ததில்லை. கட்டிலில் படுத்திருந்து கதைகளைப் படித்து விட்டுத் தலையணையின் கீழாக அந்தப் புத்தகங்களை வைத்ததும் தூங்கிப் போய்விடுவான்.

காலையில் பார்க்கும்போது அட்டைகள் கிழிந்து, கசங்கிப் போய் பரிதாபமாகக் காட்சியளிக்கும் அந்தப் புத்தகங்கள். கவலை தோய்ந்த முகத்துடன் அவற்றை எடுத்துச் சென்று பசைபோட்டு ஒட்டிப் பக்குவமாக மீண்டும் தருவார் அப்பா. ஒன்றுக்கு நான்கு மடங்கு விலையாக வியாபாரம் செய்யும் வியாபாரிகளிடம் வாங்கும் அவருக்கல்லவா அந்தப் புத்தகங்களின் அருமை தெரியும்! ஓரிரு தடவைகளின் பின்னர் தனது தவறைத் தானாகவே உணர்ந்து, அதைத் திருத்தியும் கொண்டான் புத்தி நிறைந்த குட்டிச் சிறுவன் அமுதன். அதன் பின்னர் அப்பா வாங்கித் தரும் புத்தகங்களுக்கு உடனடியாகவே உறைபோட்டுப் படிக்கும் வழக்கத்தை யும் ஏற்படுத்திக் கொண்டான்.

தனது மகன் சேர்த்து வைத்திருக்கும் புத்தகங்களை ஆசையுடன் பார்த்து மகிழ்ந்திருப்பார் அம்மா. வீட்டுக்கு வரும் நண்பர்கள், விருந்தினர் களுக்குப் பெருமையுடன் அவற்றைக் காட்டி மகிழ்வது அவரது வழக்கம். இவ்வாறாக இரண்டாவது மூன்றாவது தட்டுகளை புத்தகங்களுகென்றும், நான் காவது தட்டை பொம்மைகளுக்குமாக ஒதுக்கியிருந் தான் அமுதன். அந்தத் தட்டில் வரிசையாக தன்னிடமிருந்த பொம்மைகளை அழகாக அடுக்கி வைத்திருந்தான். மரத்தால் செய்யப்பட்ட இரயில் வண்டி, அடுத்து - சிவப்பு, வெள்ளை வண்ணங்கள் கலந்த, பளபளவென்ற உடலையுடைய அழகான பொம்மை விமானம். அந்த பொம்மை விமானத்தின் செட்டைகளில் பொருத்தப்பட்டிருந்த நீலநிறவிளக்கும், இறப்பரால் ஆக்கப்பட்ட அழகான சில்லுகளும்,

மூக்கில் பொருத்தப்பட்டிருந்த காற்றாடியும் என்றைக் குமே அந்த பொம்மையின் மீது அமுதனுக்கு மிகவும் விருப்பத்தை ஏற்படுத்தின. அவற்றை விட வீட்டு பொம்மைகள், கார் பொம்மைகள் என்று அந்தத் தட்டின் முக்கால் பாகம்வரை நிரம்பியிருந்தன.

அப்பா பரிசளித்திருந்த கால்பந்தையும் அங்கேயே அழகாக வைத்திருந்தான். வெள்ளை, கறுப்பு நிறமுடைய அந்தக் கால்பந்து அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. கால்களால் உதைத்து அதை அழுக்காக்குவதற்கு மனமில்லாது, பந்தைச் சுற்றி ஒட்டியிருந்த கண்ணாடித்தாளைக் கூட அகற்றாமல் பக்குவமாக வைத்திருந்தான்.

இவ்வாறாகப் பலவிதமான பொம்மைகளின் சொந்தக்காரனாயிருந்த போதிலும், ஒருசில நாட்களாகவே ஒரு அம்புலன்ஸ் வண்டி பொம்மையை வாங்க வேண்டுமென்ற ஆசை அவன் மனதிலே நிறைந்திருந்தது.

அவனது அந்த ஆசையை சில நாட்களுக்கு முன்னால் நடந்து முடிந்த அதிர்ச்சிமிக்க சம்பவம் ஒன்று, மென்மேலும் அதிகமாக்கியது.

அப்படியென்னதொரு அதிர்ச்சிமிக்க சம்பவம்? சில நாட்களுக்கு முன்னர் பெற்றோர்களுடன் கடைவீதிக்குச் சென்றிருந்தான் அமுதன். வீட்டுக்குத் தேவையான பொருட்களுடன் தனக்கும் சில அழகுசாதனப் பொருட்களை அம்மா வாங்கியிருந்தார்.

நிறைய நாட்களாகவே தான் தேடியிருந்த வாசனைத்திரவியம் அன்று அதிர்ஷ்டவசமாகக் கடைவீதியில் கிடைத்ததால் அம்மாவின் உள்ளம் ஆனந்தத்தால் நிறைந்திருந்தது. அம்மாவின் மனநிலையை தனக்கு மிகவும் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, அழகானதொரு வெள்ளை நிற அம்புலன்ஸ் பொம்மையை வாங்கிக் கொண்டான் அமுதன். பிளாஸ்ரிக்கால் அமைக்கப்பட்டிருந்த அந்த பொம்மையில் என்ன விசேடம் தெரியுமா? கதவுகள், பின்புறக் கண்ணாடிகள், எல்லாமே திறக்கக்கூடியதாக அமைக்கப்பட்டிருந்தன. அற்புதமானது அந்த விளையாட்டுப் பொருள். இறுதியாக ஒரேயொரு பொம்மை மட்டுமே எஞ்சியிருப்பதைச் சொல்லி, அழகான ஒரு அட்டைப் பெட்டியில் போட்டு அவனிடம் கொடுத்தார் கடைக்காரர். அம்புலன்ஸ் வண்டியின் படம் இன்னும் அழகாக அந்தப் பெட்டியில் வரையப்பட்டிருந்தது. வண்டியின் அருகிலே, கம்பீரமானதொரு வைத்திய சாலைக் கட்டடமும் வரையப்பட்டிருந்தது. வீடு திரும்பியதும் தன்னிடமுள்ள வீட்டு பொம்மையில் சில மாற்றங்களைச் செய்து அதையே வைத்திய சாலையாகவும் மாற்றிட முடிவு செய்தான் அமுதன்.

தேவையான பொருட்கள் எல்லாவற்றையும் வாங்கி முடித்து அமுதனும், பெற்றோரும் வீடு திரும்பினார்கள். வீடு திரும்பியதும், பெட்டியிலிருந்த தனது அம்புலன்ஸ் வண்டியை வெளியே எடுத்து அழகு பார்க்கத் தொடங்கினான் அமுதன். கதவுகளையும், பின்புறக்கண்ணாடியையும் திறந்த படியே தரையில் வைத்து உருட்டிப் பார்த்தான். அப்பா,

மகனைப் பார்த்து சிரித்து விட்டு குளிப்பதற்காகச் சென்றார். தனது அன்பு மகனை ஆதரவாக தட்விக் கொடுத்த அமுதனின் தாயார், தேனீர் தயாரிக்க சமையறையினுள் நுழைந்தார். அம்புலன்ஸ் வண்டி வேகமாக ஓடிச்சென்று, சமையறை வாசலருகே நின்றது. பின்னர் அங்கிருந்து வேகமாக வேறுதிசையில் ஓடிச் சென்றது. மும்முரமாகத் தனது பொம்மையை உருட்டி, விளையாட்டில் மூழ்கியிருந்தான் அமுதன்.

சிறிது நேரங்கழிந்தது. இப்போது மீண்டும் சமையலறைவாசலை இலக்கு வைத்து வேகமாக வண்டியை உருட்டி விட்டான் அமுதன்.

வேகமாக ஓடிச்சென்ற வண்டி, சமையலறை வாசலைச் சென்றடைந்து, வாசலில் போடப்பட்டிருந்த கால்மிதியில் மோதி நிற்கவும், அந்த நேரம் பார்த்து சமையலறை யிலிருந்து, கையில் தேனீர்க் கோப்பைகளுடன் அம்மா வெளியே வரவும் சரியாயிருந்தது. அம்புலன்ஸ் வண்டி தனது காலை நோக்கி வருவதை எப்படி அம்மா அறிவார்? அம்மாவின் கால் பலமாகவே அம்புலன்ஸ் வண்டியைப் பதம் பார்த்தது.

அமுதனின் கண்ணெதிரிலேயே, ஒரு கணப் பொழுதிலே அப்பளம் போலச் சுக்கல்சுக்கலாய்ச் சிதறியது, அருமையான அந்த அம்புலன்ஸ் வண்டி. நூற்றுக்கு நூறு விதமான சேதம் அந்த வண்டிக்கு உண்டாயிற்று. அம்மா சிறிது குண்டான உடல்வாகு கொண்டவராதலால் அந்தச் சேதத்தை சிறிதளவாவது

குறைக்கும் வாய்ப்பும் இல்லாது போயிற்று. அமுதனின் கண்களில் திரண்ட கண்ணீர்த்துளிகள் முத்துக்களாகத் தரையில் சிந்தின.

அன்றிலிருந்து, இன்றைய நாள் வரை, அமுதனின் அப்பாவும், அம்மாவும், தங்கள் அன்புமகனுக்கு மீண்டும் புதியதொரு அம்புலன்ஸ் வண்டியை வாங்கிக் கொடுக்க எண்ணிப் பல கடைகள் ஏறி, இறங்குகிறார்கள். ஆனால் அமுதனுக்குப் பிடித்தமான அந்த அம்புலன்ஸ் வண்டி இன்னும் அகப்படவேயில்லை.

இவ்வாறாக அமுதனின் அம்புலன்ஸ் வண்டியின் சரித்திரத்தை இதுவரை நோக்கியிருந்ததில், விளையாட்டில் மும்முரமாக இறங்கியிருக்கும் அவனை நம்மால் கவனிக்க முடியவில்லை. ஆனாலும் பரவாயில்லை, அவனைத் தொந்தரவு செய்யாது இங்கிருந்து மெதுவாக நழுவிச் செல்லலாம், வாருங்கள் என் குட்டி நண்பர்களே.



## நூலகத்திலே ஒரு மாலைப் பொழுதில்..

விடுமுறை நாளாகையினால், அன்று பிரதான நூல் நிலையத்துக்குச் சென்று வரலாம் என்று அப்பா சொன்னார். தலையைப் பிளக்கும் வெய்யில் தணிந்து, குளிர்மையாயிருந்த அந்த மாலைப் பொழுதில் அமுதனும், அப்பாவும் நூல் நிலையத்துக்குச் சென்றார்கள். அமுதனின் வீட்டிலிருந்து மூன்றுமைல் தொலைவில் அமைந்திருந்தது அந்த நூலகம். பெற்றோருடன் கடைகளுக்குச் செல்லும் போது தெருவிலிருந்து நூலகக் கட்டிடத்தைப் பார்த்திருக் கிறானே தவிர எப்போதும் அவன் உள்ளே சென்றதில்லை.

ஏராளமான புத்தகங்கள் அந்த நூலகத்தில் இருப்பதாக அப்பா சொல்லியது அமுதனுக்கு அளவிட முடியாத ஆனந்தத்தைக் கொடுத்தது. ஆதலால் எவ்வளவுக்கு முடியுமோ, அவ்வளவு விரைவாக நூலகத்தைச் சென்றடைந்திட விரும்பினான்.

சைக்கிளை மெதுமெதுவாக மிதித்திடும் அப்பாவைப் பார்த்து ''அப்பா! சைக்கிளை வேகமாக மிதியுங்களேன்'', என்று செல்லமாகக் கடிந்து கொண்டான். புத்தகங்கள் மேல் அவனுக்கிருந்த ஆர்வம், அப்பாவின் மனதிலே பெருமகிழ்ச்சியை உண்டாக்கியது. அப்பாவின் சைக்கிள் வண்டியின் வேகமும் அதிகமாயிற்று.

பெரிதொரு அரண்மனை போலிருந்தது அந்த

நூலகக் கட்டடம். அதன் தூய வெள்ளை வர்ணம், பளிங்குக் கற்களால் அமைக்கப்பட்டதோ அந்தக் கட்டடம் என்ற சந்தேகத்தைத் தோற்றுவித்தது. விசாலமான பெரிய கண்ணாடி யன்னல்களில், மாலை நேரத்துப் பொன் வண்ணச் சூரியக் கதிர்கள் பட்டுத் தெறித்தன. சைக்கிள் தரிப்பிடத்தில், சைக்கிளை நிறுத்திவிட்டு அப்பா திரும்பும் வரையிலும் நூல் நிலையத்தின் அழகைப் பார்த்து ரசித்திருந்தான் அமுதன்.

நூல் நிலையத்தைச் சுற்றிலும் பலவண்ண மலர்ச்செடிகள் நிறைந்திருந்தன. நூலகத்தின் முன்முற்றத்திலே அமைந்திருந்ததொரு சிறிய தாமரைத் தடாகமும், அந்தத் தடாகத்தின் மத்தியிலே பெரியதொரு வெள்ளைத் தாமரைப் பூவில், கையில் வீணையுடன் அமர்ந்திருந்த கலைவாணியின் அழகும் அமுதனைக் கொள்ளை கொண்டன. அங்கிருந்த மலர்ச்செடிகளில் ஒன்றில் இருந்து, வெள்ளை நிறப் பூவொன்றைப் பிடுங்கிக் கைகளில் வைத்துக் கொண்டான். தோட்டக்காரர் அருகிலேயே நின்றிருந்த போதிலும் எதுவும் சொல்லாது அவனைப் பார்த்து அன்புடன் சிரித்தார். இவ்வாறாகத் தோட்டத்தில் சிறிது நேரத்தைக் கழித்துவிட்டு அப்பாவும், அமுதனும் நூல்நிலையத்தினுள் நுழைந்தார்கள்.

நுழைவாயிலை அடுத்திருந்த பெரியதொரு கூடத்தில் கண்ணாடிப் பெட்டியினுள் வைக்கப்பட்டிருந்த, நூலகத்தின் மாதிரி உருவப்பொம்மை அமுதனை மிகவும் கவர்ந்தது. ஆகா! என்னிடமும் இப்படியொரு

கட்டடப்பொம்மையிருந்தால், எனது மோட்டார்க்கார் பொம்மைகளையெல்லாம், அதைச் சுற்றிவர நிறுத்தி வைத்து விளையாடலாமே! என்றதொரு ஆசையும் அந்தக் குட்டிச் சிறுவனின் மனதிலே பொங்கி யெழுந்தது.

நூலகத்தின் நுழைவாயிலில் இருந்து, இரண்டாவது மாடியில் அமைந்துள்ள சிறுவர் பகுதிக்கு அமுதனை அப்பா கூட்டிச் சென்றார். அங்கு செல்வதற்குள், குறைந்தது நான்கு தடவைகளாவது கால்கள் வழுக்கி, தரையில் விழப்பார்த்தான் அமுதன். அப்படிக் கண்ணாடி போல வளவளப்பாயிருந்தது அந்த நூலகக் கட்டடத்தின் சிவப்புநிறமான தரை. மகனின் கைகளைப் பற்றிக் கொண்டு, கவனமாகக் கூட்டிச் சென்றார் அப்பா.

நூலகத்தில் வேலைபார்க்கும் அனைவரையுமே அப்பாவுக்குத் தெரிந்திருக்கும் போலிருக்கிறதே! எல்லாரும் அப்பாவுக்கு வணக்கம் சொன்னார்கள். அமுதனின் கன்னங்களிலும் செல்லமாகத் தட்டி நலம் விசாரித்தார்கள். சிறுவர் பகுதிக்குள் வந்த அமுதனின் கண்கள் ஆச்சரியத்தால் அகலவிரிந்தன. எவ்வளவு புத்தகங்கள்! எவ்வளவு பெரிய அலுமாரிகள்! அந்தப் பென்னம் பெரிய அலுமாரிகள் நிறைய வண்ண வண்ணப் புத்தகங்கள். இங்கு பார்ப்பதா, அங்கு பார்ப்பதா? இங்கே அமுதனுக்குப் பிடித்த வாண்டுமாமாவின் புத்தகங்கள், அதோ அங்கே அவனுக்கு இன்னும் பிடித்தமான கதாநாயகன் துப்பறியும் சாம்புவின் சாகசங்கள், அதைவிட

அறிவியல் அறிஞர்கள், விலங்குகள், பறவைகள், பாடல்கள், கலைக்களஞ்சியங்கள் என்ற எத்தனையோ விதமான புத்தகங்கள். இரண்டு புத்தகங்களை மட்டுமே வீட்டுக்கு எடுத்துச் செல்ல முடியும் என்று அப்பா முன்னெச்சரிக்கையாகச் சொல்லி வைத்தார். அங்கிருந்து புத்தகங்களைப் படித்துவிட்டு, வீட்டுக்கு எடுத்துச் செல்லவும் தெரிவு செய்யுமாறு சொன்ன அப்பா, அருகிலிருந்த பத்திரிகைகள் படிக்கும் பகுதிக்குள் சென்று அமர்ந்தார். மகனுக்குத் தொந்தரவு கொடுக்க அவர் விரும்பவில்லை.

இரண்டு மணிநேரங்கள் ஓடிப்போயின. மூன்று புத்தகங்களை முழுமையாகப் படித்து முடித்தான் அமுதன். அதன் பின்னர் அரைமணிநேரமாகத் தேடி வீட்டுக்கு எடுத்துச் செல்ல இரண்டு புத்தகங்களையும் தெரிவு செய்து கொண்டான். மீண்டும் அடுத்தவாரமே அப்பாவுடன் வரமுடியுமாதலால், இயலுமான அளவுக்குப் பெரிய கதைகளாகவே தெரிவு செய்திருந்தான். இன்னமும் அப்பா பத்திரிகைகளைப் படித்துக் கொண்டும், அவற்றிலிருந்து குறிப்புக்களை தனது குறிப்புப் புத்தகத்தில் எழுதிக் கொண்டும் இருந்ததால், ''விலங்குகள் உலகம்'' என்றதொரு படங்கள் நிறைந்த புத்தகத்துள் குதித்து மூழ்கத் தொடங்கினான் அமுதன்.

அந்தப் புத்தகத்தை அவன் படித்து முடித்து மூடவும், அப்பா அங்கே வந்து செல்லமாக முதுகில் தட்டவும் சரியாயிருந்தது. அமுதன் தெரிவு செய்திருந்த புத்தகங்களிரண்டையும் வாங்கிப் பார்த்த அப்பாவின்

முகத்தில் சந்தோஷம் பொங்கியது. ''கெட்டிக்காரச் சிறுவனப்பா நீ, நல்ல புத்தங்களைத்தான் தெரிவு செய்துள்ளாய்!'', என்று அமுதனைப் பாராட்டினார்.

சிறுவர் பகுதிப் பொறுப்பாளர், அங்கத்தினருக் கான அட்டையை அமுதனிடம் கொடுத்தார். புத்தங்க ளில் கீறல்கள், கறைகள் எதுவுமே இல்லாது கவனமாகத் திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்று மிகவும் கண்டிப்பாகச் சொல்வது போலச் சொல்லி, அப்பாவைப் பார்த்துச் சிரித்தார்.

மேசையில் அமுதனுக்காகத் தயாராய் வைத்திருந்த மிட்டாயை எடுத்து அன்புடன் கொடுத்தார். தனது அன்பு நண்பரின் மகனான அமுதனை, அந்த நூலகத்தைப் போலவே அவரும் இன்றுதான் முதன் முதலாகப் பார்க்கிறார். தனது பல்கலைக்கழக நண்பரான அவரை, அமுதனுக்கு அன்புடன் அப்பா அறிமுகப்படுத்தினார். அமுதனுக்கு மகிழ்ச்சி தாளமுடியவில்லை. பெருமையுடன் தனது அங்கத்தினர் அட்டையைப் பக்குவமாக சட்டைப் பையில் வைத்துக் கொண்டான்.

அருமையான அந்த நூலகத்தில் இனிமேல் அமுதனும் ஒரு அங்கத்தினன் அல்லவா! அடுத்தமுறை வரும்போது, நூலகத்தின் வேறொரு பகுதிக்கும் கூட்டிச் செல்வதாகக் சொன்ன அப்பா, அங்கு பல ஆயிரம் வருடங்கள் பழமை வாய்ந்த ஓலைச் சுவடிகள் பத்திரமாக பாதுகாத்து வைக்கப் பட்டுள்ளதையும் சொன்னார்.

அதைக் கேட்ட அமுதனுக்கு அளவிட முடியாத ஆச்சரியம் பொங்கியது. ''எப்படியப்பா இவ்வளவு வருடங்களாக அந்த ஓலைகளைப் பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள்?'' என்று கண்களில் ஆர்வம் மின்னிடக் கேட்டான். அதற்கான விளக்கத்தைச் சொல்லியவாறே சைக்கிளை மெதுவாக மிதித்தவாறு வீடு செல்லும் பாதையிலே பயணத்தைத் தொடர்ந்தார் அப்பா.

தெருமுனையில் சைக்கிள் வண்டி திரும்பும் வரை, தனக்கு மிகவும் பிடித்தமான அந்த அற்புதமான நூல் நிலையத்தைத் திரும்பிப் பார்த்தான் அமுதன். நூலகத்தின் முகப்பு வாசலிலே பொருத்தப்பட்டிருந்த, சிவப்பு நிற வண்ணங்கொண்ட மெல்லிய குழல் விளக்குளால் அமைக்கப்பட்ட யாழ் இசைக் கருவியின் அழகிய தோற்றம், வெகுதூரம் வரை அவனது கண்களைவிட்டு அகலவேயில்லை.

□



## தேர்த்திருவிழா.

நல்லூர் முருகன் கோவிலிலே அன்று தேர்த்திருவிழா! வரலாற்றுப் பெருமை கொண்ட, புனிதமான அந்தப் பழம்பெரும் கோவிலிலே வீற்றிருக்கும் முருகன் மீது அமுதன் மிகுந்த பக்தியும், பாசமும் கொண்டிருந்தான்.

வானளாவ உயர்ந்து நின்ற கோபுரமும், கண்ணாடி மணிகள் தொங்கும் வளைந்த நுழைவு வாசலும் கொண்ட அந்தக் கோயில், பார்ப்போர் மனதில் எல்லாம் பரவசம் பொங்கிடச் செய்யவல்லது. கோயிலின் அருகே அடர்ந்து வளர்ந்திருந்த வேப்ப மரங்களும், வெண்மணல் பரவப்பட்ட வெளிவீதியும், அந்தக் கோயிலின் அழகுக்கு மேலும் அழகு சேர்த்தன. அதிகாலையிலும், மாலையிலும் கணீர் என்று எழும் வீணைநாதம் போன்ற கோயிலின் காண்டாமணியோசை, கேட்பவர் காதுகளில் புகுந்து, அவர்கள் மனங்களில் நிறைந்திருக்கும் கவலைகளை யெல்லாம் நீக்கவல்லது. குன்றுகளிலே குடியிருக்கும் குட்டிச் சிறுவன் முருகனுக்கு, நல்லூரிலே வாய்த்ததொரு அருமையான வீடல்லவோ அந்த ஆலயம்.

பெருமைகள் பல கொண்ட அந்த அருமையான கோவிலிலே இன்று சித்திரத்தேர்! அதிகாலை ஐந்து மணிக்கு ஒலித்த கோயிலின் மணியோசை, அமுதனின் தூக்கத்தைக் கலைத்தது. தேரோட்டம் கண்டு வர அம்மாவும், மகனும் தயாரானார்கள். தோட்டத்திலே

நின்ற முல்லை மரத்தடிக்குச் சென்ற அம்மா, தட்டொன்றிலே, புத்தம் புதிதான முல்லை மலர்களைப் பிடுங்கியெடுத்து வந்து தொடுத்து, மாலைகட்டும் வேலையில் மூழ்கியிருந்தார். மல்லிகை மலர்ச் செடிகளும் வீட்டு முற்றத்திலே நின்றிருந்தாலும், சிட்டுக் குருவிகளின் சொண்டுகள் போன்ற சின்னஞ்சிறிய முல்லைமலர் இதழ்களின் மேல் அம்மாவுக்கு மோகம் அதிகம். மலர்தொடுக்கும் வேலையில் அம்மா மூழ்கி யிருக்க, கிணற்றடிக்கு விரைந்து சென்று, குளிக்கத் தொடங்கினான் அமுதன். அம்மாவும், அமுதனும் வீட்டைவிட்டுக் கிளம்பித் தெருவுக்கு வரவும், அமுதனின் அருமை நண்பர்கள், எழிலும், செல்வியும் தங்கள் தாயாருடன் அங்கு வந்து சேரவும் சரியாயிருந் தது. எல்லாரும் சேர்ந்து கோவிலுக்குச் சென்றார்கள்.

செல்லும் வழியெங்கும் சனக்கூட்டம் நிறைந்து வழிந்திருந்தது. கோயிலுக்கு செல்பவர்கள் ஒரு புறமும், பஜனைக் கோஷ்டிகள், காவடி எடுத்துக் கோயிலை நோக்கிச் செல்பவர்கள் கூட்டம் மறுபுறமாகவும் அந்த வீதி காட்சிகொடுத்தது.

கோவிலைச் சூழ்ந்து, வெளிப்புற வீதியிலும், அதை ஒட்டிய பிரதான வீதிகளிலும், அணை தளும்பி நிற்கும் வெள்ளம் போல, மக்கள் கூட்டம் நிறைந் திருந்தது. கஷ்டப்பட்டு அந்த மக்கள் வெள்ளத்தைக் கடந்து, கோவிலின் நுழைவு வாசலுக்கு அமுதனும், அம்மாவும் வந்து சேர்ந்தார்கள். அவர்களுடன் கூடவே எழிலும், செல்வியும் தங்கள் தாயாருடன் அங்கு வந்து சேர்ந்தார்கள்.

கோவிலின் முகப்பு வாசலருகே நின்றிருந்த நாதசுர வித்துவான்கள், தங்கள் நாதசுரத்தால் இனிய கானம் பாடி, கோவிலை விட்டு வெளியே வரப்போகும் கந்தப் பெருமானுக்கு வரவேற்பு சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் கான மழைக்கு ஈடுகொடுத்துத் தாளம் தட்டி முழங்கினார்கள் தவில் வித்துவான்கள். பல்லாயிரக் கணக்கான சோடிக் கண்கள், முருகப் பெருமானின் வரவு நோக்கி வாசலைப் பார்த்துக் காத்திருந்தன.

ஆண்டாண்டு காலமாக நாங்கள் அநுபவிக்கும் வேதனைகளுக்கு, ஒரு முடிவு தேடித்தரமாட்டாயா, என்று சொல்லாமல் சொல்லிக் கொண்டன அந்தக் கண்கள். தமிழ் பாடி நின்ற வாய்களும் அதே கேள்வியைத்தான் வரப்போகும் கந்தனிடம் கேட்கத் தயாராயிருந்தன. கோவிலின் கோபுரத்திலே ஏற்றப் பட்டிருந்த சேவல் கொடி, காற்றிலே படபடத்து அசைந்தாடியது.

மேளதாள ஒலிகள் முழங்க, நாதசுரம் இசைக்க, அலங்காரக் கந்தன் அசைந்தாடி வந்து, தேரிலே ஏறிக் கொண்டான். அருள்பொங்கும் புன்னகை வாயிலே மின்னிட, கையிலே மந்திரவேல் துலங்கிட அணிந்திருந்த தங்கக் கிரீடத்திலே தொங்கிய மணிகள் தீப ஒளிபட்டுத் தகதகத்திட்டன. தேரிலே வீற்றிருந்த கந்தப் பெருமானின் அழகு, அமுதனை மிகவும் கவர்ந்தது. பக்தியுடன், ''முருகா!'' என்று சொல்லிக் கொண்டே கையெடுத்துக் கும்பிட்டான்.

தேரிலே வீற்றிருந்த முருகக் கடவுளுக்குத் தீபாராதனை காட்டி முடிந்ததும், சூழ்ந்து நின்ற பக்தர்கள் முறையோடு தேர்வடத்தை எடுத்துப் பிடித்து இழுத்தார்கள். மாபெரும் சித்திரத்தேர் மெல்ல மெல்ல நகர்ந்து, தனது வீதி உலாவைத் தொடங்கியது.



நகர்ந்து செல்லும் தேரைப் பின்தொடர்ந்து, பஜனைக் காரர்கள் தமிழ்த்துதிப் பாடல்களைப் பண்ணோடு இசைத்து நடந்தார்கள். பஜனைக் கோஷ்டிக்குத் தலைமை தாங்கி முன்சென்ற ஒரு கிழவரின் கைகளிலே, நீண்ட தண்டுடன் கூடியதொரு சாம்பிராணித் தட்டிருந்தது. அதிலிருந்து புகைந் தெழுந்த சாம்பிராணிப் புகையின் மங்களகரமான வாசனை காற்றில் கலந்து பரவியது. அவர்களைத் தொடர்ந்து, அங்கப்பிரதட்சணம் செய்யும் பக்தர்களும் தேரைப் பின்தொடர்ந்து சென்றார்கள். சித்திரத்தேர், கோயிலின் பின்புறவீதிக்குத் திரும்பி மறைந்தது. அமுதனின் அம்மாவும், செல்வியின் தாயாரும் கோவிலினுள்ளே சென்று வணங்கி வந்தார்கள். தான் எடுத்து வந்த நறுமண விபூதியை அமுதனின் நெற்றியில் பூசினார் அம்மா.

இவ்வாறாக சாமி கும்பிடும் வேலைகள் முடிந்ததும், கோவிலின் பின்வீதியில் அமைக்கப் பட்டிருக்கும் கடைகளுக்கு விரைந்து சென்றிட அமுதனும், எழிலும், செல்வியும் துடிதுடித்தார்கள். பொம்மைக் கடைகளும், வளையல், மணிமாலைக் கடைகளும், ஐஸ்கிரீம் கடைகளும், தேன் குழல் இனிப்புக் கடைகளும் நிறைந்த அந்தப் பகுதி, சிறுவர்கள் அனைவருக்குமே சொர்க்கலோகம் போன்றது.

இருபத்தைந்து நாட்கள் நடைபெறும் கோவில் திருவிழாவில், தேர், தீர்த்தம், பூங்காவனம், என்ற இந்த இறுதியான மூன்று நாட்களும்தான்

சிறுவர்களுக்கு கொண்டாட்டத்தைத் தேடித்தருபவை. திருவிழாவின் இறுதியான இந்த நாட்களில், கடைத் தெருவில் விற்கும் பொம்மைகளின் விலைகள் பாதிக்குப் பாதியாய்க் குறைந்து போய்விடும். திருவிழா முடிவதற்குள் தங்களது விற்பனைப் பொருட்களை விற்று முடித்துவிட வேண்டுமென்பதில், வியாபாரிகள் அதிக கவனம் காட்டத் தொடங்குவதே, விலைச் சரிவுக்கு காரணமாகும். ஆதலால் பெற்றோர்கள் எல்லாரும் தங்கள் பிள்ளைகளுக்கு பொம்மைகள் வாங்கிக் கொடுப்பதற்கு ஏற்றதாக இந்த இறுதி மூன்று நாட்களையும் தெரிவு செய்து கொள்வார்கள். திருவிழாவின் ஆரம்ப நாட்களில், கடைத் தெருவில் சுற்றிச் சுற்றி வரும் சிறுவர், சிறுமியர்கள் தங்களுக்குத் தேவையான பொம்மைகளைத் தெரிவு செய்து வைத்துக் கொண்டு, இறுதி நாட்களில் வாங்கிச் கொள்வது வழக்கம். அமுதன், எழில், செல்வி மட்டும் இதற்கு விதிவிலக்கா என்ன? அமுதன் மண்ணிற முடைய ஒரு மோட்டார் வண்டியையும், எழில் சுழலும் காற்றாடிகளுடன் சுற்றியோடக்கூடிய ஒரு விமானப் பொம்மையையும், செல்வி அழகான தலைமுடிகளுடன் கூடியதொரு பொம்மைப் பாப்பாவையும் வாங்குவதென முடிவு செய்திருந்தார்கள். அவர்களது ஆசை இன்று நிறைவேறப் போகிறதே! அதற்காகத்தான் வேக வேகமாக விரைந்து பின்வீதிக்கு சென்றிடவும் துடித்தார்கள். அவர்கள் பார்த்து வைத்திருக்கும் பொம்மைகளை வேறு யாராவது வாங்கிவிட்டால் என்ன செய்வது? அமுதனின் அம்மாவும், செல்வியின் தாயாரும் தங்கள் பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு கடைவீதிக்கு வந்தார்கள்.

அமுதனின் அம்மாவைத் தூரத்திலிருந்தே பார்த்துவிட்டு கடலைக் கடைக்காரப் பாட்டியார், ''அம்மா! அம்மா! இங்கே வா'', என்று அன்புடன் கூப்பிட்டார். ஒரு ரூபாய் நாணய அளவில் அமைந்த குங்குமப் பொட்டும், மஞ்சள் பூச்சுமாய் சிரித்த பாட்டியார் மகிழ்வுடன் அம்மாவிடம் நலம் விசாரித்தார். ஒவ்வொரு வருடத் திருவிழாவிலும், அந்தக் கடலைக் கடைப் பாட்டியை அம்மா சந்திப்பது வழக்கம். பாட்டியாரின் கடையிலேயே கடலை வாங்குவதும் அம்மாவின் ஆண்டு தவறாத வழக்கம். வழமையான வாடிக்கையாளராதலால், பையில் நிரப்பும் கடலைகளின் அளவில் மிதமிஞ்சிய தாராளத்தை கடலைக்கடைப் பாட்டியார் காட்டுவார். அதைவிட இலவசமாக, சோளப் பொரிகளும். பட்டாணிப் பருப்பும் நிறைந்த பைகளையும் அம்மாவிடம் கொடுத்து மகிழ்வார். கடலையை வாங்கிக் கொண்டு, பாட்டியாரிடம் விடைபெற்று அங்கிருந்து நகர்ந்தார்கள்.

கடலையைக் கொறித்துக் கொண்டே அங்கிருந்து மணிக்கடைகளையும், வளையல் கடைகளையும் வேடிக்கை பார்த்து, அமுதனின் அம்மாவும், செல்வியின் தாயாரும் மெதுவாக நகர்ந்தார்கள். அவர்களுக்கு முன்னால் துள்ளிக் குதித்தோடிய அமுதனும், எழிலும் அவர்களுடன் செல்வியும் தங்களது பொம்மைக் கடைகளின் முன்னால் வந்து நின்றிருந்தார்கள். அங்கு வந்து சேர்ந்த அமுதனின் அம்மாவும், செல்வியின் தாயாரும் தங்களது பிள்ளைகளின் மனதைக் கவர்ந்த அந்த பொம்மை களை வாங்கிக் கொடுத்தார்கள். அமுதனுக்கும்,

எழிலுக்கும், செல்விக்கும் மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. சந்தோஷத்துடன் துள்ளிக் குதித்து, தங்களது தாயார்களுக்கு நன்றியும் சொன்னார்கள், பொம்மைகள் வாங்கி முடிந்ததும், எல்லாரும் ஐஸ்கிரீம் கடையை நோக்கி நடந்தார்கள். வண்ண வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட ஐஸ்கிரீம் கடைகளும், அவற்றின் எதிரிலேயே நிறுத்தப்பட்ட ஐஸ்கிரீம் வான்களும் பார்ப்போர் மனதையெல்லாம் கொள்ளை கொண்டன. அந்த ஐஸ்கிரீம் கடைகளிலும் சிலவற்றில் மட்டும் கூட்டம் நிறைந்து வழிந்திருக்கும். தரமான பொருட்களுக்கு என்றுமே மதிப்பு அதிகமல்லவா? தரமான பாலிலே தயாரான சுவைமிக்க ஐஸ்கிரீம்கள் அந்தக் கடைகளில் கிடைத்திடுவதே கூட்டத்துக்குக் காரணம்.


ஐஸ்கிரீம் சாப்பிட்டு முடிந்ததும், தேன்குழல் இனிப்பு விற்கப்படும் கடைக்கு எல்லாரும் வந்து சேர்ந்தார்கள். கருஞ்சிவப்பு நிறத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த தேன்குழல் இனிப்புக்களைப் பார்க்கும்போதே, அமுதனுக்கும், எழிலுக்கும், செல்விக்கும் நாக்கில் நீர்சுரந்தது. அவர்களை யெல்லாம் விட யாருக்கு அந்தத் தேன்குழல் இனிப்புக்கள் மிகவும் பிடிக்கும் தெரியுமா? அமுதனின் அம்மாவுக்குத்தான். பெரியதொரு காகிதப்பையிலே தேன்குழல் இனிப்புகளை வாங்கி நிறைத்துக் கொண்டு கடைவீதிக் காட்சிகளையும் வேடிக்கை பார்த்தவாறே அவர்கள் வீடு திரும்பினார்கள்.

□

## கொய்யா மரத்தடி வீடு.

அமுதனின் வீட்டுத் தோட்டத்திலே இரண்டு கொய்யா மரங்கள் நின்றன. இரண்டு மரத்துக்கும் வயது ஒன்றுதான். பல கிளைகளைப் பரப்பி, வளர்ந்திருந்தன அந்தக் கொய்யா மரங்கள். பழம் பழுக்கும் காலங்களில் கொய்யா மரங்களின் அயலில் கிளிகளுக்கும் அணில்களுக்கும், ஏன் சில வேளைகளில் குரங்குகளுக்குமே பஞ்சமிருப்பதில்லை. வயது ஒன்றான போதிலும் அந்த மரங்களில் ஒன்று சிறிது குட்டையாகவும், மற்றையது உயரமானதாகவும் இருந்தது. அதைக் கருத்தில் கொண்டு குட்டை மரம், நெட்டை மரம் என்று அவற்றுக்குப் பெயரிட்டிருந்தான் அமுதன். அமுதனுக்கு அந்த மரங்களில், குட்டை மரத்தையே மிகவும் பிடிக்கும். தாவி ஏறிப் பழங்களைப் பிடுங்க வசதியாக இருந்தது குட்டைக் கொய்யாமரம். அதைவிட, ஏறி அமர வசதியான விதத்தில் அந்த மரத்தின் கிளைகள் அமைந்திருந்தன.

அன்று சனிக்கிழமை. எதிர் வரும் செவ்வாய்க்கிழமை பொங்கல் பண்டிகையாதலால் திங்கட்கிழமையும் விடுமுறையாயிருந்தது. நான்கு நாட்கள் விடுமுறையென்றால் பள்ளிச் சிறுவர்களின் கொண்டாட்டத்தைச் சொல்லவும் வேண்டுமா? அமுதனின் அயல் வீட்டுச் சிறுவர், சிறுமியர்களில் பலர் அவனுக்கு அருமையான நண்பர்களாக விளங்கினார்கள். அவர்களில் முதன்மையானவர்கள் எழில், செல்வி. அமுதனின் வயதை ஒத்த சிறுவன் எழில். அருமைத்தங்கை செல்வி. எழிலையும்,



செல்வியையும் அன்று தனது வீட்டுக்கு விளையாடக் கூப்பிட்டிருந்தான் அமுதன். அதற்கான அனுமதியையும் முன்கூட்டியே அம்மாவிடம் கேட்டுப் பெற்றிருந்தான். இன்றைக்கு என்ன விளையாட்டு விளையாடலாம்? நண்பர்கள் மூவரது மனதிலும் மேலோங்கியது முக்கியமான அந்தக் கேள்வி. கள்ளன்- பொலிஸ், கிளித்தட்டு, ஓடிப்பிடித்து... என்று பலவிதமான விளையாட்டுக்களைப் பற்றியெல்லாம் சிந்தித்து விட்டு,

இறுதியாகக் கொய்யா மரத்தடியிலே சிறியதொரு வீடுகட்டுவதென்று நண்பர்கள் மூவரும் முடிவு செய்தார்கள். செல்வி ஆனந்தத்துடன் துள்ளிக் குதித்தாள். நல்லூர்க் கோவில்த் திருவிழாவிலே அவள் வாங்கியிருந்த மண் சட்டிபானைகளையும், குட்டிப் பொம்மைப் பாப்பாவையும் வைத்து விளையாட ஒரு வீடு கிடைக்கப் போகிறதே! அதுதான் அவள் மகிழ்ச்சிக்குக் காரணம். தனது மண்சட்டி, பானை களையும், பொம்மையையும் எடுத்துவர வீட்டுக்கு விரைந்தோடினாள் செல்வி.

அமுதனும், எழிலும் கொய்யா மரத்தில் சாய்ந்து அதன் குளிர்ந்த நிழலில் வசதியாக அமர்ந்து கொண்டார்கள். வீடு கட்டுவது பற்றி யோசிக்கத் தொடங்கினார்கள். தூண்களையும், சுவர்களையும், அமுதனின் வீட்டுப் பின்புறத்தில் குவிந்திருந்த கட்டைகள், பலகைகளில் சிலவற்றைப் பயன்படுத்தி அமைத்திடவும், வீட்டுக் கூரையை எழில் தன் வீட்டிலிருந்து எடுத்து வரப்போகும் தடித்த பிளாஸ்ரிக் தாளினால் அமைப்பதெனவும் முடிவானது. அது சரி, யன்னல்களை எவ்வாறு அமைப்பது? அமுதனின் மனதிலே நல்லதொரு யோசனை பிறந்தது. இயங்காமல், பழுதடைந்து மூலையில் கிடக்கும் பழைய குளிர்சாதனப் பெட்டியிலிருந்து, அதன் கம்பித்தட்டுகளை எடுத்த யன்னல்களை அமைத்திட முடிவு செய்தான்.

அதற்குள் அங்கு வந்து சேர்ந்த செல்வி, தான் எடுத்து வந்த விளையாட்டுப் பொருட்களைப்

பக்குவமாக, கொய்யா மரத்தடியில் வைத்தாள். வீட்டுக்குத் தேவையான திரைச்சீலைகளை அம்மாவிடம் கேட்டு எடுத்துவருவதாகவும் உற்சாகத்துடன் சொன்னாள். நண்பர்கள் தங்கள் திட்டத்தை செயல்படுத்தத் தொடங்கினார்கள். தேவையான பலகைகள், கட்டைகள், செங்கற்கள் போன்ற பொருட்களை, வீடுகட்டப்படப்போகுமிடத்துக்கு வேகமாகக் கொண்டு வந்து சேர்த்தார்கள். பலகை களையும் கட்டைகளையும் இணைக்க வசதியாக சுத்தியல், குறடு போன்ற கருவிகளையும் ஆணி களையும் அப்பாவிடம் கேட்டுப் பெற்றுக் கொண்டான் அமுதன். குழி தோண்டிக் கட்டைகளை நட்டார்கள். அளவான பலகைகளை அந்தக் கட்டைகளுடன் ஆணியால் இணைத்துச் சுவர்களை ஆக்கினார்கள். யன்னல்கள் அமைக்கப்பட்டு, வாசலும் வைத்தாயிற்று.

இவ்வாறாக சுவர்கள், யன்னல்கள், கதவுகள் அமைக்கும் வேலைகள் முடிந்ததும்தான் நண்பர் களுக்குக் கூரையைப் பற்றிய நினைவே வந்தது. தனது வீட்டுக்கு ஓடிச் சென்று, பிளாஸ்ரிக் தாளை எடுத்து வந்தான் எழில். கூரையையும் அமைத்தாயிற்று. வீட்டை அழகுபடுத்தும் வேலை ஒன்றுதான் மீதி. நண்பர்கள் மூவருக்கும் தாராளமாகப் போதுமானது அந்த வீடு.

வீட்டினுள் புகுந்து கொண்ட நண்பர்களுக்கோ மகிழ்ச்சி தாளமுடியவில்லை. சிறுவர்களிருவரும் வீட்டினுள்ளிருந்து வெளியே வந்து, அடுத்ததாகக் கொய்யாமரத்திலே ஒரு பரண் அமைப்பதைப் பற்றி

சிறுவர் மகிழ்வகம்
இல. 203/9, ஆசீர்வாதம் ஒழுங்கை
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்



ஆழந்து யோசித்திருந்தார்கள். தன்னந்தனியாக இருக்கும் தங்களது குட்டி வீட்டுக்குத் தகுந்த பாதுகாப்புத் தேவை என்பதில் அவர்கள் அக்கறை கொண்டிருந்தார்கள்.

செல்வி தனது மண்சட்டி, பானைகளை வீட்டினுள் அழகாக அடுக்கி வைத்து விட்டு, பொம்மையை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு திரைச் சீலைகளைத் தொங்கவிடும் பணியில் மூழ்கியிருந்தாள்.

கொய்யா மரத்தில் பரண் அமைக்கும் திட்டத்தைச் சிறிது பிற்போட்டுக் கொண்டு, கட்டி முடித்த வீட்டைப் பலப்படுத்தி அழகுபார்ப்பதில் சிறுவர்களிருவரும் மும்முரமாயிருந்தார்கள்.

சிறுவர்கள் கட்டிய கொய்யாமரத்தடி வீடு சிறிது ஆட்டம் கண்டது. வீட்டினுள் வேலைகளில் மூழ்கியிருந்த செல்வி பயந்து, அலறிக் கொண்டே வீட்டினுள்ளிருந்து வெளியே ஓட்டம் பிடித்தாள். அவளது பயத்தைப் பார்த்துக் குலுங்கிச் சிரித்த சிறுவர்கள், கட்டைகளைச் சுற்றிக் கற்களைப் போட்டு அடித்து இறுக்கி, வீட்டின் அஸ்திவாரத்தைப் பலப்படுத்தினார்கள்.

பயம் தெளிந்த செல்வியும் மீண்டும் வீட்டினுள் நுழைந்து தனது வேலைகளைத் தொடர்ந்தாள். அமுதனும். எழிலும் தங்களது கொய்யா மரத்து வீட்டைச் சுற்றிக் கட்டைகளை நாட்டி வேலியமைக்கும் வேலையில் இறங்கியிருந்தார்கள்.



செல்வி வீட்டுக்கு ஓடிச் சென்று, ஒரு அட்டையில், ''கொய்யா மரத்தடி வீடு'' என்று அழகாக எழுதி எடுத்து வந்தாள். நண்பர்கள் மூவரும் தங்களது குட்டி வீட்டின் வாசலிலே அந்த அட்டையை மாட்டினார்கள். ஒருவரையொருவர் பார்த்து, ஆனந்தமாகச் சிரித்தார்கள். அவர்களது முகத்திலே நல்லதொரு வீட்டைக் கட்டி முடித்த பெருமை நிறைந்திருந்தது. ஆனந்தமாக வீட்டினருகே கூடி, தங்கள் விளையாட்டையும் தொடர்ந்தார்கள். மாலையில் இருள் கூடும் வரை விளையாடி விட்டு வீடு திரும்பினார்கள் நண்பர்கள்.

□

## குட்டி வீட்டுக்கு விஜயம் செய்த சுட்டிக் குரங்கார்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. அதிகாலையிலேயே எழுந்து விட்ட அமுதன் கொய்யாமரத்தடிக்கு வந்தான். முன்தினம் கொய்யா மரத்தடியில் தனது நண்பர்களுடன் சேர்ந்து கட்டியவீட்டை ஒருமுறை சுற்றிப் பார்த்தான். நண்பர்கள் எழிலும், செல்வியும் பத்துமணியளவில் வருவதாகச் சொல்லியிருந்தார்கள்.

நண்பர்கள் வந்ததும் தங்கள் குட்டிவீட்டுத் தோட்டத்திலே அழகான பூச்செடிகளை நாட்டிடவும்



முடிவு செய்தான் அமுதன். அமுதனைப் பின் தொடர்ந்து அம்மாவும் அங்கு வந்து சேர்ந்தார். சிறுவர்களின் குட்டிவீட்டைப் பார்க்க அம்மாவுக்கு சந்தோஷமாயிருந்தது. ''கொய்யா மரத்தடி வீடு'', என்ற பெயர்ப்பலகையைப் பார்த்த அம்மா, சிரித்துக் கொண்டே, ''அழகான பெயரைத் தான் உங்கள் வீட்டுக்கு வைத்திருக்கீறர்கள்''. என்று பாராட்டினார். அம்மாவின் பாராட்டு அமுதனுக்கு மிகவும் சந்தோஷத் தைக் கொடுத்தது. நண்பர்கள், வருவதற்குள் காலைக் கடன்களை முடித்து, சாப்பிட்டு வரலாம் என்று சொல்லி, அமுதனையும் அழைத்துக் கொண்டு வீட்டுக்குள் சென்றார் அம்மா.

பத்துமணியானது. சாப்பிட்டு முடித்து நண்பர்களை எதிர்நோக்கியவாறே வீட்டு வாசற்படியில் அமர்ந்திருந்தான் அமுதன். அம்மா, வீட்டுத் தோட்டத்திலே சில குரோட்டன் செடிகளை நாட்டிக் கொண்டிருந்தார். தனது அருமை மகன் கட்டிய வீட்டுக்கும், சில குரோட்டன் செடிகளைப் பரிசாகக் கொடுத்தார் அம்மா.

எழிலும், செல்வியும் சொல்லி வைத்தது போலவே வந்து சேர்ந்தார்கள். தோட்டத்தில் வேலையில் மூழ்கியிருந்த அம்மாவுக்கு அன்புடன் வணக்கம் சொன்னார்கள். அம்மாவும் பதிலுக்கு வணக்கம் சொல்லி, அவர்கள் கட்டியிருந்த வீட்டைப் பாராட்டிச் சொன்னார். அம்மாவின் பாராட்டுக்கள் எழிலுக்கும், செல்விக்கும் அளவிட முடியாத மகிழ்ச்சியைக் கொடுத்தன.

"திரைச்சீலைகளை அவ்வளவு அழகாக எப்படித் தொங்கவிட்டாய்?" என்று செல்வியிடம் அக்கறையாக விசாரித்தார் அம்மா. அம்மா, தன்னிடம் அப்படி ஆர்வத்துடன் கேட்டதால், மிகுந்த பெருமை செல்வியின் மனதிலே பிறந்தது. புன்சிரிப்புடன், திரைச்சீலைகளைத் தொங்கவிட்ட வழிமுறைகளை அம்மாவுக்கு விளக்கிச் சொன்னாள் செல்வி.

சிறுவர்களிருவரும், மண் வெட்டியையும், அம்மா பரிசாகக் கொடுத்த குரோட்டன் செடிகளையும் எடுத்துக் கொண்டு வீட்டினருகே வந்து சேர்ந்தார்கள். அம்மாவுடன் கதைத்துக் கொண்டிருந்த செல்வியும் குடுகுடுவென்று ஓடி அங்கு வந்து சேர்ந்தாள். குரோட்டன் செடிகளை நாட்டும் இடத்தை நண்பர்கள் மூவரும் கூடிப் பேசித் தீர்மானித்துக் கொண்டார்கள். நண்பர்களிருவரும் குரோட்டன் செடிகளை நாட்டும் வேலையில் மூழ்கியிருக்க, வீட்டினுள் நுழைந்து, வீட்டை அழகுபடுத்தும் வேலையைத் தொடங்கினாள் செல்வி.

இப்படியாக அமுதன், எழில், செல்வியின் செயல்களையெல்லாம் உன்னிப்பாகக் கவனித்திருந் ததில், கொய்யாமரத்தின் கிளைகளில் ஓசைப்படாது அமர்ந்திருக்கும் ஒரு குட்டி உருவத்தைக் கவனிக்காமல் விட்ட தவறையல்லவா செய்து விட்டோம். பதுங்கியிருக்கும் குட்டி உருவம் யாரோ, எவரோ சிறிது அருகில் சென்றால் நன்றாகத் தெரியும். வாருங்கள் போகலாம். ஆ! அவர் வேறு யாருமில்லை.

சுட்டித்தனம் மிக்கதொரு குட்டிக்குரங்காரே அந்தச் சின்னஞ்சிறிய உருவத்தின் சொந்தக்காரர்.

கொய்யாப் பழங்களைத் தேடி, அந்தக் கொய்யா மரத்துக்கு வந்து சேர்ந்த குட்டிக்குரங்கார், சிறுவர்களின் திடீர் வரவினால் மிகவும் பயந்திருந்தார். ஓசைப்படாது அந்த இடத்தை விட்டு நழுவ எண்ணியவர், தன்னைப் போலவே சிறுவர்களாயிருந்த அமுதன், எழில், செல்வியைப் பார்த்து சிறிது பயம் நீங்கி, அவர்களது செயல்களையும் உன்னிப்பாகக் கவனித்திருந்தார். தங்களை நோட்டம் விட்டுக் கொண்டிருக்கும் குட்டிக் குரங்காரைப் பற்றி அறிந்திடாத நண்பர்களோ, தங்கள் வேலைகளைத் தொடர்ந்திருந்தார்கள்.

இவ்வளவு நேரமும் எழிலும், அமுதனும் செய்த வேலையைப் பார்த்திருந்து அலுத்துப் போய்விட்ட குட்டிக் குரங்கார், வீட்டினுள் சென்று மறைந்து, செல்வி என்ன செய்கிறாள் என்பதையும் பார்த்தறிந்திட முடிவு செய்தார். ஓசையெழுப்பாது, கொய்யா மரத்துக் கிளைகளிலிருந்தும் கீழிறங்கியவர், வீட்டின் பின்புறமாகச் சென்றார். பின்புற யன்னல் வழியே வீட்டினுள் மெதுவாய் எட்டிப் பார்த்தார். மண் சட்டியொன்றிலே செல்வி வைத்திருந்த பென்னம் பெரிய கொய்யாப் பழமும். செல்வியின் மடியிலிருந்த சின்னஞ்சிறிய பொம்மைப் பாப்பாவும், குட்டிக் குரங்காரை மிகவும் கவர்ந்தன. கொய்யாப் பழத்தைக் கையிலெடுத்துக் கடித்துச் சுவைபார்க்கவும், பொம்மைப் பாப்பாவை மடியில் வைத்து



விளையாடவும் மிகவும் ஆசைப்பட்டார் குட்டிக் குரங்கார். ஆனாலும், முன்பின் தெரியாத தன்னைப் பார்த்தால், கல்லால் அடித்துத் துரத்தி விடுவார்களோ அந்தக் குட்டிச் சிறுவர்கள் என்ற பயம் அவர் மனதில் நிறைந்திருந்தது.

சிறுவர்கள் அங்கிருந்து சென்றதும் வீட்டினுள் நுழைந்து, கொய்யாப் பழத்தையும் சாப்பிட்டு, பொம்மைப் பாப்பாவையும் வைத்து விளையாடலாம் என்று முடிவு செய்து கொண்டார் குட்டிக் குரங்கார்.

குட்டிக் குரங்கார் தன்னை நோட்டம் விடுவதை அறியாத செல்வி விளையாட்டில் மும்முரமாயிருந்தாள். மூன்று கற்களை வைத்து அடுப்பமைத்தாள். வீட்டிலிருந்து எடுத்து வந்திருந்த அரிசியை, மண்பானையிலே நிரப்பி அடுப்பிலே வைத்து சோறு சமைக்கத் தொடங்கினாள். ''இன்று கத்தரிக்காய் கறி சமைக்கலாம்'' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டவள், கத்தரிக்காய்கள் போலவே ஊதா நிறத்திலிருந்த குரோட்டன் இலைகளைச் சிறியசிறிய துண்டுகளாக நறுக்கி வைத்தாள். கத்தரிக்காய்களுடன், கீரைக் கறியும் சமைத்தால் நன்றாயிருக்கும் என்று நினைத்தவள், கீரை வாங்கிவர முடிவு செய்தாள். பொம்மைப் பாப்பாவைப் பத்திரமாக அதன் படுக்கை யிலே படுக்க வைத்து விட்டு வெளியே வந்தாள்.

கொய்யா மரத்திலிருந்து சிறிய தூரத்திலே பச்சைப் பசேலென்று செழித்து வளர்ந்திருந்த அறுகம் புற்களைக் கீரையாக நினைத்து அவற்றைப் பறிக்கத் தொடங்கினாள் செல்வி. அருமையான கீரைகள் வீட்டுத் தோட்டத்திலேயே வளர்ந்திருக்கும்போது, கடைக்குச் சென்று காசை வீணாக்குவதேன் என்று மனதுள் நினைத்துக் கொண்டாள்.

எழிலிடமும், அமுதனிடமும், சொல்லி அந்தக் கீரைத் தோட்டத்தைச் சுற்றிப் பலமானதொரு வேலியமைத்திடவும் முடிவு செய்தாள்.

பொல்லாத ஆடு, மாடுகள் அருமையான அந்தக் கீரைத் தோட்டத்தைப் பாழ்படுத்தி விடுமல்லவா? கீரை

பறிக்கும் வேலையில் மும்முரமாய் மூழ்கியிருந்தாள் செல்வி. குரோட்டன் செடிகளை நாட்டி முடித்த அமுதனும், எழிலும், அந்தச் செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சிட முடிவு செய்தனர். தண்ணீர் எடுத்து வர விரைந்து சென்றார்கள்.

யாரும் இல்லாத அந்தச் சூழ்நிலையை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார் குட்டிக் குரங்கார். ஓசைப்படாது, முன்புறவாயில் வழியாக வீட்டினுள் நுழைந்தார். வீட்டினுள் நுழைந்தவர், ஆசைமிகக் கொண்டவராய் அங்குமிங்கும் பார்த்தார். மண் சட்டியிலே செல்வி வைத்திருந்த கொய்யாப் பழத்தை எடுத்து ஒரு கடிகடித்தார். மறுகையிலே படுக்கையிலிருந்த பொம்மைப் பாப்பாவையும் எடுத்து வைத்துக் கொண்டார்.

பாப்பாப் பொம்மையின் மென்மையான தலைமுடியைத் தன் இரு கைகளாலும் மெதுவாக இழுத்துப் பார்த்தார். அதற்கு வசதியாக இருக்குமாறு, கொய்யாப் பழத்தைத் தனது வாயிலே கௌவி வைத்துக் கொண்டார். சிறிது நேரம் கழிந்தது. கீரை பறித்து முடித்த செல்வி, அடுப்பில் ஏற்றி வைத்த சோற்றுப் பானை நினைவுக்கு வந்தவளாய் வேகமாகத் திரும்பி வீட்டுக்குள் நுழைந்தாள்.

வீட்டுக்குள் நுழைந்த செல்வி, வாயிலே கொய்யாப்பழமும், கைகளிலே தனது அருமை பாப்பாப் பொம்மை சகிதமுமாக அமர்ந்திருந்த குட்டிக்





குரங்காரைப் பார்த்து பேரதிர்ச்சி கொண்டாள். பயத்தால் ஓவென்று உரக்கக் கத்தினாள்.

செல்வியின் கூக்குரலைக் கேட்ட குட்டிக் குரங்காரோ செல்வியை விடப் பல மடங்கு திகிலடைந்தார். வாயிலிருந்த கொய்யாப் பழத்தையும் நழுவவிட்டு, கையில் வைத்திருந்த பாப்பாப் பொம்மையையும் தரையிலே போட்டுவிட்டு, அங்கிருந்து தலைதெறிக்க ஓட்டம் பிடித்தார்.

ஓடிச் சென்ற குட்டிக் குரங்கார், கொய்யா மரத்தின் உச்சிக் கிளைகளில் ஒன்றில் ஏறி நின்று, கீழே பார்த்தார். செல்வியின் கூக்குரலைக் கேட்ட அமுதனும், எழிலும் விரைந்தோடி வந்தார்கள். வீட்டை விட்டு வெளியே வந்த செல்வி அழுகை பொங்க நடந்தவற்றையெல்லாம் அவர்களிடம் சொன்னாள். தலையைச் சொறிந்தபடியே, கொய்யாமரத்து உச்சிக் கொம்பில் அமர்ந்திருந்த குட்டிக் குரங்காரைப் பார்த்து அமுதனும், எழிலும் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்கள்.
□

## அமுதனும் குட்டி விமானமும்.

ஒருநாள்- அமுதன் தனது குட்டி விமானப் பொம்மையையும் எடுத்துக்கொண்டு, விளையாடு வதற்காகப் பூங்காவிற்குச் சென்றான். அன்று ஞாயிற்றுக் கிழமை. மாலைநேரம். இனிமையான குளிர் காற்று. மலர்களின் வாசனை. இவை எல்லாம் அமுதனின் மனதில் அளவிட முடியாத ஆனந்தத்தை அள்ளி வழங்கின. பூங்காவின் மத்தியிலே அமைக்கப் பட்டிருந்த உயர்ந்த தூணில் பொருத்தப்பட்டிருந்த தொரு பெரிய வட்டக் கடிகாரம் மணி நான்கைக் காட்டியது. அதனருகே அமைக்கப்பட்டிருந்த ஒலிபெருக்கி யிலிருந்து பிறந்த இனிமையான சிறுவர் பாடல்கள் பூங்காவெங்கும் பரவியிருந்தன.



பொம்மை விமானத்தை வைத்துக் கொண்டு நீண்ட நேரமாய் விளையாடிய அமுதன், சிறிது களைப்படைந்தான். அங்கிருந்த பெரியதொரு ஆலமர நிழலிலே வந்தமர்ந்து மரத்திலே சாய்ந்தவாறு சிறிது ஓய்வெடுத்தான். பொம்மை விமானத்தைப் பத்திரமாகத் தன்னருகே வைத்துக் கொண்டான். அதே நேரத்தில் ஒலிபெருக்கியிலிருந்து, அமுதனுக்கு நன்கு பிடித்த, நான்காம் வகுப்புப் பாடப்புத்தகத்தில் படித்துத் தெரிந்த கொண்ட நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் ''ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை, ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!.......'' என்ற பாட்டு ஒலிபரப் பானது. கண்களை மூடிக் கொண்டு, இனிமையான அந்தப் பாடலைக் கேட்டு இரசித்திருந்த அமுதன், தன்னையுமறியாமல் ஆழ்ந்து தூங்கியும் போனான்.

அமுதனின் அருகே ''விர்ரென்று'' ஏதோ ஒரு இயந்திரத்தின் இரைச்சல் சத்தம் கேட்டது. திடுக்கிட்டு, சத்தம் வந்த திசையில் பார்த்தவனுக்கோ தன் கண்களையே நம்பமுடியவில்லை!

என்ன ஆச்சரியம்! அமுதனின் குட்டி விமானத்தில் காற்றாடிகள் வேகமாகச் சுழன்றதால் எழுந்ததே அந்த விர்ரென்ற சத்தம். அமுதன் அமர்ந்திருந்த இடத்திலிருந்து சிறிது தூரத்தில் நின்றிருந்த அந்தக் குட்டி விமானம், இப்போது மெதுமெதுவாக அங்கிருந்து நகர ஆரம்பித்தது. விமானத்தின் வால்ப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சின்னஞ்சிறிய சிவப்பு விளக்குகள் ''மினுக்மினுக்'' என்று எரிந்து அணைந்தன. புல்வெளியிலே நின்றிருந்த விமானம், பூங்காவின்

நடைபாதைக்கு ஓடிச் சென்று நின்றது. அந்த நடைபாதையை, வசதியானதொரு ஓடுபாதையாகப் பயன்படுத்திக் கொண்ட குட்டிவிமானம், மின்னல் வேகத்தில் ஓடிச் சடுதியாக வானில் எழுந்து பறந்தது. இவ்வளவு நிகழ்ச்சிகளும் ஒரு சில நிமிடங்களிலேயே நடந்து முடிந்து போயின.

எதுவுமே புரியாது திருதிருவென விழித்த அமுதன், தன்னை விட்டுப் பறந்துபோன குட்டி விமானத்தைத் தேடி, வானத்தைப் பார்த்தான். வானிலே வெகு தொலைவில் சின்னஞ்சிறியதொரு புள்ளி போலத் தென்பட்டது அவனது குட்டி விமானம்.

என்ன செய்வது இப்போது? அருமையான தனது குட்டி விமானம் தன்னைவிட்டுத் தன்னந்தனியாகப் பறந்து போனதை அமுதனால் நம்பவே முடியவில்லை. இது முன்னரே தெரிந்திருந்தால் குறும்புத்தனம் மிக்க குட்டி விமானத்தின் செட்டைகளில் கயிற்றை இணைத்து, மரத்தில் இறுகக் கட்டி விட்டல்லவா தூங்கியிருப்பான். சரி, போகட்டும் என்று சொல்லியபடியே நீண்டதொரு பெருமூச்சுடன், மீண்டும் மரத்திலே சாய்ந்து கொண்டான். கண்களை மூடிக்கொண்டு மரத்திலே சாய்ந்திருந்த அமுதனின் மனதிலே சொல்ல முடியாத அளவுக்கு வேதனை நிறைந்திருந்தது. குட்டி விமானம் தன்னை ஏமாற்றிவிட்டுப் பறந்து செல்லும் என்பது முன்கூட்டியே தெரிந்திருந்தால், அதன் இறப்பர் சில்லுகளைக் கயிற்றால் கட்டி வைத்திருப்பானே!

பலமான சிந்தனையில் மூழ்கியிருந்த அமுதனின் கவனத்தைக் கலைத்தது விர்ரென்றதொரு சத்தம். கண்ணைத் திறந்து ஆவலுடன் அங்குமிங்கும் பார்த்தான் அமுதன்.

ஆ! அதோ அவனது குட்டி விமானம் அவனை நோக்கிப் பறந்து வருகிறதே. துள்ளிக் குதித்து எழுந்து ஓடிப் பறந்துவரும் விமானத்தைப் பிடித்திடத் தயாராய் நின்றிருந்தான் அமுதன். அமுதனை நோக்கிப் பறந்து வந்த அந்தப் பொல்லாத குட்டி விமானமோ, விர்ரென்று அவனை விட்டு விலகிச் சென்று மரத்தைச் சுற்றி இரண்டு மூன்று தடவைகள் வட்டமிட்டுப் பறந்தது. விமானத்தைப் பிடித்திட அதன் பின்னால் பாய்ந்தோடிய அமுதனின் முயற்சி பலிக்கவில்லை. ஓடிக் களைத்துப் புல் தரையில் பொத்தென்று விழுந்த அமுதன் பொல்லாத விமானத்தைக் கோபத்துடன் நிமிர்ந்து பார்த்தான்.

சில நிமிடநேரங்கள் வானில் பறந்து வித்தைகள் காட்டிய குட்டிவிமானம், இப்போது பறந்து வந்து தரையில் இறங்கி அமைதியாய் நின்றிருந்தது. ஆனால் விர்ரென்று சுழலும் காற்றாடிகளும், ''மினுக்மினுக் கென்று'' எரிந்து அணையும் வால்புறத்துச் சிவப்பு விளக்குகளும், குட்டி விமானம் எந்த நிமிடத்திலும் மீண்டும் பறந்து சென்றிடலாம் என்பதை அறிவித்தன. அதைப்புரிந்து கொண்ட அமுதன் விரைந்து, எழுந்தோடி, விமானத்தின் வாலைப் பலமாகப் பிடித்துக் கொண்டான்.

பொல்லாத குட்டி விமானமோ புல் தரையில் சிறிதுசிறிதாக நகர்ந்தோடத் தொடங்கியது. முன்னர் போல விமானத்தைக் கோட்டைவிட்டுவிட விரும்பாத அமுதன், கஷ்டப்பட்டு விமானத்தின் வால்ப்பகுதியில் ஏறி நகர்ந்து இருக்கையில் வந்தமர்ந்தான்.

அமுதன் விமானத்துக்குள் ஏறி அமர்ந்ததுதான் தாமதம், புல்தரையில் வேகமாக ஓடி, வானில் எழுந்து பறக்கத் தொடங்கியது, குட்டி விமானம். அமுத னுக்கோ மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. விமானத்தி லிருந்தும் எட்டிக் கீழே பார்த்தான். பூங்காவும், அங்கு விளையாடும் சிறுவர்களும் படிப்படியாகச் சிறிதாகிச் சிறிதாகிப் புள்ளிகள் போலத் தென்பட்டார்கள். நகரத்து வீடுகள், கட்டடங்கள், சாலைகள் எல்லாமே சின்னஞ்சிறிய விளையாட்டு பொம்மைகள் போலக் காட்சி கொடுத்தன. இப்போது ஏறக் குறைய எதையுமே பார்க்க முடியவில்லை. பஞ்சு போன்ற வெண்முகில் கூட்டங்கள் பார்க்கும் திசைகளிலெல்லாம் பர்விக் கிடந்தன. முகத்தில் வந்து மோதிச் செல்லும் அந்தப் பஞ்சுமுகில் கூட்டங்களைக் கையினால் பிடித்திட முயற்சி செய்தான் அமுதன். மூக்கில் பொருத்தப்பட்டு, விர்ரென்று வேகமாகச் சுழன்று காற்றாடியின் உதவியினால் பஞ்சுமேகக் கூட்டங்களை விலக்கிக் கொண்டு வேகமாகப் பறந்தது குட்டிவிமானம். வானில் பறந்து பயணம் செய்த வெள்ளைநிறப் பறவைக் கூட்டங்கள், அமுதனின் குட்டி விமானத்துக்கு வழிவிட்டு ஒதுங்கி ஓரமாகப் பறந்து சென்றன.

சிறிது நேரம் கழிந்தது.

விர்ரென்று, சீரான வேகத்துடன் சுழன்றிருந்த குட்டி விமானத்தின் முன்புறக் காற்றாடியிலிருந்து பட்பட்டென்றதொரு சத்தம் கேட்டது. சத்தத்தைத் தொடர்ந்து காற்றாடியின் வேகமும் படிப்படியாகக் குறையத் தொடங்கியது. அமுதனுக்கோ எதுவுமே புரியவில்லை. மெல்லியதாகப் பயம் படரத் தொடங்கியது. காற்றாடியின் வேகத்துடன் விமானத்தின் வேகமும் படிப்படியாகக் குறைந்தது. மெல்லமெல்லக் கீழிறங்கத் தொடங்கியது. விமானத்தின் முன்புறக் கண்ணாடியை இறுகப் பிடித்திருந்த அமுதனின் உடலோ பயத்தால் வெடுவெடுவென நடுங்கியது. இவ்வளவு உயரத்திலிருது கீழே விழுந்தால், எப்படியான முடிவு வந்து சேரும் என்பது தெரியாதா என்ன அவனுக்கு? கண்களை இறுக மூடிக்கொண்டு, கடவுளை வேண்டினான் அமுதன்.

பழுதுபட்டிருந்த குட்டிவிமானம், வேகமாகத் தரையை நோக்கி இறங்கியது. குட்டி விமானத்தின் முன்புறக் கண்ணாடியை இரு கைகளாலும் இறுகப் பிடித்திருந்த அமுதன், கண்களை மூடிக்கொண்டு கடவுளைப் பிரார்த்தித்திருந்தான்.

நிமிடங்கள் சில கழிந்தன. பட்டென்று, விமானத்தின் சில்லுகள் ஏதோ ஒரு பொருளில் மோதி நின்றன. அமுதனுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. அவ்வளவு வேகமாகத் தரையை வந்தடைந்து விட்டேனா? என்ற கேள்வி மனதில் பொங்கியெழுந்தது. மெதுவாகக் கண்களைத்திறந்து அங்குமிங்கும் பார்த்தான். என்ன ஆச்சரியம்?

வெண்முகில் கூட்டங்களின் மத்தியில் அல்லவா அவனது குட்டி விமானம் நின்றிருக்கிறது. இல்லை, இல்லை இன்னமும் பயணத்தைத் தொடர்ந்திருக்கிறது. குட்டி விமானத்தின் காற்றாடிகளோ இயங்காது ஓய்ந்திருந்தன. ஆனாலும் விர்ரென்ற, இயந்திர ஒலிமட்டும் இன்னமும் கேட்டுக் கொண்டிருந்தது. முகில் கூட்டங்கள் நிறைந்திருந்ததால் சுற்றுமுற்றும் எதையுமே அமுதனால் பார்க்க முடியவில்லை. அமுதனின் இதயம் பயத்தால் படபடவென அடித்துக் கொண்டது.

ஒரு சில நிமிடங்கள் கழிந்தன. அமுதனுக்கு எல்லாமே புரிந்து போயிற்று. அமுதனின் குட்டி விமானம் நின்றிருந்தது தரையிலல்ல. பென்னம் பெரியதொரு பயணிகள் விமானத்தின் பிரம்மாண்டமான செட்டையில் இறங்கிப் பத்திரமாக நின்றிருந்தது அவனது குட்டி விமானம். குட்டிவிமானத்தைத் தனது செட்டைகளின் தாங்கியவாறே விரைந்து பயணத்தைத் தொடர்ந்திருந்தது அந்தப் பென்னம் பெரிய விமானம். முதலில் பயந்து போனாலும், இப்போது அளவிட முடியாத மகிழச்சியடைந்தான் அமுதன். தரையில் விழுந்து நொருங்கிடாமல், பத்திரமாக அந்தப் பென்னம் பெரிய விமானத்தின் செட்டையிலே தன்னையும், குட்டி விமானத்தையும், கொண்டு வந்து சேர்த்த கருணை நிறைந்த கடவுளுக்குப் பலமுறை நன்றிகள் சொன்னான்.

பென்னம் பெரிய விமானத்தினுள் யன்னலருகே அமர்ந்து வெளியே வேடிக்கை பார்த்திருந்த

சிறுவனொருவன், விமானத்தின் செட்டையில் வந்திறங்கி நின்ற குட்டிவிமானத்தைக் கண்டு கொண்டான். ஆச்சரியத்துடன் அவன் எழுப்பிய குரலில் விமானத்தில் பயணம் செய்த அனைவரும் யன்னல்கள் வழியே வெளியே எட்டிப் பார்த்து வியந்து போனார்கள். பயணிகள் பகுதியில் ஏற்பட்ட சலசலப்பைக் கேட்ட விமானியும், தனது விமானத்தின் செட்டைகளில் ஒன்றில் வந்து இறங்கியுள்ள குட்டி விமானத்தைப்



பார்த்து விட்டார். அந்தக் குட்டி விமானத்தையும் அதிலே அமர்ந்திருக்கும் சிறுவனையும் பத்திரமாக மீட்டெடுக்க முடிவு செய்தார்.

பறந்து செல்லும் விமானத்தின் செட்டைக்குச் சென்று சிறுவனை மீட்டெடுப்பது மிகவும் கஷ்டமான காரியமாதலால், அருகிலிருக்கும் ஏதாவது ஒரு விமான நிலையத்தில் தனது பெண்ணம் பெரிய விமானத்தைக் கொண்டு சென்று தரையிறக்கவும் முடிவு செய்தார். அருகிலிருந்ததொரு விமான நிலையத்தில் முன்கூட்டியே அநுமதியைக் கேட்டுப் பெற்ற விமானி, பத்திரமாகத் தனது விமானத்தை, விமான நிலையத்தின் ஓடுபாதையில் தரையிறக்கினார்.

முன்னதாகவே அந்தப் பெரிய விமானத்தின் செட்டையில் வந்திறங்கிய குட்டி விமானத்தைப் பற்றிய தகவலை விமானி சொல்லியிருந்ததால், விமான நிலையத்தில் கூட்டம் நிறைந்து வழிந்தது. கையில் புகைப்படக் கருவிகளுடன் பத்திரிகை நிருபர்களும், தொலைக்காட்சி நிருபர்களும் கூடியிருந்தார்கள்.

பத்திரமாகத் தரையிறங்கி நின்ற பெண்ணம் பெரிய விமானத்தின் செட்டையில் ஏறிக் குட்டி விமானத்தை மீட்டெடுத்தார் விமானி. குட்டி விமானத்தையும் அமுதனையும் சுற்றிப் பெருந்திரளான மக்கள். அமுதனின் குட்டி விமானத்தைத் தொட்டுப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். அந்த நேரம் பார்த்து பலமான மழை, சோவென்று பொழியத் தொடங்கியது.



மழைத்துளிகள் முகத்தில் பட்டுத் திடுக்கிட்டுக் கண்விழித்தான் அமுதன். பூங்காவிலே, மரத்தடியிலே அமர்ந்திருந்ததும், அருகில் நின்றிருந்த தனது குட்டி விமானத்தினருகே சிறுவர்கள் சிலர் அமர்ந்து ஆசையாக அதைத் தொட்டுத் தொட்டுப் பார்த்திருந் ததும், அமுதனுக்குப் புரிய வெகுநேரமாகவில்லை. குட்டி விமானத்தில் அமர்ந்து வானில் எழுந்து பறந்ததும், பழுதுபட்ட விமானத்துடன், பென்னம் பெரியதொரு விமானத்தின் செட்டைகளிலே இறங்கியதும், விமான நிலையத்தில் அந்தப் பென்னம் பெரிய விமானம் தரையிறங்கியதும், எல்லாமே கனவுதான் என்பது அவனுக்குப் புரிந்து போயிற்று.

ஆயினும், உண்மையிலேயே தனது குட்டி விமானத்தில் பறந்து சென்று சாகசம் செய்தது போன்ற பெருமை மனதிலே பொங்க, குட்டி விமானத்தையும் கையில் எடுத்துக் கொண்டு, வீடு நோக்கி ஓட்டம் பிடித்தான் அமுதன்.

□

## அம்மாவும் அமுதன் வளர்த்த குட்டிப் பூனையும்.

அமுதன் ஒரு குட்டிப் பூனையைச் செல்லமாக வளர்த்து வந்தான். கருமை நிறம் கொண்ட அந்தக் குட்டிப் பூனை மிகவும் அழகானது. புசுபுசுவென்ற அடர்த்தியான வால், அந்தக் குட்டிப் பூனையின் அழகை மேலும் அதிகமாக்கியது. குட்டிப் பூனை, இந்த உலகிலே இருக்கும் குறும்புத்தனங்களுக் கெல்லாம் தனித்தலைவனாய் விளங்கியது. இந்த நிமிடம் அமுதனின் மேசைமேல் அமர்ந்திருக்கும் பூனைக்குட்டி, மறுநிமிடமே சமையல் அறையில், பால் பானையின் மூடியைத் தட்டித் திறக்கும் பணியில்



மும்முரமாய் இறங்கியிருக்கும். குறும்புத்தனங்கள் பல நிறைந்திருந்த போதிலும், அமுதன் மேல் அளவில்லாத பாசத்தைக் காட்டி வந்தது அந்தக் குட்டிப் பூனை.

குட்டிப் பூனைக்கு, சிவப்பு நிறமானதொரு ரிப்பனைக் கட்டிவிட்டான் அமுதன். தனது கழுத்தில் அமுதன் கட்டிவிட்ட ரிப்பனைக் கழற்றி எறிந்திடப் பலமாக முயற்சி செய்த குட்டிப் பூனையால், தனது முயற்சி பலிக்காதால், அந்தச் சிவப்பு ரிப்பனை நிரந்தரமாகவே தனது கழுத்தில் அணிந்திருக்க வேண்டியதாயிருந்தது.

மாலை நேரங்களில் அமுதன் வீட்டுத் தோட்டத்தில் அமர்ந்து கதைப்புத்தகம் படிக்கும் போது. தோட்டத்துக் கொய்யாமரத்தின் உச்சிக் கிளைகளில் ஏறிக் காகங்களுக்குக் குறி வைத்திருப்பது குட்டிப் பூனையாரின் வழக்கம். அவ்வாறாகக் குறிவைத்துப் பதுங்கியிருக்கும் வேளைகளில் பொல்லாத காக்கை யார்களிடம் மாட்டிக் கொண்டு வசமாகக் கொத்தும் வாங்கியிருக்கிறார் குட்டிப் பூனையார்.

குட்டிப் பூனை மேல் அமுதனின் அம்மாவுக்கு அன்பு அதிகம். ஆனாலும் சிலவேளைகளில் பூனையார் செய்யும் எல்லை மீறிய குறும்புச் செயல்களால் பொல்லாத கோபமும் அம்மாவுக்கு உண்டாகும். காலை வேளைகளில் அசந்து தூங்கும் அம்மாவின் காதருகில் சென்று புர், புர் என்று ஓசை எழுப்பித் தூக்கத்தைக் கலைப்பதும், தோட்டத்தில் வேட்டையாடிய பூச்சிகளை எடுத்து வந்து அம்மாவின்

கட்டிலில் பரிசாக வைப்பதும், சில வேளைகளில் விஷம் நிறைந்த பூச்சிகளைப் பிடித்து வந்து அம்மாவின் செருப்புகளின் மேலேயே வைப்பதும், அம்மாவுக்குப் பிடிக்காத, குட்டிப் பூனையாரின் குறும்புச் செயல்கள்.

செருப்புக்களை அணியும்போது, அவற்றின் மேல் குற்றுயிராக்க் கோபத்துடன் கிடக்கும் விஷப் பூச்சிகள், அம்மாவின் கால்களின் மேலல்லவா தங்கள் கோபத்தைக் காட்டிவிடும்! தனது குறும்புச் செயல் களில் எவ்வளவு அபாயம் நிறைத்திருக்கிறது என்பது பாவம் குட்டிப் பூனையாருக்குத் தெரிந்திருக்கவில்லை. பூச்சிகள் நிச்சயமாகப் பிடிக்கும் என்பது அவரது எண்ணம் போலும்.

அன்றொருநாள் வங்கிக்கு ஏதோ வேலையாகச் சென்றுவர முடிவு செய்தார் அம்மா. அமுதன் தனது நண்பனின் வீட்டுக்குச் சென்றிருந்ததால், காலையிலிருந்து அம்மாவின் பின்னாலேயே சுற்றிக் கொண்டிருந்தார் குட்டிப் பூனையார்.

கிளம்பத் தயாரான அம்மா, தேவையான பொருட்களைத் தனது கைப்பையில் எடுத்து வைத்தார். கைப்பையில் பொருட்களை வைத்தவர், பையை மூடாது, திடீரென்று ஏதோ நினைவுக்கு வந்தவராக சமையறைக்கு விரைந்து சென்றார். அம்மா அங்கிருந்து நகர்ந்ததும் தான் தாமதம், அம்மாவின் கைப் பைக்குள் குதித்து தனது ஆராய்ச்சி வேலையைத் தொடங்கினார் குட்டிப் பூனையார். சமையறையிலிருந்து வேகமாகத் திரும்பி வந்த அம்மா



கைப்பைக்குள் பூனையார் நடத்தும் ஆராய்ச்சி வேலையைப் பற்றி அறியாத வராய், பையை மூடித் தோளில் மாட்டிக் கொண்டு வங்கிக்குக் கிளம்பினார். பைக்குள் ஏறியிருந்த குட்டிப் பூனையாரோ பையில் பயணம் செய்வதில் சுகம் கண்டு தூங்கியும் போனார். அம்மாவின் பையில், அழகுக்காக அமைக்கப்பட்டிருந்த துவாரங்களால். நமது குட்டிப் பூனையார், காற்றுப் பஞ்சத்திலிருந்து தப்பிப் பிழைத்து, சுகமான தனது தூக்கத்தைத் தொடர முடிந்தது.

வங்கியை வந்தடைந்த அம்மா, சில பத்திரங் களை நிரப்ப வேண்டியிருந்ததால், கைப்பையிலிருந்து பேனாவை எடுத்திடப் பையைத் திறந்தார். அவ்வாறாக அம்மா பையைத் திறந்ததால், பைக்குள் பரவிய வெளிச்சம், குட்டிப் பூனையாரின் சுகமான தூக்கத்தைக் கெடுத்து விட்டது. பேனாவுக்காக பையினுள் கையைவிட்ட அம்மாவின் கைகளில் மாட்டியது குட்டிப் பூனையாரின் வால். பூனையாரின் வாலை,

கொடியதொரு கரும்பாம்பு என்று தவறாக நினைத்துக் கொண்ட அம்மாவின் அபயக் குரல் அந்த வங்கியையே அதிர வைத்தது.



அம்மாவின் எதிரே அமர்ந்திருந்த, குண்டுத் தேகம் கொண்ட வங்கி அலுவலர், தரையில் தொப்பொன்று குதித்து நின்ற கறுப்புப் பூனையாரைப் பார்த்து அதிர்ச்சி மிகக் கொண்டு. மேசைமேல் ஏறி நின்றிருந்தார். சில நிமிடங்களில் நடந்ததெல்லாம் அம்மாவுக்குப் புரிந்து போயிற்று. வந்த வேலையையும் முடித்துக் கொண்டு ஒரு சில நிமிடங்களில் வங்கியையே பயத்தால் நடுநடுங்க வைத்த வீரப்பிரதாபர் குட்டிப் பூனையாரையும் தூக்கிக் கொண்டு வீடு திரும்பினார் அம்மா. அம்மாவின் அணைப்பிலே சுகம் கண்டு தனது கண்களை மூடித்தூங்கியிருந்தார் குட்டிப் பூனையார்.
□

## அம்மாவின் மோட்டார் வண்டி.

அமுதனின் அம்மாவுக்கு நல்லதொரு மோட்டார் வாங்கி, அதைத் தானே ஓட்டவும் வெகுநாட்களாக ஆசை. சிறுமியாக இருக்கும் காலங்களிலேயே அம்மாவின் மனதில் அந்த ஆசை இருந்து வந்ததை அம்மா சொல்லி அமுதனும் நன்கறிவான்.

கடந்த சில நாட்களாகவே பலவிதமான மோட்டார் வண்டிகள், அமுதனின் வீட்டு வாசலில் வந்து நின்று போயின. வண்டித் தரகர்களிடம் முன்கூட்டியே சொல்லியிருந்ததால், தினமும் பல வண்டிகளை வீடுவரை கொண்டு வந்து காட்டிச் செல்வார்கள்.

நாட்கள் சில கழிந்தன. அந்த நாட்களில் பார்த்த வண்டிகள், எதுவுமே அம்மாவுக்குப் பிடிக்கவில்லை. ஒரு வண்டியின் நிறம் பிடிக்கவில்லை, இன்னுமொரு வண்டியில் வேறு ஒரு குறை, வண்டி பிடித்திருந்தால் அதன் விலையோ, அம்மா சிறுகச் சிறுக சேர்த்து வைத்திருந்த பணத்தில் இருமடங்காக இருக்கும். வண்டியை நன்றாகப் பார்த்து மிகவும் பிடித்த நிலையில் அதன் விலையைக் கேட்கும், அம்மாவின் முகம் சோகத்தால் வாடுவதைப் பலமுறை அமுதன் கண்டிருக்கிறான்.

அம்மாவுக்குக் கவலையை உண்டாக்கிய அந்த வண்டியின் மீது அளவிட முடியாத கோபம் அவன் மனதில் பொங்கியெழும். யாரும் பார்க்காத வேளையில் அந்த வண்டியைத் தனது கால்களால்

உதைத்துத் தனது கோபத்தைத் தணித்துக் கொள்வான்.

பெரியவனாக வளர்ந்ததும் அம்மாவுக்கு ஒரு புத்தம் புதிய மோட்டார் வண்டியை வாங்கிக் கொடுப்பேன் என்று மனதில் சபதமும் செய்து கொள்வான்.

அன்றொரு நாள், காலை பத்துமணியளவில் வீட்டு வாசலில் வண்டியொன்று வந்து நின்றது. வீட்டுக் கதவைத்திறந்து வேகமாகத் துள்ளிக் குதித்தோடி வெளியே வந்தான் அமுதன். வண்டியிலிருந்து, அதன் சொந்தக்காரரும், தரகரும் வெளியே இறங்கி வந்தார்கள்.

சமையறையில் வேலையாக இருந்த அம்மாவும், தனது அறையில் ஏதோ எழுதிக் கொண்டிருந்த அப்பாவும் அதற்குள் அங்கு வந்து சேர்ந்தார்கள். வண்டியின் சொந்தக்காரரை அறிமுகம் செய்து வைத்த தரகர், அந்த வண்டியைப் பார்வையிட வசதியாக முற்றத்துக் கதவைத் திறந்து உள்ளே விடுமாறு அம்மாவிடம் கேட்டுக் கொண்டார். வீட்டின் அயலில் வசிக்கும் சிலரின் பொல்லாத கண்கள் மீது என்றைக்குமே அம்மாவுக்குப் பயம் அதிகம். சில மனிதர்களை விட அந்த மனிதர்களுக்குச் சொந்தமான பொல்லாத கண்களல்லவோ பயங்கரம் நிறைந்தவை.

தரகர் வண்டியைக் கிளப்பி, வீட்டு முற்றத்துக்குள் கொண்டு வந்து நிறுத்தினார். வண்டியின் எஞ்சினிலிருந்து எழுந்த சத்தம், இனியதொரு வயலின்

இசைபோல இருந்தது. முன்னர் வந்த பல வண்டிகள் எழுப்பிய பேரிரைச்சலைக் கேட்டுப் பயந்தும், அவற்றின் புகைபோக்கிக் குழாயிலிருந்து வெளிக்கிளம்பிய புகையினால் மூச்சுத் திணறியும் பதறிய அநுபவம் அமுதனுக்கும் அவனது பெற்றோருக்குமுண்டு.

முற்றத்தில் நின்றிருந்த வண்டியின் பளபளவென்று மினுங்கிய வெள்ளிநிறமான முன்புற விளக்குகளும், வட்டவடிவமான பெரிய பின்புறச் சிவப்பு விளக்குகளும் அந்த வண்டியின் அழகைப் பன்மடங்காக்கின. வண்டியின் உள்ளே அமைந்திருந்த சிவப்பு நிற இருக்கைகள், பஞ்சுபோல மென்மையாயிருந்தன. வேகத்தைக் காட்டும் மீற்றரின் அழகான தோற்றம் அமுதனுக்கு மிகவும் பிடித்திருந்தது. அம்மாவின் முகத்தில் பரவிய திருப்தியைக் கண்டுகொண்ட தரகர், வண்டியைப் பற்றிய பெருமைகளையெல்லாம் பன்மடங்காக உயர்த்திச் சொல்லத் தொடங்கினார். தரகர் சொல்லும் பல விடயங்கள், வண்டியின் சொந்தக் காரருக்கே தெரியாத போதிலும், தரகருடன் சேர்ந்து தன் பங்குக்கும் பலமாகத் தலையை ஆட்டி வைத்தார். பெரியதொரு நகைக் கடையின் சொந்தக்காரரான அவரிடம் ஏற்கனவே பலவிதமான வண்டிகள் குவிந்திருப்பதால், தான் முதன் முதலாக வாங்கிய இந்தக் குட்டி வண்டியை, வீட்டில் நிறுத்தி வைக்கும் இடத்தை மிச்சப்படுத்த எண்ணி விற்க முன்வந்த சரித்திரத்தையும் தரகர் சொல்லி வைத்தார்.

தனது அருமை பெருமைகளையெல்லாம் தரகர் சொல்லச் சொல்ல, நகைக் கடையின் உரிமை

யாளரான வண்டியின் சொந்தக்காரருக்கு முகமெல்லாம் பூரிப்பு நிரம்பி வழிந்தது. அம்மாவுக்கு வண்டி மிகவும் பிடித்திருந்தது. ஆனாலும் அவர் மனதில் பெரியதொரு கலக்கமும நிறைந்திருந்தது. என்ன விலையோ தெரியவில்லையே! வண்டியின் சொந்தக்காரர் குசுகுசுவெனத் தரகரிடம் ஏதோ பேசினார். தரகரும் கனைத்துக் குரலைச் சரிசெய்தபடி வண்டியின் விலையைச் சொன்னார். அவரின் சொற்கள் அம்மாவின் காதுகளில் தேனாகப் பாய்ந்தன. அம்மா சேமித்து வைத்திருந்த பணத்தை விடச் சிறிது குறைவாயிருந்தது வண்டியின் விலை. அதைவிடச் சிறப்பு என்ன தெரியுமா, தரகர் சொன்னவிலை தன்னுடைய தரகுப் பணத்தையும் சேர்த்து என்பதே! அப்பாவுக்கு மகிழ்ச்சி தாளமுடியவில்லை. தனது மனைவியாரதும், மகனதும் கனவுகள் இன்று நனவாவதை எண்ணி மிகவும் பூரிப்படைந்தார். மளமளவென வேலைகள் நடந்து முடிந்தன. பத்திரங்களில் கையெழுத்திட்டு, பணத்தையும் கொடுத்து அந்த வண்டியை வாங்கியாகி விட்டது.

வண்டியின் சாவியைப் பக்குவமாகத் தனது வலது கையினால் அம்மாவிடம் கொடுத்தார் வண்டியின் முன்னாள் சொந்தக்காரர். ஆமாம், இப்போதுான் அம்மா அந்த வண்டிக்குச் சொந்தக்காரராகி விட்டாரே!. அமுதனுக்கு பெருமை தாளமுடியவில்லை. அம்மாவின் முகத்தில் நிலவிய மகிழ்ச்சி, அவனது குதூகலத்தை பன்மடங்காக அதிகரித்தது. வண்டி இப்போது அமுதனின் வீட்டு போர்ட்டிக்கோவில் அழகாக நின்றிருக்கிறது. ☐

## அப்பாவின் அன்பும், அமுதனின் பொல்லாத கோபமும்.

பள்ளி செல்லும் வயது வந்ததால், அம்மா, அமுதனைப் பள்ளிக் கூடத்தில் சேர்த்து விட முடிவு செய்தார். ''பள்ளிக் கூடம்'' என்ற வார்த்தையைக் கேட்டாலே அமுதனுக்கு அடக்கமுடியாத அழுகை பொங்கி வரும். பள்ளிக்குச் சென்று படித்தால்தான் பெரியவனாக வளர்ந்து நல்லதொரு வேலை பார்க்க முடியும் என்று அம்மா சொன்ன புத்திமதிகள் எவையுமே சின்னஞ்சிறியவனான அமுதனின் செவிகளுக்கு எட்டவேயில்லை. பள்ளிக்கூடம் போகமாட்டேன் என்று அடம் பிடித்து அழும் மகனுக்கும், அவனைப் பள்ளிக்கு அனுப்பியே தீருவேன் என்று ஒற்றைக் காலில் நிற்கும் அம்மாவுக்கும், நடுவிலே மாட்டித் தவியாய் தவித்தார் அமுதனின் அப்பா. ''சரியப்பா நீ பள்ளி செல்ல வேண்டாம்'', என்று சொல்லித் தனது அருமை மகனையும், ''கவலைப்படாதே! அமுதனைக் கட்டாயம் பள்ளிக்குக் கூட்டிச் செல்லுகிறேன்'', என்று சொல்லி மனைவியாரையும் சமாதானப்படுத்துவார் அப்பா. வீட்டிலே சில காலமாக நிலவி வந்த அந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்டவும் தீர்மானித்துக் கொண்டார்.

நிருவாக சேவையில் உயர் அதிகாரியாக வேலை பார்க்கும் அப்பா, தினமும் காலையில் தனது ஜீப் வண்டியிலே, அலுவலகத்துக்குச் செல்வது வழக்கம். அப்படிச் செல்லும் வழியிலே அமுதனைப் பள்ளிக் கூடத்தில் விட்டுச் செல்வதாகவும் அம்மாவுக்கு

உறுதியளித்தார். அம்மாவுக்குத் தெரியாது, அமுதனிடம் தனது திட்டத்தையும் விளக்கமாகச் சொன்னார். பள்ளி செல்வது போலக் கிளம்பி, தன்னுடன் மகனையும் கூட்டிக் கொண்டு வேலைக்குச் செல்வதே அப்பாவின் திட்டம். ''அம்மாவிடம் சொல்லி விடாதேப்பா!'', என்று மிகவும் உருக்கமாக அமுதனிடம் கேட்டுக் கொண்டார் அப்பா. சில நாட்கள் அமுதனை தன்னுடன் கூட்டிச் சென்று வைத்திருந்து, படிப்படியாகப் புத்திமதிகள் சொல்லி, பள்ளி மேல் அவனுக்கிருந்த பயத்தைப் போக்க வைப்பதே அப்பாவின் நோக்கம். தனது அன்பு மனைவியார் அதை அறிந்தால், அமுதன் மேல் கொண்டிருந்த கோபத்தை விடப் பன்மடங்கு கோபத்தைத் தன்மேல் காட்டுவாரே என்று பயந்து, தனது திட்டத்தை மிகமிக இரகசியமாக வைத்திருந்தார் அப்பா.

அதிகாலையிலேயே எழுந்து விட்டான் அமுதன். அப்பாவுடன் ஜீப் வண்டியிலே பயணம் செய்து, அவரது அலுவலகத்துக்குப் போகப் போவதை நினைக்க நினைக்க அமுதனுக்கு ஆனந்தம் பொங்கியது. மகனின் திடீர் மாற்றம் அம்மாவுக்குத் தாங்க முடியாத ஆச்சரியத்தையும், ஆனந்தத்தையும் உண்டாக்கியது. மறுநாள் காலையிலே பெருந்தகராறு செய்து கொண்டு, பள்ளிக்குச் செல்லப் போகும் மகனை நினைத்து இரவு முழுவதும் தூக்கம் வராமல் புரண்டிருந்த அம்மாவுக்கு, அமுதனின் இப்போதைய திடீர் மாற்றம் பெரியதொரு கண்டத்தையே கடந்து விட்டது போலிருந்தது. சுத்தமாகக் குளித்து, புத்தம் புதிய ஆடைகளை அணிந்து கொண்டான் அமுதன்.



பையிலே, ஆரம்பப் பள்ளிப் பாடப்புத்தகங்கள் ஒன்றிரண்டையும், பென்சில், வண்ணப் பேனாக்கள் மற்றும் வரைதல் புத்தகத்தையும் அழகாக வைத்துக் கொடுத்தார் அம்மா, ஜாம், பட்டர் பூசப்பட்ட பாண்துண்டுகள் அடங்கிய பச்சை வண்ண சாப்பாட்டுப் பெட்டியையும் மறவாது பையில் வைத்தார். நீண்ட பட்டிகள் பொருத்தப்பட்டு தோளிலே மாட்டி எடுத்துச்

செல்ல வசதியாயிருந்த குளிர்பானப் போத்தலிலே, தோடம்பழச் சாற்றை நிறைத்து அமுதனின் தோளிலே மாட்டி விட்டார் அம்மா. ஆர்வத்துடன் மகனை பள்ளிக்குத் தயார்படுத்தும் தனது அருமை மனைவி யாரைப் பார்க்க அப்பாவுக்கு சிறிது கவலை யாயிருந்தது. பள்ளிக்குப் போவதென்றால் இவ்வளவு சுறுசுறுப்பாகக் கிளம்புவானா சின்ன அமுதன்? நிச்சயமாகத் தனது மகனை வழிக்க கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கை அப்பாவின் மனதில் இருந்ததால், இதைப் பற்றியெல்லாம் தெளிவாகப் பின்னர் மனைவியாரிடம் விளக்கிச் சொல்லலாம் என்றும் முடிவு செய்து கொண்டார்.

விரைந்து பள்ளிக்கு அனுப்பிட, வேகமாகத் தன்னைத் தயார்படுத்தும் அம்மாவின் மேல் அமுதனுக்கு அளவிட முடியாத கோபம் பிறந்தது. அம்மாவை நன்றாக ஏமாற்றி விட்டு அப்பாவுடன், ஆனந்தமாக ஜீப்பில் பயணப்படப் போவதை நினைத்தபோது, அம்மாவின் மேலிருந்த கோபமெல்லாம் பறந்து போய் ஆனந்தம் பொங்கியது. அம்மா கொடுத்துவிடும் ஜாம் பூசப்பட்ட பாணையும், தோடம்பழச்சாற்றையும், ஜீப்பில் பயணப்படும்போதே சாப்பிட்டு மகிழவும் முடிவு செய்து கொண்டான். ஜீப்பிலே ஏறி, முன்புற இருக்கையிலே, அப்பாவின் மடியில் கம்பீரமாக அமர்ந்து கொண்டான் அமுதன். வீட்டை விட்டு ஜீப் வண்டி கிளம்பித் தெருவைச் சென்றடைய மட்டும், வாசல் படியிலே நின்றிருந்து கை அசைத்து விடை கொடுத்தார். அம்மா. தனது

அருமை மகன் பள்ளிக்கூடம் செல்வதால் அளவிட முடியாத மகிழ்ச்சி அவருக்கு.

ஜீப் வண்டி, அகலமான அந்தத் தெருவிலே விரைந்தோடிக் கொண்டிருந்தது. அப்பாவின் மடியில் அமர்ந்திருந்த அமுதன் தலையை அங்குமிங்கும் அசைத்து வேடிக்கை பார்த்திருந்தான். சட்டைப் பையிலே அழகாக அம்மா மடித்து வைத்திருந்த கைக்குட்டையை எடுத்து, ஜீப்பின் யன்னல் வழியே வெளியே பிடித்தான். வேகமாக ஓடிய ஜீப்பிலே மோதித்தெறித்த காற்றில் பட்டுப் படபடவென ஆடியது அவனது கைக்குட்டை. மகனின் கைகளைக் கவனமாகப் பிடித்திருந்தார் அப்பா. கைக்குட்டை காற்றில் பறந்தாலும் பரவாயில்லை, மகனின் கைகளுக்கு எந்தவிதமான ஆபத்தும் வந்துவிடக் கூடாது என்பது அவரின் கவலை.

ஜீப் வண்டி ஓட்டுனரிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்த அப்பா, தனது பேச்சை மாற்றி, தெருவோரமாகப் பள்ளிக்கு விரைந்து சென்று கொண்டிருந்த சிறுவர்களை அமுதனுக்கு சுட்டிக் காட்டினார். ''தம்பி, அந்தச் சிறுவர்களைப் போல நீயும் பள்ளிக்கூடம் போகலாமே! அங்கே நிறையப் பாட்டுக்கள் பாடலாம், உன்னைப் போன்ற சின்னஞ் சிறியவர்கள் பலருடன் சேர்ந்து ஆடி விளையாடலாம்!", என்று அன்புடன் சொன்னார். பள்ளிக்கூடம் போக வேண்டாம் என்று சொல்லிக் கூட்டி வந்த அப்பா, இப்போது இப்படிக் கேட்பது அமுதனுக்கு மிகுந்த கோபத்தை ஏற்படுத்தியது. ''போ, அப்பா நான்

பள்ளிக்கூடம் போகமாட்டேன்'', என்று சொல்லி, தன்னெதிரே தொங்கிக் கொண்டிருந்த ஜீப் வண்யின் சாவியைத் திருப்பி இயந்திரத்தை நிறுத்தினான். பின்னர் சாவிக் கொத்தைப் பிடுங்கியெடுத்து, ஜீப்பின் யன்னல் வழியே, வெளியே தூரமாக வீசியெறிந்தான். இயந்திரம் நிறுத்தப்பட்ட ஜீப் வண்டி மெதுவாக ஓடிப்பாதையின் ஓரமாக நின்றது. ஓட்டுனர் வேகமாகக் கீழே இறங்கி, ஓடிச் சாவியைத் தேடத் தொடங்கினார்.

பொங்கிக் குமுறி, வெடித்து வெளியே கிளம்பத் தயாராயிருந்த தனது அழுகையை, பற்களால் சொண்டுகளை இறுகக் கடித்துத் தடுத்து வைத்திருந்தான் அமுதன். கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் முத்துக்களாய்ச் சிதறிக் கீழே விழுந்தன. கலங்கியழும் மகனைச் செல்லமாகத் தடவி மன்னிப்புக் கேட்டார் அப்பா.

அமுதனின் கண்ணீரைத் தன் கைகளால் துடைத்து விட்ட அப்பாவின் கண்களும் இலேசாகக் கலங்கியிருந்தன. ஓட்டுனர் மிகவும் கஷ்டப்பட்டு ஜீப் வண்டியின் சாவியை, தெருவோரமாக அடர்ந்து வளர்ந்திருந்த புற்களுக்குள்ளிருந்து தேடி எடுத்தார். ஜீப் வண்டி அப்பாவின் அலுவலகத்தை நோக்கித் தனது பயணத்தைத் தொடர்ந்தது.

□

## பொங்கல் பண்டிகை.

தைமாதத்துக் குளிர்காற்று சில்லென்று வீசியது. மாமரத்தின் கிளைகளிலே அமர்ந்து சிட்டுக் குருவிகளும், குயில்களும் பாடல் பயிற்சியிலே மூழ்கியிருந்தன. இங்கிருந்து பாடும் குயிலாருக்குப் பதிலளித்து, எங்கிருந்தோ குரல் எழுப்பினார் இன்னுமொரு குயிலார்.

மல்லிகைப் பூவினதும், முல்லைப் பூக்களதும் நறுமணம் காலைக்காற்றிலே கலந்து, அமுதனின் வீட்டுத் தோட்டமெங்கும் பரவியிருந்தது. அன்று பொங்கல் பண்டிகை. அதிகாலை ஐந்து மணிக்கே எழுந்து விட்டான் அமுதன். வழமையாக ஒவ்வொரு வருடமும் ஏழுமணிக்கெல்லாம் பொங்கல் பானையை அடுப்பில் ஏற்றிவிடுவது அமுதனின் அம்மாவின் வழக்கம். அமுதனுக்கு முன்னதாகவே எழுந்து விட்ட அம்மா, வேலைகளைக் கவனிப்பதற்கு சுறுசுறுப்பாகத் தயாராகி விட்டார். குளித்து முடித்துப் பொலிவுடன் காட்சி கொடுத்த அம்மாவை, ஓடிச் சென்ற கட்டிய ணைத்து வணக்கம் கூறினான் அமுதன். குளித்துவிட்டு வரும்படி அன்புடன் சொன்ன அம்மா, பொங்குமிடத் தைக் கழுவிக் கோலம் போடும் வேலைகளைக் கவனிக்க ஆயத்தமானார்.

கிணற்றடிக்கு ஓடிச்சென்ற அமுதன், குளிர்ந்த தண்ணீரில் ஆசைதீரக் குளித்து முடித்தான். முதல் வாளித் தண்ணீரின் குளிரில் தேகம் வெடவெடவென நடுங்கினாலும், பின்னர் இனிமையான அந்தக் காலைப்

பொழுதிலே குளிர் தண்ணீரில் குளிப்பது அமுதனுக்கு மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. குளித்து முடித்துத் தூய ஆடைகளை அணிந்து, அம்மா நிற்கும் இடத்துக்கு விரைந்து வந்தான். போர்ட்டிக்கோவில் நின்றிருந்த மோட்டார்கார் இப்போது வீட்டு முற்றத்திலே நின்றிருந்தது. ஒவ்வொரு வருடமும் போர்ட்டிக் கோவில் பொங்குவதே அம்மாவின் வழக்கம். போன வருடங்களிலெல்லாம் அமுதன் வீட்டில் மோட்டார்கார் நின்றதில்லை. ஆதலால் போர்டிக்கோவும் மிகவும் சுத்தமாயிருக்கும். இந்த வருடப் பொங்கலுக்கு, போர்டிக்கோவைச் சுத்தம் செய்யும் வேலையை சிறிது அதிகமாகவே அம்மாவுக்குக் கொடுத்திருந்தது, அவருக்கு மிகவும் பிடித்தமான அந்த மோட்டார்கார். போர்ட்டிக்கோவில் சிந்தியிருந்த எண்ணெய்த் துளி களின் பிசுக்கைத் தேய்த்துத் தேய்த்துக் கழுவியதில், அம்மாவுக்கு மூச்சு வாங்கியது. வாசல் படியிலே சிறிது ஓய்வெடுக்க எண்ணி அப்பாடா! என்று சொல்லிக் கொண்டே அமர்ந்தார். அம்மாவின் பக்கத்திலே ஓடிச் சென்று அமர்ந்து கொண்டான் அமுதன்.

பொங்கல் பண்டிகையைப் பற்றிச் சில சந்தேகங்கள் அவன் மனதிலே நிறைந்திருந்தன. அம்மா ஓய்வெடுத்திருக்கும் அந்த நேரத்தில், தனது சந்தேகங்களைக் கேட்டு, விளக்கம் பெற்றிடவும் முடிவு செய்தான். ''அம்மா! தைப்பொங்கலை தை மாதத்தில் ஏன் கொண்டாடுகிறோம்?'', அமுதனின் கேள்வியைக் கேட்ட அம்மா அவனைப் பார்த்துச் சிரித்துப் பதிலும் சொன்னார். ''அமுதா, தை மாதத்தில்தான் விவசாயிகள் எல்லாரும் விளைந்த பயிரை அறுவடை

செய்வார்கள். அந்த வருடத்தில் அமோக விளைச்சல் கொடுத்துப் பசியைத் தீர்த்த சூரியபகவானுக்கு நன்றி சொல்ல ஏற்ற நேரம் அதுவல்லவா! அதுதான், தை மாதத்தில் பொங்கல் பொங்கித் தங்கள் நன்றியைத் தெரிவிப்பார்கள். அவர்களுடன் சேர்த்து நாமும் அந்த வழக்கத்தைப் பின்பற்றுகிறோம்'', அம்மாவின் நீண்ட விளக்கமான பதில் அமுதனுக்கு மிகவும் திருப்தியைக் கொடுத்தது.

மூன்றாம் வகுப்புத் தமிழ்ப்பாடப் புத்தகத்தில் பொங்கல் பண்டிகையைப் பற்றி, விளக்கமாகப் படித்து அறிந்ததற்கும், வகுப்பில் சில நாட்களுக்கு முன்னர், அவனுக்கு மிகவும் பிடித்த அவனது தமிழாசிரியர் விபரித்ததற்கும் சிகரம் வைத்தது போல் அமைந்தது அம்மாவின் பதில்.

கழுவப்பட்டு சுத்தமாயிருந்த போர்ட்டிக்கோவில் அம்மா கோலம்போடத் தொடங்கினார். கோலம் போடுவதற்கு வசதியாகச் செங்கட்டியொன்றை உடைத்துத் தூளாக்கிக் கொடுத்தான் அமுதன். சிவப்பு வண்ணப் புள்ளிகளையும், கோடுகளையும் செங்கட்டித் தூளினாலும், வெள்ளை வண்ணப் புள்ளிகளையும் கோடுகளையும் கோதுமை மாவினாலும் அமைத்து அழகியதொரு கோலத்தை வரைந்தார் அம்மா. அம்மா, கோலம் போடும் வேலையை முடிக்கவும், குளித்து முடித்த அப்பா அங்கு வரவும் சரியாயிருந்தது. பொங்கல் அடுப்புக்குத் தேவையான கல்லுகளைச் சேகரித்து சுத்தப்படுத்தும் வேலையில் மூழ்கினார், அப்பா.

அமுதனின் பாட்டியாரும், தாத்தாவும் அதற்குள் அங்கு வந்து சேர்ந்தார்கள். பொங்குவதற்கான ஆயத்த வேலைகளில் அவர்களும் அம்மாவுக்கு உதவி செய்தார்கள்.

முற்றத்துக் கதவைத் திறந்து கொண்டு ஓடி வந்தார்கள், அமுதனின் பக்கத்து வீட்டு நண்பர்களான எழிலும், செல்வியும். எழிலின் கைகளில் ஏராளமான குருத்தோலைகளும், செல்வியின் கைகளில் கயிற்றுப் பந்து ஒன்றும் காட்சி கொடுத்தன. ''அமுதா! தோரணம் கட்ட வருகிறாயா?'', என்று இருவரும் அமுதனைப் பார்த்து அன்போடு கேட்டார்கள். தென்னங் குருத்து ஓலைகளைக் கொண்டு தோரணங்கள் அமைக்கும் வேலையில் நண்பர்கள் மூவரும் மூழ்கிப் போனார்கள். தோரணங்கள் அமைக்கும் வேலை மளமளவென்று நடந்தது. தான் பிடுங்கி எடுத்து வந்த மாவிலைகளை சுத்தமாகக் கழுவி நண்பர்களிடம் கொடுத்தார் அப்பா. செல்வியிடமிருந்த கயிற்றுப் பந்தை வாங்கி, தோரணங்களைத் தொங்க விட வசதியாக, அந்தக் கயிற்றை, போர்ட்டிக்கோவைச் சுற்றி கட்டியும் விட்டார். தோரணங்களை அமைத்து முடித்த சிறுவர்கள் மாவிலைகளையும், தென்னங்குருத்துத் தோரணங்களையும், கயிற்றில் மாறிமாறித் தொங்கவிட்டு அழகு படுத்தினார்கள்.

பாட்டியார் பச்சை அரிசியை நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்து ஒரு பாத்திரத்தில் வைத்தார். தேங்காய் துருவி முடித்த அம்மா, சர்க்கரையைப் பாகாகக் கரைத்து, எடுத்து வைத்துக் கொண்டார். ஏலக்காய்,

திராட்சை வற்றல், முந்திரிப் பருப்பு, போன்ற பொருட்களை நன்றாகக் கழுவி முடித்தார் தாத்தா. பொங்கல் அடுப்பிலே, காய்ந்த விறகையும், தென்னம் பாளைகளையும் பக்குவமாக அடுக்கினார் அப்பா. வாழை இலையிலே, நெல்லைப் பரவிக் கும்பம் வைத்தார் அம்மா. ஏறத்தாள எல்லா வேலைகளுமே முடிந்து விட்டன.

மணியும் ஆறரையாகியது. வீட்டுத் தோட்டத்திலே மலர்ந்திருந்த மல்லிகை, முல்லைப் பூக்களை பிடுங்கி யெடுத்து வந்து கும்பத்தினருகே அழகாக வைத்தான் அமுதன். குத்துவிளக்குகளுக்குத் திரியிட்டு, எண்ணெய் ஊற்றி எரியவைத்தார் பாட்டியார். கூடவே நறுமணம் மிக்க ஊதுவத்திகளையும் கொழுத்தி வைத்தார்.

நேரமாவதை அறிவித்த அம்மா, கற்பூரத்துண் டொன்றைக் கொழுத்தி அடுப்பில் இட்டு, அடுப்பை மூட்டினார். பொங்கற் பானையின் கழுத்தில் இஞ்சி, மஞ்சள் இலைகள் வளைத்துக் கட்டப்பட்டிருந்தன. நீர் நிரம்பிய பொங்கல் பானையை அடுப்பிலே வைத்தார் அப்பா.

காய்ந்த விறகுகள் பற்றியெரிந்த சூட்டில், சிறிது நேரத்திலேயே தளதளவெனக் கொதிக்கத் தொடங்கி யது பானைத் தண்ணீர். கழுவிய அரிசி, பால், சர்க்கரை மற்றும் பொருட்களைப் பக்குவமாகப் பானையில் போட்டார் பாட்டியார். போத்தலில் இருந்த நெய்யைத் தாராளமாகப் பானையில் ஊற்றினார் அம்மா.

பொங்கல் பொங்கிச் சரிவதை ஆவலுடன் எல்லாரும் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். கிழக்கு வானிலே சூரியபகவானும் மெதுவாக எட்டிப் பார்த்துச் சிரிக்கத் தொடங்கினார்.

பொங்கல் பொங்கிச் சரியும் வேளையிலே வெடித்திடப் பட்டாசுகளையும் தயார் படுத்திக் கொண்டான் அமுதன். கைகளில் பட்டுவிடாது கவனமாக வெடிக்கும்படி, அவனைப் பார்த்து அன்புடன் சொன்னார் அம்மா.

பால் பொங்கிச் சரியத் தொடங்கியது. பட்டாசுகளை வெடிக்க வைத்தான். ''பட்பட்'' என்ற அமுதன் பட்டாசுகளின் வெடிச்சத்தமும், ''பொங்கலோ பொங்கல்!'', என்ற அமுதனின் குரலும் சேர்த்து ஓங்கி ஒலித்தன. இன்பம் நிறைந்த தை மாதத்துப் பொங்கல் பொங்கிச் சரிந்தது.

□

## மாதுளைமரம்.

அமுதனின் வீட்டுத் தோட்டத்திலே செழிப்பாக வளர்ந்திருந்தது அந்த மாதுளை மரம். கரும்பச்சை நிறமுடைய முதிர்ந்த இலைகளும், இளம்பச்சை நிறமுடைய தளிர் இலைகளும், மாதுளை மரத்திலே நிறைந்திருந்தன. முன்னர் ஒரு போது காய்கறிகள் வாங்கச் சந்தைக்குப் போயிருந்த அம்மா, அந்த மாதுளைச் செடியை வாங்கி வந்திருந்தார். அம்மாவுக்கு மாதுளம் பழங்களென்றால் மிகவும் பிடிக்கும். தினமும் அதிகாலையில் எழுந்து வீட்டுத் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்து அதன் வளர்ச்சியைக் கண்டு மகிழ்ந்திருப்பது வழக்கம்.

பூப்பூத்துக் காய்காய்க்கும் காலம் நெருங்கிவிட்டது என்று அமுதனுக்கு ஒரு நாள் சொன்னார் அம்மா. அன்றிலிருந்து தினமும் மாதுளை மரத்தையே நோட்டம் விட்டிருப்பது அமுதனுக்கு வழக்கமாகி விட்டது. மாதுளை மரத்தைச் சுற்றி பாத்தி கட்டி, காய்ந்த இலை, சருகுகளையும், பசளைகளையும் புதைத்துத் தண்ணீர் பாய்ச்சினார் அம்மா. காய்க்கும் காலங்களிலே நிறையச் சத்து அந்த மரத்துக்குத் தேவை என்று அமுதனுக்கு விளக்கம் சொன்னார் அம்மா.

வாரங்கள் சில கழிந்தன. மாதுளை மரத்திலே ஏராளமான பூக்களும், பிஞ்சுகளும் அவற்றுடன் சேர்த்து சின்னஞ்சிறிய காய்களும் நிறைந்திருந்தன. மாதுளம் பூக்கள், பிஞ்சுகளாக மாறும் போது தங்கள் இதழ்களை

உதிர்த்துக் கொண்டு மொட்டையாகக் காட்சியளிக்கும். தங்களது அழகை இழந்தபோதிலும் அற்புதமான பழங்களை உருவாக்குவதில் ஆர்வம் காட்டும் அந்தப் பூக்களைப் பார்க்க அமுதனுக்கு ஆச்சரியமாயிருந்தது. மரத்தின் கீழே, உதிர்ந்து தரையிலே பரவிக் கிடந்த இளம் சிவப்பு நிறமான மாதுளை இதழ்களை எடுத்து ஆசையுடன் பார்ப்பான் அமுதன். அணிற் பிள்ளைகளும், குருவிகளாரும் இப்போதே அந்த மாதுளை மரத்தைச் சுற்றிச் சுற்றி வந்து நோட்டம் விடத் தொடங்கியிருந்தார்கள். தத்தித்தத்தி மரத்தின் கீழே நடைபோட்டிருந்த சிட்டுக்குருவியார்கள், மாதுளம் பூ இதழ்களைக் கொத்தியெடுத்துக் கொண்டு பறந்தார்கள்.

ஒருநாள் தூக்கத்திலே அற்புதமான கனவொன்று கண்டான் அமுதன். இருள் சூழ்ந்திருந்ததொரு இரவுப் பொழுதில், யன்னல் வழியே பார்த்த அமுதனின் கண்களில், மாதுள மரத்தில் தகதகவென்று ஒளிவீசிக் கொண்டிருந்த ஒரு தங்கமாதுளம் பழம், தொங்கிக் கொண்டிருப்பது தென்பட்டது. மிகுந்த ஆச்சரியத்துடன் தோட்டத்துக்கு ஓடிச்சென்றான். மாதுளை மரத்தில் தொங்கிய அந்தத் தங்க மாதுளம் பழத்தைப் பிடுங்கிக் கொண்டான் அமுதன். அந்த நேரம் பார்த்து, மாதுளை மரத்தருகே பென்னம் பெரியதொரு பாம்பார் தோன்றினார். தோன்றிய பாம்பார், ‘‘அடேய் அமுதனே! மாதுளம் பழத்தை என்னிடம் கொடுத்திடு'', என்று உறுமினார். பயந்து போன அமுதன், ‘‘அம்மா! அம்மா!'' என்று கத்திக் கொண்டே அங்கிருந்து ஓட்டம் பிடித்தான்.

''அம்மா!'' என்று அலறிக் கொண்டே தூக்கம் கலைந்து கண்விழித்தான் அமுதன்.

அதிகாலைப் பொழுது. பறவைகளின் பாடல்கள் திறந்திருந்த யன்னல் வழியாகக் கேட்டன. பின்வீட்டிலிருந்து, கிணற்றில் யாரோ தண்ணீர் அள்ளிக் குளித்திடும் சத்தமும் கேட்டது. அமுதனுக்கு பயம் நீங்கி, அடக்க முடியாத சிரிப்புப் பிறந்தது. ஆயினும் தோட்டத்துக்குச் சென்று மாதுளை மரத்தை ஒருமுறை சோதித்து வர முடிவு செய்தான். சொல்ல முடியாது, சிலவேளை தங்க மாதுளம் பழம் இருக்குமல்லவா? விநோதம் நிறைந்த வேடிக்கையான எண்ணங்கள் சிறுவர்கள் மனதில் எழுவது இயல்பல்லவா! புயலாய்ப் பறந்து தோட்டத்துக்கு விரைந்தான் அமுதன்.

மாதுளை மரத்தைச் சுற்றிப் பார்த்த அமுதனின் கண்களோ ஆச்சரியத்தால் அகல விரிந்தன. பச்சைப் பசேலென்று இலைகள் நிறைந்து அடர்ந்து வளர்ந்திருந்த மாதுளை மர உட்புறக் கிளைகளில் ஒன்றில், கருஞ்சிவப்பு நிறமான பென்னம் பெரியதொரு மாதுளம்பழம்! அடர்த்தியான உட்புறக் கிளைகளில் ஒன்றில் பழுத்துத் தொங்கிய அந்த மாதுளம்பழம் இவ்வளவு நாட்களாக அமுதனின் கண்களிலோ, அம்மாவின் கண்களிலோ பட்டிருக்கவில்லை. பழத்திலே இலேசாகத் தோன்றியிருந்த வெடிப்பு முற்றாகக் கனிந்ததற்குச் சாட்சியாக இருந்தது. பழத்தின் அருகிலே வேறொரு கிளையில் அமர்ந்திருந்த ஒரு அணிலாரின் பொல்லாத பற்களிலிருந்தும் தப்பிக் கொண்டது மாதுளம்பழம்.

சரியான நேரத்தில் அமுதன் அங்கு வந்ததால், அணிலாரின் மாதுளம்பழ வேட்டையும் பிழைத்துப் போனது. அமுதனைக் கோபமாக முறைத்துப் பார்த்த அணிலார். அங்கிருந்து தாவிக் குதித்து ஓட்டம் பிடித்தார்.

மாதுளம்பழத்தைப் பக்குவமாகப் பிடுங்கிய அமுதன், அதை எடுத்துக் கொண்டு அம்மாவிடம் விரைந்தான். பழத்தைப் பார்த்த அம்மாவுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை.

தட்டொன்றிலே வைத்துப் பழத்தைப் பிளந்தார் அம்மா. கருஞ்சிவப்பு வைரங்களாகத் தட்டிலே உதிர்ந்து உருண்டோடின மாதுளை மணிகள். அவற்றைப் பார்த்த அமுதன் ஆனந்தமாகச் சிரித்தான். தேன் போன்ற இனிய சுவையுடைய மாதுளை மணிகளை அம்மாவும், அமுதனும் சுவை பார்த்தார்கள். அம்மாவின் முகத்திலே அளவிட முடியாத சந்தோஷம் பரவியது. உழைப்புக்கு ஏற்ற பலனை அடைந்ததால் உண்டான பெருமையும் அவரது சந்தோஷத்திலே கலந்து, முகத்திலே பரவிக் கிடந்தது.

□

## செல்வியின் நாட்டியக்காரப் பொம்மை.

அற்புதமான சில பொம்மைகளை செல்வி வைத்திருந்தாள். மெத்தென்ற பஞ்சுக் கரடி பொம்மை, முயல் பொம்மை, அணில் பொம்மை போன்றவற்றின் வரிசையில் ஒரு நாட்டியக்காரப் பொம்மையும் அவளிடமிருந்தது.

நாட்டியத்திலே செல்விக்கு ஆசை அதிகம். ஐந்து வயதுச் சிறுமியான அவளுக்குத் தானும் பெரியதொரு நாட்டியக் காரியாக வரவேண்டுமென்பது ஆசை.



அம்மாவின் கால்ச் சங்கிலிகளை சலங்கைகளாகப் பாவித்துத் தன் கால்களில் கட்டியும், சிவந்த நிறக் களிப்பொட்டினால் முக அலங்காரம் செய்து கொண்டும் கண்ணாடியின் முன் நின்று அபிநயம் பிடிப்பது அவள் வழக்கம். நடனத்தின் மேல் அவளுக்கிருந்த ஆர்வம், அவளது தாயாருக்கு மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. நடனவகுப்புகளுக்கு அந்தச் சின்னஞ்சிறிய வயதிலேயே செல்ல ஆரம்பித்து விட்டாள் செல்வி.

கடைத் தெருவுக்கு ஒருநாள் அம்மாவுடன் சென்றிருந்த செல்வி, அழகான அந்த நாட்டியக்கார பொம்மையைக் கண்டு விட்டாள். ஒற்றைக் காலில் நின்று, முகத்தில் நளினம் காட்டி ஆடி நின்ற அந்தச் சிங்காரப் பொம்மை, செல்வியை மிகவும் கவர்ந்தது.

பொம்மையைப் போலவே தானும் ஒற்றைக் காலில் நின்று ஆடிப்பார்க்க முயற்சி செய்தாள். அத்துடன் நில்லாது, தலையைச் சரித்துக் கொண்டும், இரு கைகளால் தனது சட்டையைப் பிடித்துக் கொண்டும் பொம்மையைப் போலவே நளினம் செய்து பார்த்துக் கொண்டாள்.

செல்வியின் செயல்களைப் பார்க்க அம்மாவுக்கோ அடக்கமுடியாத சிரிப்பு பொங்கியெழுந்தது. தனது அன்பு மகளை மிகவும் கவர்ந்த, அந்தச் சிங்காரப் பொம்மையை ஆசையுடன் வாங்கி, அன்பாக மகளிடம் நீட்டினார். அம்மாவின் அன்பினால் ஆனந்தம் கொண்ட செல்வி, துள்ளிக் குதித்துத் தாய்க்கு ஒரு முத்தம் கொடுத்தாள்.

கரடிபொம்மை, முயல்பொம்மைகளுடன் தானும் சேர்ந்து, நாட்டியக்காரப் பொம்மையும் செல்வியின் சின்னஞ்சிறிய கட்டிலிலே இடம்பிடித்துக் கொண்டது. பொம்மையைக் கைகளில் எடுத்துக் கொண்டு, பல கோணங்களில் அதை அங்குமிங்கும் அசைத்து அழகு பார்த்த செல்வி, பொம்மையுடன் சேர்ந்து தானும் நடனம் ஆடினாள். ஆடிக்களைத்த செல்வி, கட்டிலிலே தனது பொம்மைகளை அழகாக பரப்பி வைத்துக் கொண்டு, ஆழ்ந்து தூங்கிப் போனாள்.

அவளது தூக்கத்திலே இனியதொரு கனவு பிறந்தது. தனது பஞ்சுக்கைகளால் செல்வியை, மெதுவாகத் தட்டி எழுப்பினார் பஞ்சுக் கரடிப் பொம்மையார். அவருடன் கூடவே நின்று கொண்டு பல் இளித்துச் சிரித்தார் முயல்குட்டி பொம்மையார். செல்வியின் கைகளைப் பற்றிக் கூட்டிச் சென்ற அவர்கள், அற்புதமானதொரு காட்சியை அவளுக்குக் காட்டினார்கள்.

செல்வியின் நாட்டியக்காரப் பொம்மை அவளைப் பார்த்து இனிமையாகச் சிரித்திருந்தது. அதற்குள் அங்கிருந்து ஓடிச் சென்ற கரடி பொம்மையாரும், முயல்குட்டி பொம்மையாரும் மேளம், வயலின் போன்ற வாத்தியங்களை எடுத்துக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தார்கள். கரடி பொம்மையாரின் வயலின் இசையிலும், முயல் குட்டி பொம்மையாரின் மேளத்தின் தாளச் சத்தத்திலும் நாட்டியக்காரப் பொம்மையின் நடனம் தொடங்கியது. சுழன்று சுழன்று நடனம் ஆடிய நாட்டியக்காரப் பொம்மை, செல்வியின் கைகளைப்

சறுவர் மகிழ்வகம்
இல. 203/9, ஆசீர்வாதம் ஒழுங்கை
ஆல்பக்கிரீ வீதி
யாழ்ப்பாணம்



பிடித்து இழுத்து, அவளையும் தனது நாட்டியத்தில் இணையச் செய்தது. பொம்மையுடன் சேர்ந்து அழகான நளினம் காட்டி நடனம் செய்தாள் செல்வி.

என்ன அதிசயம்! சுழன்று சுழன்று தரையில் நின்று நடனமாடிய செல்வி இப்போது தரையிலிருந்து மேலெழுந்து பறந்து கொண்டல்லவா ஆடுகிறாள்! பட்டாம் பூச்சிகளைப்போல அழகான செட்டைகள் அவள் முதுகிலே தோன்றியிருந்தன. அந்தப் பட்டாம்பூச்சிகள் போலவே ஆனந்தமாக சிறகடித்து, அங்குமிங்கும் பறந்து, நாட்டியக்கார பொம்மையுடன் கைகள் சேர்த்து நடனமாடினாள் செல்வி.

செல்வியின் அற்புதமான அந்தக் கனவைக் கலைத்தது அம்மாவின் குரல். குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுக் கண்விழித்தாள் செல்வி.

பஞ்சுக்கரடி பொம்மையாரும், முயல் குட்டி பொம்மையாரும், அவர்களுடன் கூடவே நாட்டியக்காரப் பொம்மையும், கட்டிலிலிருந்து அவளைப் பார்த்துச் சிரித்திருந்தார்கள். அன்புடன் அருகே வந்து கட்டியணைத்துக் கொண்டார் அம்மா.

சிறகு முளைத்து, வானில் பறந்து நாட்டியமாடிய சேதியை அன்னையிடம் சொன்னாள் செல்வி. முகத்திலே சிரிப்புப் பொங்க, தனது அருமை மகளை அணைத்துக் கொண்டார் அம்மா.

□

# குட்டிப் பூனையும், மனித இயந்திரப் பொம்மையும்.

அன்றொருநாள் காலைப்பொழுதிலே அட்டைப் பெட்டியொன்று, பார்சலிலே அமுதன் வீட்டுக்கு வந்து சேர்ந்தது. அட்டைப் பெட்டியின் மேல் ஒட்டியிருந்த கடதாசித் துண்டில் அமுதனின் பெயர் அழகாக எழுதப்பட்டிருந்தது. ஆவலுடன் அட்டைப் பெட்டியைப் பிரித்துப் பார்த்த அமுதனின் கண்கள், ஆச்சரியத்தினால் அகலவிரிந்தன.

கண்ணைக் கவரும் இளம்பச்சை நிறமுடைய தொரு மனித இயந்திரப் பொம்மை, அட்டைப் பெட்டியினுள் வைக்கப்பட்டிருந்தது. அந்தப் பொம்மையுடன் கூடவே இருந்த ஒரு கடிதத்தை எடுத்து உரத்துப் படிக்கத் தொடங்கினான் அமுதன். தூரத்து தேசம் ஒன்றிலே வேலை பார்க்கும் அமுதனின் மாமா அந்தக் கடிதத்தை எழுதியிருந்தார்.

''அன்புள்ள அமுதனுக்கு, அன்புடன் மாமா எழுதிக் கொள்வது. உனக்குப் பிறந்தநாள் பரிசாக இந்தப் பொம்மையை அனுப்பி வைக்கிறேன். உனக்கு எனது அன்பான பிறந்தநாள் வாழ்த்துக்கள். இன்னும் சில நாட்களில் செல்விக்கும் ஒரு பொம்மையை அனுப்பி வைப்பேன்.

இப்படிக்கு உனது
அன்பு மாமா''



மாமாவின் கடிதத்தைப் படித்து முடித்த அமுதன் ஆனந்தம் மேலிடத் துள்ளிக் குதித்தான். இன்னும் சில நாட்களில் தனக்குமொரு பொம்மையை மாமா அனுப்புவதாக எழுதியிருந்ததால், செல்வியும் சந்தோஷம் மேலிடத் துள்ளிக் குதித்தாள். அட்டைப் பெட்டியிலிருந்த மனித இயந்திரப் பொம்மையைப் பக்குவமாக வெளியே எடுத்தான் அமுதன்.

பொம்மையுடன் அட்டைப் பெட்டியிலிருந்த ஒரு சின்னஞ்சிறிய புத்தகத்தையும் எடுத்துப் பார்த்தான். அதிலே பொம்மையை இணைக்கும் வழிகளும், இயக்கும் முறைகளும் மிகத் தெளிவாக விளக்கப் பட்டிருந்தன. புத்தகத்தை படித்ததன் மூலம், பொம்மையின் நுட்பமான பல தொழிற்பாடுகளைப் பற்றி அமுதனால் விளக்கமாகத் தெரிந்து கொள்ள முடிந்தது.

மின்கலங்களின் சக்தியினால் இயங்கும் அந்த மனித இயந்திரப் பொம்மை, பேசும் ஆற்றலையும், அத்துடன் சேர்த்து நடக்கும் ஆற்றலையும் பெற்றிருந்தது. தலையை அங்குமிங்கும் திருப்பி வேடிக்கையான பல செயல்களைச் செய்யவும் வல்லது. சின்னஞ் சிறியவனான அமுதனின் மனதிலே அடக்க முடியாத ஆர்வம் பிறந்தது. வேகவேகமாக அந்த மனித இயந்திரப் பொம்மையை இணைக்கும் வேலையில் மூழ்கிக் கொண்டான். அவனுடன் கூடவே அமர்ந்திருந்த செல்வியும் அவனது வேலையில் உதவி நின்றாள். பொம்மையை இணைத்தாகி விட்டது. இயக்கிப் பார்க்கும் வேலை மட்டுமே இப்போது எஞ்சியிருந்தது. மின்கலங்களை இணைப்பதற்கு, பொம்மையின் வயிற்றுப் பகுதியிலிருந்த ஒரு விசேடமான பகுதியைத் திறந்து பார்த்தான் அமுதன். பார்த்த அமுதனின் முகம் கவலையால் வாடிப் போனது. மனித இயந்திர பொம்மையோ ஆறு மின்கலங்களின் சக்தியால் இயங்கக் கூடியது. அமுதனிடம் இருந்தவையோ மூன்று மின்கலங்கள் மட்டுமே! அமுதனின் கவலையைக் கண்டு கொண்ட

செல்வி, அங்கிருந்து பாய்ந்தோடினாள். மறுநிமிடமே திரும்பி அங்கு வந்தவளின் கைகளில் உறைகள் சுற்றப்பட்ட புத்தம் புதிய மூன்று மின்கலங்கள் காட்சி கொடுத்தன. அமுதனுக்கு மகிழ்ச்சி பொங்கியது. அன்புடன் செல்விக்கு நன்றி சொன்னான். பரவாயில்லை என்று பெரிய மனிசி போல பதில் சொன்னாள் அந்தக் குட்டிச் சிறுமி.

மின்கலங்களை இணைத்து பொம்மையை இயங்க வைத்தான் அமுதன். என்ன ஆச்சரியம்! விநோதமான பல ஒலிகளை எழுப்பத் தொடங்கியது விந்தையான அந்த மனித இயந்திரப் பொம்மை. பொம்மையின் கண்களில் பொருத்தப்பட்டிருந்த இரு கருஞ்சிவப்பு நிற விளக்குகள் மின்னி, மின்னி எரிந்து ஒளி பாய்ச்சின. ரஷிய மொழியிலே ''தயாராகிறேன்!'' என்று அழகாகப் பேசிய பொம்மை, வேகமாகத் தலையை அங்குமிங்கும் ஆட்டிக் கொண்டே, நடைபோடத் தொடங்கியது. வீரநடைபோட்டு விரைந்து செல்லும் பொம்மையைப் பின்தொடர்ந்து அமுதனும், செல்வியும் மெதுவாக நகர்ந்தார்கள். பொம்மையாரின் பயணத்தின் நடுவே, அவருள்ளிருந்து அருமையான தொரு ரஷியப் பாட்டும் பிறந்தது. பாட்டைத் தொடர்ந்து மீண்டும் விநோதமான ஒலிகளை எழுப்பிக் கொண்டே அவர் நடைபோட்டார். பொம்மையாரின் ஒரு விசேடமான அம்சம் என்ன தெரியுமா? ஏதாவதொரு ஒருபொருளின் மேல் மோதிவிட்டால், தன்னிச்சை யாகவே மோதிய பொருள்களிலிருந்தும், விலகித் திரும்பி வேறு திசையில் நடைபோடத் தொடங்கிடுவார். பொம்மையார் தனது பயணத்தைத் தொடர்ந்து

கொண்டு, சமையலறையை நோக்கி நடந்தார்.

சமையலறையினுள்ளே மேசையினடியிலே சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்த கறுப்புக் குட்டிப் பூனையார், வெகுநேரமாகவே சமையலறையின் வாசல் பக்கம் நோக்கிய திசையில் தனது செவி மடல்களைத் திருப்பி, வெளியிலிருந்தும் கேட்ட பல விநோதமான சத்தங்களை உன்னிப்பாகக் கவனித்திருந்தார். எழுந்து சென்று வெளியே பார்த்துவர மிகவும் சோம்பலாக இருந்தது. படுத்திருந்தே காது கொடுத்துக் கேட்டிருந் தார். இப்போது அந்த விநோதமான சத்தங்கள் மிகவும் அருகில் நெருங்கிக் கேட்பதால், விறைப்பாக எழுந்து அமர்ந்து கொண்டார். கண்களை அகலவிரித்து வாசலைப் பார்த்திருந்த பூனையார், சமையலறைக்குள் நுழைந்த மனித இயந்திரப் பொம்மையாரின் படுபயங்கரமான தோற்றம் கண்டு கிலியடைந்தார். சமையலறைக்குள் நுழைந்த மனித இயந்திரப் பொம்மையாரோ வீர நடைபோட்டுப் பூனையார் அமர்ந்திருந்த திக்கை நோக்கிப் பயணம் செய்யத் தொடங்கினார். விநோதமான சத்தங்கள் பல எழுப்பி, தலையை அங்குமிங்கும் அசைத்து வரும் பொம்மையாரைப் படுபாதகமானதொரு இராட்சதன் என்றே நினைத்தார் கறுப்புக் குட்டிப் பூனையார்.

படுபாவியான அந்த இராட்சதனிடமிருந்து தப்பிப் பிழைத்திட எண்ணிய கறுப்புக் குட்டிப் பூனையார், மேசைமீது விரிக்கப்பட்டிருந்த துணியைப் பற்றிக் கொண்டே பாய்ந்து, மேசைமேல் தாவி ஏறிக் கொண்டார். மேசைத்துணியை கறுப்புக் குட்டிப்



பூனையார் ஆவேசமாகப் பற்றி இழுத்ததால், மேசையின் மேல் வைக்கப்பட்டிருந்த பீங்கான் தேனிர்க் கோப்பைகளும், அம்மாவுக்கு மிகவும் பிடித்தமான அந்த அழகான மண்கூசாவும், மேசைத் துணியுடன் சேர்ந்து நகர்ந்து, மேசையிலிருந்து தரையிலே விழுந்து, சுக்கல் சுக்கலாக் சிதறிப்போயின. குட்டிப் பூனையாருக்கோ பீங்கான் கோப்பைகளும், மண் கூசாவும் கீழே விழுந்து உடைந்து சிதறியதைப் பற்றித்துளி கவலையுமில்லை. அவர் கவலையெல்லாம் தன்னைநோக்கி விரைந்து வரும் அந்தப் பயங்கர இராட்சதனைப் பற்றியதே.

சமையலறைக்குள் வந்த அமுதனும் செல்வியும், கறுப்புக் குட்டிப் பூனையார் நடத்தி முடித்த கூத்தைக் கண்டார்கள். பூனையாரைக் குற்றம் சொல்லி என்ன பயன்? பொல்லாத அந்த இராட்சதனிடம் தப்பிப் பிழைக்கவல்லவோ மேசை மேல் தாவியேறி அவர் நின்றிருந்தார். பூனையாரின் கஷ்டத்தை அறிந்திடாத செல்வியோ, அவரின் மேல் பொல்லாத ஆத்திரம் கொண்டாள். ஓடிச் சென்று பூனையாரின் முதுகிலே பட்டென்று ஒரு அடி போட்டாள். செல்வியின் அடியினால் மேலும் திகிலுற்ற குட்டிப் பூனையார் பொத்தென்ற தரையில் குதித்திட்டார். குதித்தவர் வாலையம் கிளப்பிக் கொண்டே, அங்கிருந்து தலைதெறிக்கும் வேகத்தில் ஓட்டம் பிடித்தார். கண்கள் கலங்கி நின்ற அமுதனும், செல்வியும், அம்மாவுக்கு மிகவும் பிடித்தமான அந்த மண் கூசாவின் நொருங்கிய துண்டுகளை மெதுவாகப் பொறுக்கியெடுக்கத் தொடங்கினார்கள். □

## யன்னலில் தெரிந்ததொரு பயங்கர உருவம்.

அன்ற ஞாயிற்றுக்கிழமை. பள்ளி விடுமுறை ஆரம்பித்து நான்கு நாட்கள் கழிந்து விட்டன. வேலை விடயமாக அப்பா வேறு ஊருக்குப் போயிருந்ததால், வீட்டில் தனியாகத் தங்கும் நிலமை அமுதனுக்கும், அம்மாவுக்கும் ஏற்பட்டிருந்தது.

மாலையில் சூடாக அம்மா தயாரித்துக் கொடுத்த பால்த்தேனீரைக் குடித்தபடியே வானொலிப் பெட்டியில் பாட்டுக்கேட்டு இரசித்திருந்தான் அமுதன். ஞாயிற்றுக் கிழமைகளில் காலை பத்து மணிக்கு ஒலிபரப்பாகும் வானொலிமாமாவின் ''சிறுவர் பூங்காவும்'', மாலை நேரத்து ''பாட்டுக்குப் பாட்டும்'' அமுதனுக்கு மிகவும் பிடித்தமான வானொலி நிகழ்ச்சிகள். அமுதனைப் போலவே அம்மாவுக்கும் பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சி மிகவும் பிடித்தமானது. அதனால் சத்தத்தை சிறிது அதிகமாகவே வைக்கும்படி மகனைக் கேட்டுக் கொண்டு, சமையலறையில் புட்டு அவிக்கும் வேலையில் மூழ்கியிருந்தார் அம்மா.

அமுதனுக்கு புட்டும், இறைச்சிப் பொரியலும் மிகவும் பிடித்த உணவு வகைகள். புத்தம் புதிதாகத் துருவிய தேங்காய்ப் பூவை சேர்த்து அம்மா அவிக்கும் புட்டின் சுவை நிறைந்த மணம் வீட்டை விட்டு வெளிக்கிளம்பி தெருமுனைவரையிலும் பரவியிருக்கும். கருவேப்பிலை சேர்த்து, காரம் மிக்கதாக அம்மா

சமைக்கும் இறைச்சிப் பொரியலின் சுவையோ சொல்லி, எழுத முடியாதது.

அம்மா, தேங்காய் துருவும் சத்தம் கேட்டதும் வானொலிப் பெட்டியிலிருந்து விடுபட்டு சமையறையை வந்தடைந்தான் அமுதன். மேசையில் பொருத்தப்பட்டு, கைகளால் சுழற்றி இயக்கம் விதத்தில் வடிவமைக்கப் பட்டிருந்த அந்தத் தேங்காய் துருவும் கருவியை இயக்குவது கடினமில்லாததால், தேங்காய் துருவும் வேலையை அடிக்கடி அம்மாவிடமிருந்து பொறுப் பேற்றுக் கொள்வது அமுதனின் வழக்கம். அன்றும் அம்மாவிடமிருந்து அந்த வேலையைப் பெற்றுக் கொண்டான்.

மளமளவென்று சமையல் வேலைகளை அம்மா ஆரம்பித்தார். புட்டுப் பானையை ஒரு அடுப்பிலும் பெரியதொரு தாச்சியை மறு அடுப்பிலும் வைத்து சமையல் வேலையை முடித்தார் அம்மா. சமையல் முடிந்ததும் வீட்டின் கதவு, யன்னல்களையெல்லாம் இருவரும் கவனமாக மூடித்தாளிட்டார்கள். கண்ணாடி யன்னல்களின் திரைச்சீலைகளை அமுதன் கவனமாக மூடி வைத்தான். அன்று மழைமப்பாக இருந்ததால், வானம் கருமேகங்கள் சூழ்ந்து, இருண்டிருந்தது. நேரம் ஏழுமணியே ஆன போதிலும், நடுஇரவு போன்றதொரு பிரமை அன்று தென்பட்டது.

அம்மாவும், அமுதனும் இரவுச் சாப்பாட்டைச் சாப்பிட்டார்கள். புட்டையும், இறைச்சிப் பொரியலையும் நன்றாகப் பிசைந்து, ருசித்துச் சாப்பிட்டான் அமுதன்.

அம்மாவின் சமையலையும் வெகுவாகப் பாராட்டிக் கொண்டான். அவனது தலையைத் தடவிக் கொடுத்த அம்மாவுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை.

சாப்பிட்டு முடிந்ததும், தண்ணீர்க்குழாய்களை சரியாக மூடிவிட்டு, மீண்டும் ஒருமுறை கதவுகளையும் சரிபார்த்துவிட்டு ஒரு பத்திரிகையை எடுத்துக் கொண்டு ஓய்வாக நாற்காலியில் அமர்ந்து கொண்டார் அம்மா.

அம்மாவின் அருகிலேயே தரையில் சில வரை தாள்களையும், வண்ணப் பென்சில்களையும் எடுத்து வைத்துக் கொண்டு ஓவியங்கள் வரையத் தொடங்கினான் அமுதன். சிறிது நேரம் கழிந்தது. வரைதல் வேலையில் மும்முரமாக மூழ்கியிருந்த அமுதனின் பார்வை தற்செயலாக யன்னல்கள் மீது திரும்பியது.

ஆ! என்ன பயங்கரம். வெள்ளைநிற உருவம் ஒன்று யன்னலருகே நின்றிருப்பது மங்கலாக, யன்னல் கண்ணாடி வழியாகத் தெரிந்தது.

அந்த உருவம் இங்குமங்குமாக அமைதியின்றி அசைந்து கொண்டிருக்கிறது!

அமுதனின் இதயம் பயத்தால் படபடவென்ற டித்தது. கைகளோ வெடுவெடு வென நடுங்கத் தொடங்கின. நடுங்கும் கைகளால் மெதுவாக பத்திரிகையில் மூழ்கியிருந்த அம்மாவைத் தட்டி, அவரின் கவனத்தைக் கலைத்தான். தனது அன்புமகன்,

நடுங்கும் கரங்களால் சுட்டிக் காட்டிய திசையில் திரும்பிப் பார்த்த அம்மாவுக்கோ வயிற்றைக் கலக்கியது.

யன்னலின் கண்ணாடி வழியாகத் தெரிந்த அந்தப் பயங்கரமான உருவம், அமுதனை விடப் பலமடங்கு பயத்தை, அம்மாவுக்கு உண்டாக்கியது.

யன்னல் கண்ணாடிகள் மிகவும் தடிப்பானவை. அதனால் வெளியிலிருப்பவர்களுக்கும், வீட்டினுள்ளே இருப்பவர்களை பார்க்க இயலாது. பலமான இரும்புக் கம்பிகளால் யன்னல் பாதுகாப்பிடப்பட்டிருந்தது.

அது அம்மாவுக்கு சிறிது தைரியத்தை ஏற்படுத்தியது. ஆதரவுக்காக மகனின் கையைத் தாயாரும், தாயாரின் கைகளை மகனும் இறுகப் பற்றிக் கொண்டார்கள்.

"அமுதா! அப்பாவை எழுப்பிவிடு!" என்று அம்மா உரத்த குரலில் சத்தமிட்டுக் கூவினார். "விரைவாக அந்த இரும்புக் கம்பியை எடுத்து வாருங்கள், யாரோ ஒரு திருடன் யன்னலருகே நிற்கிறான்" என்று மறுமுறையும் சத்தமிட்டுச் சொன்னார்.

வீட்டில் அப்பாவும் இல்லை, இரும்புக் கம்பியும் இல்லை என்பது அவர்கள் இருவரையும் தவிர திருடனுக்குத் தெரியுமா என்ன? நிமிடங்கள் சில கழிந்தன. ஆனால் திருடனோ பயப்படுவதாகவே தெரியவில்லை. திமிராக அங்குமிங்கும் உலாவுவது

இன்னும் அல்லவா யன்னல் கண்ணாடி வழியாகத் தெரிகிறது!.

அம்மா, கையில் கிடைத்ததொரு மரக்கட்டையை தொப்பென்று தரையில் போட்டுச் சத்தம் எழுப்பினார். அமுதனும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, ஓடிச்சென்று, கதவுகள் எல்லாம் சரியாகத் தாளிடப் பட்டுள்ளனவா என்ற சரிபார்த்து வந்தான். அம்மா வீட்டினுள் எரிந்த மின்விளக்கை அணைத்து விட்டு, வீட்டின் வெளிப்புறமாகத் தோட்டத்திலிருந்த விளக்கை எரிய வைத்தார். மெதுவாகக் கதிரையை நகர்த்தி யன்னலருகே வைத்து, அதன் மேலேறி, யன்னலின் மேலாக இருந்த காற்றுத் துவாரத்தின் வழியாக எட்டி வெளியே பார்த்தார்.

எட்டிப் பார்த்தவர் எதுவுமே பேசாது மீண்டும் கதிரையில் அமர்ந்து, பொங்கிய சிரிப்பை அடக்க முடியாது குலுங்கிச் சிரிக்கத் தொடங்கினார். அமுதனுக்கோ எதுவுமே புரியவில்லை. சிரித்துக் கொண்டே யன்னல் கதவைத் திறந்து, அமுதனை அழைத்து வெளியே காட்டினார். அம்மாவின் அடக்க முடியாத சிரிப்பின் காரணம் அமுதனுக்குப் புரிய வெகு நேரமாகவில்லை. யன்னலின் தெரிந்த அந்தப் பயங்கரமான உருவத்தின் சொந்தக்காரன் வேறு யாருமல்ல, அந்த யன்னலின் அருகில் வெளியே அம்மா அமைத்திருந்த கொடியில் காய்ந்து கொண்டிருந்த அமுதனின் வெள்ளைநிறச் சட்டையே. □

## பூங்காவிலே ஒரு மாலைப்பொழுது.

அமுதனின் அம்மா அன்று மாலையில் அமுதன், எழில், செல்வியைக் கூட்டிக் கொண்டு பூங்காவுக்குச் சென்றுவர முடிவு செய்தார். கூடவே செல்வியின் தாயாரையும் வருமாறு அழைப்பு விடுத்தார். அம்மாவின் தீர்மானம் அமுதனுக்கு மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

அமுதனும், செல்வியும், எழிலும் பூங்காவுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய பொருட்களைப் பற்றிக் கலந்து பேசிக் கொண்டார்கள். அமுதன் தனது கால்பந்தையும், எழில் பொம்மை விமானத்தையும், செல்வி தனது பொம்மைப் பாப்பாவையும் எடுத்துச் செல்வதென முடிவாயிற்று.

மாலையிலே பூங்காவுக்கு எடுத்துச் செல்லு வதற்கான சிற்றுண்டிகளைத் தயாரிக்கும் வேலைகளில் அமுதனின் அம்மாவும், செல்வியின் தாயாரும் மூழ்கியிருந்தார்கள். அந்த வேலைகளைச் சிறிது நேரம் பார்த்துக் கொள்ளுமாறு செல்வியின் தாயாரிடம் கேட்டுக் கொண்டார். அம்மா போர்ட்டிக்கோவுக்கு விரைந்து வந்து தனது சின்னஞ்சிறிய மோட்டார் வண்டியை, மாலையில் பூங்காவிற்குச் செல்வதற்காகத் தயார் செய்தார். தனது மோட்டார் வண்டிமீது அம்மாவுக்கு மிகுந்த நம்பிக்கை யிருந்த போதிலும், இறுதி நேரத்தில் தகராறு செய்து விடக்கூடாது என்பதில் அக்கறையாயிருந்தார் அம்மா. மோட்டார் வண்டியில் போதுமான அளவில் எரிபொருள்

இருக்கிறதா என்று சரிபார்த்தார். கூடவே சில்லுகளில் காற்றின் அளவையும் பரிசோதித்தார். இறுதியாக ஒருமுறை வண்டியை ''ஸ்டார்ட்' செய்தும் பார்த்தார். அம்மாவுக்கு திருப்தி. வண்டியில் எந்தக் கோளாறுமின்றி, எந்த நிமிடத்திலும் கிளம்பிப் பறந்து சென்றிடத் தயாராயிருந்தது.

மோட்டார் வண்டியைப் பரிசோதித்து முடித்து, கைகளைக் கழுவிக் கொண்டு, மீண்டும் செல்வியின் தாயாருடன் இணைந்து சமையல் வேலைகளில் மூழ்கினார் அம்மா. சுவைமிகுந்த வடைகளும், வாய்ப்பன்களும் எண்ணெய்ச் சட்டியிலே முறுகிப் பொரிந்து கொண்டிருந்தன.

மாலை நான்கு மணியானது. உணவுப் பொருட்களை ஒரு கூடையில் வைத்து எடுத்துக் கொண்டார் அம்மா. அமுதன், செல்வி, எழில், செல்வியின் தாயார் எல்லாரையும் ஏற்றிக் கொண்டு, அம்மாவின் குட்டி மோட்டார் வண்டி, பூங்காவை நோக்கி விரைந்தது. பூங்காவின் முன்னால் மோட்டார் வண்டியைப் பாதுகாப்பான ஒரு இடமாகப் பார்த்து நிறுத்தினார் அம்மா. வண்டியிலிருந்து எல்லாரும் வெளியே இறங்கிக் கொண்டார்கள். உணவுப் பொருட்கள் நிரம்பிய கூடையை செல்வியின் தாயார் எடுத்துக் கொண்டார். சிறுவர்கள் மறவாது தங்கள் பொம்மைகளைக் கைளில் எடுத்து வைத்துக் கொண் டார்கள். கண்ணாடிகளை உயர்த்திக் கதவுகளை சாத்தி மூடினார் அம்மா. எல்லாரும் பூங்காவுக்குள் நுழைந்தார்கள். நுழைவாயிலிலே ''சுப்பிரமணியம்



பூங்கா'' என்றதொரு பெயர்ப்பலகை அழகாகத் தொங்கவிடப்பட்டிருந்தது.

பூங்காவினுள் நுழைந்த அமுதன், தனது கால்பந்தை புல்தரையில் போட்டுக் கால்களால் உதைத்தான். உருண்டோடிய பந்தின் பின்னால் துள்ளிக் குதித்தோடினான். அவனைப் பின்தொடர்ந்து கையிலே விமானப் பொம்மையுடன் ஓடிச் சென்றான் எழில். தனது பொம்மைப் பாப்பாவைப் பத்திரமாகக்

கட்டிப் பிடித்திருந்த செல்வி அவர்களிருவரையும் பின்தொடர்ந்து ஓடிச் சென்றாள். அமுதனின் அம்மாவும், செல்வியின் தாயாரும் பூங்காவின் மலர்கள் நிறைந்த நீர்த்தடாகத்தினருகே சென்று, கூடையைத் தரையில் வைத்து விட்டு, மெத்தென்ற புல் தரையிலே வசதியாக அமர்ந்து கொண்டார்கள். ''கற்களில் தடுக்கி விழுந்திடாமல் கவனமாக விளையாடுங்கள்!'' என்று தங்களின் பிள்ளைகளை எச்சரித்துவிட்டு ஊர்க்கதைகளில் மூழ்கிப் போனார்கள்.

அமுதன், எழில், செல்வியைப் போலவே இன்னும் ஏராளமான சிறுவர், சிறுமியர்கள் பூங்காவில் ஆனந்தமாக விளையாடி இருந்தார்கள். அந்தச் சிறுவர்களில் சிலர் ஊஞ்சலாடியும், வேறு சிலர் சுழலும் இராட்டினத்தில் ஏறி விளையாடியும் மகிழ்ந்திருந்தார்கள். பூங்காவின் மத்தியிலே அமைந்திருந்த ஆலமரத்தின் கீழ், சிறுமியர் கூட்டம் ஒன்று கெந்திப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தது. அவர்களினருகிலே சென்று நின்றிருந்த செல்வி, விளையாட்டை வேடிக்கை பார்த்திருந்தாள்.

மும்முரமாக வேடிக்கை பார்த்திருந்த செல்வி, தன்னருகே பொத்தென்று ஏதோ ஒரு பொருள் ஆலமரக் கிளைகளிலிருந்து விழுந்ததை உணர்ந்தாள். திடுக்கிட்டு, தன்னருகே புல்தரையில் வந்து விழுந்த பொருள் என்னவென்று பார்த்த செல்வி, கோபத்துடன் ஆலமரக்கிளைகளை நிமிர்ந்து பார்த்தாள். பொல்லாத காக்கையார் ஒருவரே, தரையில் வந்து விழுந்த எச்சத்தின் சொந்தக்காரர் என்பதையும் அறிந்து

கொண்டாள். புல்தரையில் கிடந்த சிறியதொரு கல்லை எடுத்துக் காக்கையார் மேல் வீசி எறிந்திடவும் நினைத்தாள். கல்லை எடுக்க கீழே குனியும் செல்வியின் பொல்லாத நோக்கத்தைப் புரிந்து கொண்ட புத்திசாலிக் காக்கையார், அங்கி ருந்து நழுவிப் பறந்தார். ஓடிச் சென்ற செல்வி, தாயாரின் அருகே சென்று அவரின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, நடந்ததையெல்லாம் சொன்னாள். சிறிது தவறியிருந்தால் குறும்புக் காக்கையார் இட்ட எச்சம் செல்வியின் தலையை அல்லவா பாழ்பண்ணி யிருக்கும்! செல்வி சொன்னதைக் கேட்ட அவளின் தாயார் அன்புடன் அவளுக்கு ஆறுதல் சொன்னார். அதற்குப் பின்னர் அங்கிருந்து நகர விரும்பாத செல்வியும், தனது தயாரின் அருகிலேயே அமர்ந்து, பொம்மைப் பாப்பாவை வைத்துக் கொண்டு விளையாடினாள். அந்தச் சின்னஞ்சிறுமியின் செயல்களைப் பார்த்து அமுதனின் அம்மாவுக்கு அடக்க முடியாத சிரிப்புப் பிறந்தது.

பூங்காவின் புல்தரையிலே பந்தாடிக் களைத்த அமுதனும், எழிலும் இப்போது விமான பொம்மையை வைத்து விளையாடத் தொடங்கினார்கள். அவர்கள் விளையாட்டிலே அங்கு நின்றிருந்த குட்டிச் சிறுவன் ஒருவனும் வந்து கலந்து கொண்டான். பூங்காவில் நிறைந்திருந்த மலர்ச் செடிகளில் மலர்ந்திருந்த வண்ண மலர்களின் வாசனை, அங்கு வீசிய சில்லென்ற குளிர்காற்றில் கலந்து பரவியது. அமுதன், எழிலுடன் சேர்ந்து விளையாடிக் கொண்டிருந்த குட்டிச் சிறுவன் அவர்களிடம் விடைபெற்றுத் தனது தாயாரிடம்

விரைந்தோடினான். ''ஆ! எனது மோட்டார் கார் பொம்மையையும் எடுத்து வந்திருக்கலாமே'', என்று அமுதன் சிறிது குறைபட்டுக் கொண்டான். பரவாயில்லை, அடுத்த முறை எடுத்து வருவோம் என்று அவனுக்கு எழில் ஆறுதலும் சொன்னான்.

விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களை திடீரென்று கேட்ட கூக்குரல் ஒன்று திடுக்கிடச் செய்தது. திடுக்கிட்டுத் திரும்பியவர்கள், இராட்டினத்தருகே கூட்டம் கூடியிருப்பதைக் கண்டார்கள். தங்களது விளையாட்டைப் பாதியில் நிறுத்தி விட்டு அமுதனும், எழிலும் இராட்டினத்தை நோக்கி விரைந்தோடினார்கள்.

வேகமாகச் சுழன்ற இராட்டினத்திலிருந்தும் தவறிக் கீழே விழுந்து விட்டான் சிறுவனொருவன். அடிபட்ட சிறுவனின் நெற்றியிலிருந்து இலேசாக இரத்தம் கசிந்தது. கூட்டத்தை விலக்கிக் கொண்டு அடிபட்ட சிறுவனிடம் விரைந்து சென்ற அமுதன், தனது சட்டைப் பையிலிருந்த தூய்மையான கைக்குட்டையை எடுத்துக் காயத்திற்குக் கட்டுப் போட்டான். பலமான அடி இல்லாததால், கட்டுப் போட்டதும் இரத்தம் கசிவது நின்று போனது. அதற்குள் அங்கு அலறிப் புடைத்துக் கொண்டு ஓடிவந்த, அடிபட்ட சிறுவனின் தாயார் அமுதனுக்கு நன்றி மிகச்சொல்லி, தனது மகனை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றார். அங்கு கூடியிருந்தவர்களும் அமுதனைப் பாராட்டினார்கள். எழிலும், செல்வியும், செல்வியின் தாயாரும் அமுதனின் முதுகில் தட்டிக் கொடுத்தார்கள். இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அமுதனின் அம்மாவுக்கு

அளவிட முடியாத ஆனந்தமும். பெருமையும் பொங்கின. அவர் அன்போடு தனது மகனைப் பார்த்துச் சிரித்தார்.

சிற்றுண்டியை அவசர அவசரமாகச் சாப்பிட்டு முடித்து விட்டு, அமுதனும் எழிலும் மீண்டும் விளையாடுவதற்காகப் பாய்ந்தோடினார்கள். இப்போது சிறுவர்களிருவரதும் கவனம் மீண்டும் பந்தாட்டத்தின் மேல் திரும்பியிருந்தது. தாயாரின் அருகிலேயே அமர்ந்து விளையாடிக் கொண்டிருந்த செல்வி, தாமரைத் தடாகத்தின் ஓரமாக அமர்ந்து, தடாகத்து நீரிலே மிதந்திருந்த தாமரைப் பூக்களையும், அங்கு நீந்தி விளையாடிய பொன்னிற மீன்களையும் வேடிக்கை பார்த்திருந்தாள்.

மணி ஏழாவதைப் பூங்காவின் ஒரு ஓரத்தில் அமைக்கப்பட்டிருந்த தூணில் பொருத்தப்பட்டிருந்த வட்டக் கடிகாரத்தின் மணியோசை அறிவித்தது. சிறுவர்களும் ஓடிவிளையாடியதில் களைப்படைந் திருந்தார்கள். எல்லாரும் வீடு திரும்பிட முடிவு செய்தார்கள். அம்மாவின் குட்டி மோட்டார் வண்டி அனைவரையும் ஏற்றிக் கொண்டு அழகான அந்தப் பூங்காவை விட்டு, வீடு நோக்கிச் செல்லும் பாதையிலே விரைந்து சென்றது.

□

# வீட்டுக்கு வந்த பரட்டைத்தலை மனிதர்



காலை பத்துமணி இருக்கும். வீட்டு முற்றத்திலே இருந்து விளையாடிக் கொண்டிருந்தான் அமுதன்.

முற்றத்துக் கதவருகே தெருவோரமாக மோட்டார் வண்டி ஒன்று வந்து நின்றது. வெள்ளை நிறமான பளபளவென்ற அந்த அழகிய வோக்ஸ்வகன் மோட்டார் காரிலிருந்து, உயரமான தோற்றம் கொண்ட ஒரு மனிதர் இறங்கினார். பென்னம்பெரிய வட்டக் கண்ணாடிகளை அணிந்திருந்த அவரது தலைமுடி பெரிய ஒரு காகக் கூட்டையே தலையில் கவிழ்த்து வைத்தது போல காட்சியளித்தது. காரிலிருந்து இறங்கியவர், வந்து முற்றத்துக் கதவை தட்டினார்.

ஓடிச்சென்ற அமுதன் வந்தவர் யாரென்று விசாரித்தான். அமுதனைப் பார்த்து அன்பாகச் சிரித்தார் அந்த உயரமான, பரட்டை முடியைக் கொண்ட மனிதர்.

"தம்பி, அப்பா வீட்டில் இருக்கிறாரா?", என்று மென்மையான குரலில் கேட்டார்.

அந்த மனிதரின் குரலும், அவரின் பேச்சும் அமுதனுக்கு ஒரு சில விநாடிகளிலேயே நன்கு பிடித்துக் கொண்டது. எனினும் அவரது அந்தப் பயங்கரமான பரட்டைத்தலை மட்டும் பிடிக்கவே இல்லை. யன்னல் வழியாக எட்டிப் பார்த்த அம்மா, வந்திருப்பவரை அடையாளம் கண்டு கொண்டார். வீட்டிலிருந்து விரைந்து வெளியே வந்து, மரியாதையுடன் முற்றத்துக் கதவைத் திறந்து விட்டார்.

‘‘உள்ளே வந்து அமருங்கள்’’, என்று வந்தவரை அன்புடன் வீட்டுக்குள் கூப்பிட்டார். அமுதனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. வந்தவர் யாரென்று உடனடியாகத் தெரிந்து கொள்ள விரும்பினான். உயரமான தோற்றம் கொண்ட அந்தப் பரட்டைத்தலை மனிதர், அமுதனையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரின் பார்வையிலிருந்து தப்பிட எண்ணிய அமுதன் அம்மாவின் பின்னால் மறைந்து கொண்டான்.

கிணற்றடியில் குளித்து முடித்த அப்பா விரைந்து அங்கு வந்தார். ‘‘வாருங்கள், வாருங்கள், வந்து அமருங்கள்’’, என்று மரியாதையுடன், வந்த மனிதரைக்



கூட்டிச் சென்று வீட்டு வரவேற்பறையிலே வசதியாக அமரச் செய்தார்.

''குட்டிப் பூனை போலிருந்த உமது மகன் இப்போது நன்றாய் வளர்ந்து விட்டான்'', என்று சிரித்துக் கொண்டே சொன்னார் அந்த உயரமான பரட்டை மனிதர். வரவேற்பு அறையின் வாசலிலே தொங்கிய திரைச்சீலைகளின் மறைவில் நின்று கொண்டு, வந்தவரை உன்னிப்பாக நோட்டம் விட்டுக் கொண்டிருந்த அமுதனின் செவிகளில் அவரது வார்த்தைகள் விழுந்தன. தன்னை ஒரு குட்டிப் பூனைக்கு அவர் ஒப்பிட்டுப் பேசுவதைக் கேட்ட அமுதனுக்குப் பொல்லாத கோபம் வந்தது. ''நானென்ன குட்டிப் பூனையா? எனக்கு வால் இருக்கிறதா? இல்லை நாலுகால்கள் தான் இருக் கிறதா,'' அவ்வாறு தன்னைத்தானே கேட்டுக் கொண்ட அமுதன், அந்த மனிதர் மேலிருந்த கோபத்தை, அருகில் வந்து. வாலால் தடவிக் கொடுத்து நின்ற கறுப்புக் குட்டிப் பூனையார் மேலே காட்டினான்.

அமுதன் விட்ட உதையில் பாய்ந்தோடி, வரவேற்பு அறையிலே அப்பா அமர்ந்திருந்த கதிரை யினடியிலே தஞ்சம் புகுந்து கொண்டார் கறுப்புக் குட்டிப் பூனையார். ''மியாவ்'' என்று ஒருமுறை கோபமாகக் கத்திவிட்டு, அடிபட்ட இடத்தை நாக்கால் நக்கி, வலியைப் போக்க முயன்றிருந்தார்.

''அமுதா! அமுதா! இங்கே வாப்பா'', என்று அன்புடன் அப்பா அழைக்கும் குரல் கேட்டது. வந்த மனிதரிடம் தன்னை அறிமுகப்படுத்திடவே அப்பா அழைக்கிறார் என்பது அமுதனுக்கு புரிந்து போனது. ''குட்டிப் பூனையார்'' என்று தன்னை வருணித்த அந்த மனிதரைப் பார்க்க அமுதன் விரும்பவில்லை. அவரின்



மீதும், அவரது பரட்டைத்தலையின் மீதும் பொல்லாத கோபம் அவனுக்குப் பிறந்திருந்தது.

அதற்குள் அந்த வழியாகத் தேனீர்க் கோப்பைகளை எடுத்துக் கொண்டு அம்மா வந்தார். வரவேற்பு அறைக்குள் நுழையமுயன்ற அம்மாவைத் தடுத்து நிறுத்தினான் அமுதன்.

திரைச்சீலைக்குள் ஒளிந்திருக்கும் அமுதனை அப்போதுதான் அம்மா கண்டு கொண்டார். ஒளித்திருந்து வேடிக்கைப் பார்க்கும் தனது மகனைப் பார்த்ததும் அம்மாவுக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்தது.

அம்மாவைப் பார்த்த அமுதன் ''அம்மா, அம்மா! வந்திருக்கும் இந்தப் பரட்டைத்தலை மனிதர் யார்?'', என்று ஆர்வத்துடன் கேட்டான். அமுதன் கேட்டது அம்மாவுக்கு மட்டுமல்ல, வரவேற்பு அறையிலே அமர்ந்திருக்கும் அப்பாவுக்கும், வந்திருந்த பரட்டைத் தலை மனிதருக்கும், ஏன் கறுப்புக் குட்டிப் பூனை யாருக்குமே தெட்டத்தெளிவாய்க் கேட்டது.

வந்திருந்த அந்தப் பரட்டைத்தலை மனிதரின் இடிபோன்ற சிரிப்புச் சத்தம், வீட்டு வரவேற்பு அறையையே அதிர வைத்தது. சங்கடத்துடன் அவரைப் பார்த்துச் சிரித்த அப்பா எழுந்து வந்து, அமுதனை அழைத்துக் கொண்டு வரவேற்பு அறைக்குள் சென்றார். அன்புடன் சிரித்திருந்த அந்தப் புதிய மனிதரின் அருகே கொண்டு போய் விட்டார்.

செல்லமாக அவனது முதுகிலே தட்டி, தான் எடுத்து வந்திருந்த இனிப்புப் பெட்டியையும் கொடுத்தவர், ‘‘கெட்டிக்காரச் சிறுவனப்பா நீ’’, என்று அன்புடன் சொன்னார்.

வந்திருந்தவர் தனது அன்புக்குரிய பேராசிரியர் என்று அவரை அமுதனுக்கு அறிமுகப்படுத்தினார் அப்பா. பேராசிரியரின் முன்னால் இப்போது பயபக்தியுடன் கைகளைக் கட்டிக் கொண்டு நின்றிருந்தான் அமுதன். வந்திருப்பவர் பெரிய ஆசிரியரல்லவா!.

□



மருத்துவன் மட்டுமல்ல; இலக்கியவாதி, மொழிபெயர்ப்பாளன். இது அற்புதமானது! சத்யனின் முயற்சிகள் முழுமையடைய எனது வாழ்த்துக்கள்.

*மருத்துவப்பீடத் தலைவர்,*
*பேராசிரியர். வி.அ..:புரோலொவ்*

ஐந்தாம் வருட மருத்துவமாணவன் யோகநாதன் சத்யனுக்கு, அவரது மருத்துவத் தொழில் மட்டுமல்லாது இலக்கியத்துறைப் பணியும் சிறப்பாய் அமைந்திட எனது இனிய வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

*மருத்துவபீடத்துணைத் தலைவர், பேராசிரியர் ஏ.ஆ.திரோவ்.*

திறமைமிக்க மருத்துவர்கள், அற்புதமான எழுத்தாளர்களாகத் திகழ்வது, ரஷ்ய வரலாற்றிலும் சரி, ஏனைய மொழிகளிலும் சரி நடந்த, நடந்துவரும் அற்புதமானதொரு நிகழ்வாகும். அந்தப் பாரம்பரியம் உண்மையாவதை இன்று என்கண்ணெதிரே காண முடிவது எனக்கு அளவிட முடியாத பெருமையையும், மகிழ்ச்சியையும் அள்ளித் தருகின்றது. சத்யனின் மருத்துவ, மற்றும் எழுத்துத்துறை ஈடுபாட்டுக்கு எனது வாழ்த்துக்கள் என்றும் என்றும் நிறைந்திருக்கும்.

*மருத்துவபீடத்துணைத்தலைவர், பேராசிரியர் லூ.பெ.கார்பென்கோ.*

அற்புதமான, சிறுவர்களுக்கான கதைகளை மொழிபெயர்த்தும் எழுதியும் வரும் ஆற்றல் நிறைந்த மாணவனொருவனுடன் அறிமுகமாகிப்பழகுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். நிச்சயமாக சத்யனின் எழுத்துக்கள் தரமிக்கவையாக சிறுவர்களின் மத்தியில் உலாவரும் என்பது எனது அசையாத நம்பிக்கை. அவரது எழுத்துக்கள் என்றும் அழியாது நின்று சிறுவர்களை மகிழ்விக்க எனது மனங்கனிந்த வாழ்த்துக்கள்.

*பிரஞ்சு மொழி ஆசிரியையும் அன்புமிக்க அயலவருமான யூலியா விக்டரவ்னா.*

எமது பல்கலைக்கழகத்தின் வாசல்கள் வழியாக திறமைமிக்க மருத்துவர்கள் மட்டுமன்றி, தமது கலாச்சாரத்தைச் சிதறவிடாத, பண்பாடுமிக்க திறமையான எழுத்தாளர்களும் வெளியேறப் போகிறார்கள் என்பதை நினைக்கும்போது பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

*குடிவரவு, குடியகல்வுத்துறை ஆணையாளர், திரு.யூ.வி.ராயவ்.*